விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 25 திங்கட்கிழமை (12.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 297

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்
# பிள்ளையான் நேற்று கைது

(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருமான பிள்ளையான் என்கின்ற சிவநேசத்துரை சந்திரகாந்தன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வு பிரிவுக்கு சென்றிருந்தபோதே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அவரை விசாரணைக்காக அழைத்துச் செல்வதற்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு குற்றப்புலனாய்வு பிரிவினர் பேத்தாளையிலுள்ள அவரது வீட்டிற்கு சென்றிருந்த போதிலும் அவர் அங்கு இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது. பின்னர் வழக்கறிஞர் ஊடாக குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னிலை 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலமைப்பு மாற்ற சட்டமூலம் விரைவில்

(கொழும்பு)

தற்போதைய அரசியலமைப்பில் மாற்றம் செய்வதற்காக நாடாளுமன்றை அரசியல் அமைப்புச் சபையாக மாற்றும் வகையில் அரசாங்கம் சட்டமூலமொன்றை சமர்ப்பிக்க உள்ளது.

1970-ம் ஆண்டு அரசியல் அமைப்பில 23ஆம் பக்கம் பார்க்க....

## இரு அமைச்சர்கள் கமரூனுடன் சந்திப்பு

(லண்டன்)

இலங்கையின்இரண்டு அமைச்சர்கள், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்துள்ளனர்.

இதன்போது இலங்கையின் தற்போதைய அரசியல் முன்னேற்றங்கள் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவா தீர்மானத்திற்கு நியூசிலாந்தும் ஆதரவு

(ஜெனிவா)

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு இணை ஆதரவு வழங்குவதாக நியூசிலாந்தும் அறிவித்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல்மற்றும்மனித உரிமை 24ஆம் பக்கம் பார்க்க....

## வனாந்தரங்களின் செறிவு 32 வீதமாக உயர்த்தப்படும்
### காடுவளர்ப்பு குறித்து ஜனாதிபதி கருத்து



(கொழும்பு)

நாட்டின் வனாந்தரங்களின் செறிவு 32 வீதமாக உயர்த்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொத்மலையில் காடு வளர்ப்பு குறித்த தேசிய நிகழ்வு நேற்று நடைபெற்ற போது அதில் பங்கேற்று அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் நாட்டின் 24ஆம் பக்கம் பார்க்க....

## நிபந்தனையின்றி கடன்வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

(கொழும்பு)

நிபந்தனைகள் இன்றி இலங்கைக்கு கடன் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் ஆகியோரிடையே பெரு நாட்டின் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா பிரேரணை தொடர்பில் சட்டத்தரணிகள் கருத்துக்கணிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பில் சட்டத்தரணிகள் மத்தியில் கருத்துக்கணிப்பொன்றை நடத்துவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தொடரின் போது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்றம் ஒன்றின் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் 24ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய வீட்டுத் திட்ட பயனாளிகளிடம் பாலியல் இலஞ்சம் கோரிய விவகாரம்
### இந்திய தூதரகம் விசாரணை ஆரம்பிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளிடம், பாலியல் இலஞ்சம் கோரப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக, இந்தியத்தூதரகமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர், கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில், இந்திய வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், வீடமைப்புத்திட்ட உதவியை வழங்குவதற்கு பாதிக்கப்பட்ட பெண்களிடம், பாலியல் இலஞ்சம் கோரியதாக குற்றச்சாட்டுகள் 24ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் அடுத்த ஆண்டுக்காக பாதுகாப்பு அமைச்சின் செலவுக்கான நிதி ஒதுக்கீட்டை, 306 பில்லியன் ரூபாயாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2016ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் படி, அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில், பாதுகாப்புச் செலவனமே அதிகளவு நிதியை வழங்கவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு, 257.6 பில்லியன் ரூபாய் மீண்டெழும் செலவினமாகவும், 48.9 பில்லியன் ரூபாய் மூலதனச் செலவினமாகவும் தேவைப்படுவதாக இந்தச் சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்திருந்த பாதுகாப்பு அமைச்சுக்கு, 2015ஆம் ஆண்டு, 285 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

ஆனால், அடுத்த ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு மாத்திரம் 306 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு இம்முறை நான்கு மடங்காக அதிகரிக்கப்படவுள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் முகாம் வரைபடங்களுடன் கொழும்புக்கு தப்பிய கருணா !
### 11 ஆண்டுகளின் பின் வெளிவரும் தகவல்



(கொழும்பு)

கிழக்கில் இருந்து தப்பி வந்த போது, கருணா எனப்படும், விநாயகமூர்த்தி முரளிதரன், ஒரு பயணப் பெட்டி நிறைய விடுதலைப் புலிகளின் முகாம்கள் அமைந்துள்ள வரைபடங்களை எடுத்து வந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா தகவல் வெளியிட்டுள்ளார்.

2004ஆம் ஆண்டு விடுதலைப புலிகளிடம் இருந்து கருணாவை காப்பாற்றி, கொழும்புக்குப் பாதுகாப்பாக அழைத் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ரணிலுக்காக அங்கபிரதட்சணம்



(கொழும்பு)

முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை அங்கபிரதட்சணம செய்து நேர்த்திக் கடனை நிறைவேற்றியுள்ளார்.

சிலாபம் ஆடிகமம் பிரதேசத்தை சேர்ந்த 33 வயதான சனத் குமார என்ற இந்த முன்னாள் இராணுவ வீரர், பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வர வேண்டும் என்று சியம்பலாகஸ்ஹேன பகுதியில் உள்ள அய்ய நாயக்க கோயிலில் நேர்ந்து கொண்டிருந்தார்.

இதனடிப்படையில், நேற்று முன்தினம் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை அங்கபிரதட்சணமாக ஆலயத்திற்கு சென்று தனது நேர்த்திக் கடனை அவர் நிறைவேற்றியுள்ளார். (செ-12)

## தேசிய விசாரணைப் பொறிமுறைக்கு தென்னாபிரிக்காவிடம் உதவி!

போர்க் காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக ஸ்தாபிக்கப்படும் தேசிய விசாரணைப பொறிமுறையிலான நடவடிக்கைக்கு தென்னாபிரிக்காவின் உதவி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போரின் போது நடந்த சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கடந்த 2 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த தேசிய விசாரணை பொறிமுறை ஏற்படுத்தப்பட உள்ளது.

இதற்கு முன்னர் மனித உரிமை மீறல்கள தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சில நாடுகள் தொடர்ந்தும் யோசனைகளை கொண்டு வந்தன.

இந்த நிலையில், இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தேசிய விசாரணைக்கு இணக்கம் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பெரும்பாலான தமிழ் கட்சிகளும் தேசிய விசாரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அதேவேளை அண்மையில் ஜப்பானுக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானிய பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது தேசிய விசாரணை பொறிமுறையை ஏற்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதற்கு தென்னாபிரிக்காவின் உதவியை பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் பிரதமர் இதன போது கூறியுள்ளார். (செ-12)

## தனுஷ்கோடி - தலைமன்னார் பாலம்; இலங்கை அரசுக்கு இந்தியா கடிதம்

(கொழும்பு)

தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே கடலில் பாலம் அமைப்பது தொடர்பாக இலங்கை அரசிடம் கருத்து அறிய இந்திய மத்திய அரசு கடிதம் அனுப்பியுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் தென் கோடியில் உள்ள தனுஷ்கோடி அரிச்சல்முனை முதல் தலைமன்னார் வரை 31 கி.மீ. தூரம் கடல் மீது பாலம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஆசிய வங்கியிடம் 22 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்க திட்டமிட்டுள்ளது.

இப்பாலம் அமைந்தால் இந்தியா, இலங்கை இடையே வர்த்தகம், சுற்றுலா, இரு நாடு நட்புறவு மேம்படும். மேலும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் தெற்காசிய நாடுகள் வரிசையில் சீனாவுக்கு நிகராக வலுவான நாடாக இந்தியா திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாலம் அமைய உள்ள சுமார் 20 கி.மீ. தூர கடல பகுதி இலங்கை வசம் உள்ளது. பாலம் அமையும் பகுதியில் 22 மணல் தீடையும் (7 தீடைகள் மட்டுமே இந்தியாவுக்கு சொந்தம்), அதைச் சுற்றி அதிக கடல் நீரோட்டமும் இருக்கும்.

எனவே, பாலம் அமைக்கும் சாத்திய கூறுகள், பிரச்சினைகள் மற்றும் இலங்கையின் ஒத்துழைப்பு குறித்து, இலங்கைக்கு மத்திய தரைவழி போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி கடிதம் அனுப்பி, கருத்து கேட்கவுள்ளார்.

இதுகுறித்து பா.ஜ.க. தேசிய பொதுகுழு உறுப்பினர் முரளீதரன் கூறியதாவது,

பல ஆயிரம் ஆண்டுக்கு முன் ஸ்ரீ ராமர் தனுஷ்கோடி, இலங்கைக்கு பாலம் கட்டியதை நிரூபிக்கும் விதமாக, அவ்வழியாக தரை பாலம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பு அவசியம் என்பதால் கருத்துகளை அறிய, மத்திய அமைச்சர் நிதின் கட்காரி கடிதம் அனுப்பியுள்ளார்.

விரைவில் மத்திய அரசு உயர் அதிகாரிகள் குழு தனுஷ்கோடியில் ஆய்வு நடத்த உள்ளதாக மத்திய தரைவழி போக்குவரத்து இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தேசிய வீதி, பாலம் நிறைவேறினால் 51 ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட தனுஷ்கோடி புத்துயிர் பெற்று தமிழகத்தில் வர்த்தகம் அசுர வளர்ச்சி அடையும் என தெரிவித்தார். (செ-12)

## 7 சந்தேக நபர்கள் ஆயுதங்களுடன் கைது

(அநுராதபுரம்)

பல கொள்ளைச் சம்பவங்களுக்கு தொடர்புடைய 7 பேர் மதவாச்சி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கைக்குண்டுகள், 6 கூர்மையான ஆயுதங்கள், 10 உலோக குழாய்கள் மற்றும் 6 போலி அடையாள அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன.

பணம் கொள்ளை, நகை கடத்தல் மற்றும் காசோலைகளில் ஊழல் சம்பவங்கள் பலவற்றில இவர்கள் தொடர்புபட்டிருப்பதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் வழங்கிய தகவல்களுக்கமைய கொள்ளையடித்த பொருட்கள் மற்றும் பணத்தை எதிர்வரும் நாட்களில் மீட்கவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ-12)

## வாளுடன் நின்ற இளைஞன் கைது

பொது இடத்தில் வாளுடன் நின்ற இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

குறித்த இடத்தில் வாள்கள், இரும்புக் கம்பிகள், கொட்டன்களுடன் ஆறு பேர் கொண்ட இளைஞர் குழு பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் நின்றுள்ளது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த நெல்லியடி பொலிஸார் இளைஞர்களை கைது செய்ய முற்பட்ட வேளை அதில் ஐந்து இளைஞர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அப்போது அல்வாயைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவரை மடக்கிய பொலிஸார் அவரை கைது செய்தனர். கைது செய்த இளைஞனிடமிருந்து வாள் ஒன்றும் இரும்புக் கம்பி ஒன்றினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12-60)

## க.பொ.த உயர்தரப் பரீட்சையின் செயன்முறைப் பரீட்சைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் செயன்முறை பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

மனையியல், நடனம், நாடகமும் அரங்கியலும், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு அமைவான செயன்முறை பரீட்சைகளே நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் அனுமதிப் பத்திரங்களை பாடசாலை அதிபர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த பரீட்சைகள் தொடர்பிலான தகவல்களை 0112 784 208 அல்லது 0112 784 537 மற்றும் 0113 188 350 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (செ-12)

காணி விற்பனைக்கு உண்டு
அச்சுவேலி நவக்கிரி விளாத்தியடியில் 14 பரப்புக் கல்லுக்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை
தொடர்புகளுக்கு :-
0768382614
0779396578
(2032)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சிதம்பரக் கல்லூரி
வல்வெட்டித்துறை
மாணவன்
செல்வன் சண்முகதாஸ் கீர்த்தி
5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில்
181 புள்ளிகள் பெற்று
சித்தியடைந்து கல்லூரிக்கும்,
ஆதிகோவிலடிக்கும்
பெருமை சேர்த்துள்ளார்.
இவர் இன்னும் பல கலைகளையும்,
பட்டங்களையும் பெற்று பெருவாழ்வு
வாழ்க என பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
(2020)
ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.
பாராட்டி வாழ்த்துவோர் :
ஆதிகோவிலடி
மக்கள்.

கண்ணீர் அஞ்சலி
அமரர் வேலுப்பிள்ளை மகாலிங்கம் [ தமிழ் ஐயா]
பிறப்பு 16.01.1941
இறப்பு 10.10.2015

கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் ஸ்தாபகரும் எமது இல்லக் குழந்தைகளுக்கு ஆரம்ப காலத்தில் தமிழ்க் கல்வியைப் போதித்த தமிழ்க் கல்விமானான தமிழ் ஐயா என்று அழைக்கப்படும் வே.மகாலிங்கம் அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.
(C-2440)
கிளிநொச்சியின் விஞ்ஞான, கணித கல்வி வளர்ச்சியிலும் சமய வளர்ச்சியிலும் இவரது பங்கு அளப்பரியது. இவரது இழப்பு தாங்கமுடியாதது. இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எமது இல்லத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இங்ஙனம்
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

# போர்க் குற்றவாளிகளுக்காக வாதாடும் சட்டத்தரணிகளுக்கு அரசு கட்டணம் வழங்குமாம்!



அமைச்சர் சம்பிக்க ரணவக்க வாக்குறுதி

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய இலங்கை அரசாங்கம் ஏற்படுத்த போகும் தேசிய விசாரணை பொறிமுறையின் கீழ் போர் குற்றம் சுமத்தப்படும் நபர்களின் சட்டத்தரணிகளுக்கான கட்டணங்களை அரசாங்கமே செலுத்தவுள்ளது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க, இராணுவ அதிகாரிகள் சிலரிடம் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.**

ஜெனிவா அறிக்கை சம்பந்தமாக இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரத்தை ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் வழங்கியுள்ளனர்.

இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் அவர்களுக்குகாக மேற்கொள்ளப் போகும் விடயங்கள் குறித்து அமைச்சர் ரணவகக, பல முறை இராணுவத்தினருக்கு தெளிவுப்படுத்தியுள்ளார். தேசிய விசாரணை பொறிமுறை கலப்பு பொறிமுறை அல்ல என அமைச்சர் இராணுவ அதிகாரிகளிடம் கூறியுள்ளார். எனினும் இந்த பொறிமுறையை ஏற்றுக்கொளளக் கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்காக வெளிநாட்டு நிபுணர்களின் உதவி மாத்திரம் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவிடம் குற்றங்களை ஏற்று வாக்குமூலம் வழங்கும் நபர்களுக்கு தண்டனை வழங்கப்படமாட்டாது என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மத தலைவர்கள் போன்ற கருணையுள்ளவர்களை கொணடிருக்கும் எனவும் மன்னிப்பு வழங்கும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 4 சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி வழங்குவார்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்ட நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களுக்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை செவ்வாய்க்கிழமை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகளவான அதிகாரங்களுடன் கூடிய இலஞ்சம் மற்றும்மோசடி தடுப்பு ஆணைக்குழு உட்பட 4 ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட உள்ளன. அதில் இலஞ்சம் மற்றும் மோசடி தடுப்பு ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பீ.பி. வீரசூரிய நியமிக்கப்படவுள்ளார். .

இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தி வழக்கு தொடரும் அதிகாரம் 19வது அரசியலமைப்புத்திருத்தச்சட்டத்தின மூலம் இந்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் குணசேன தேனபது மற்றும் அதன் உறுப்பினர்களாக, ஆணையாளர்களாக ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா மற்றும் சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் தொடர்பான பரிசோதகர் பீ.எச். மானதுங்க நியமிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

மேலும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் தலைவராக பொது நிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளர் பீ. திஸாநாயக்க நியமிக்கப்படவுள்ளார். (இ-7)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகள் கையளிப்பு

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மஸ்கெலியா மொக்கா மிட்லோயின் தோட்டத்தில் உள்ள 22 குடும்பங்களுக்கு அமைச்சர் பழனி திகாம்பரம் வீட்டு உறுதிப்பத்திரங்களை கையளித்தார்.

புதிய அரசாங்கத்தில் முதன்முறையாக மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு அமைச்சர் திகாம்பரம் வழங்கிய தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் முதலாவது வேலைத்திட்டமாக இந்த வீடமைப்பு திட்டம் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு கையளிக்கப்பட்டது.

சகல வசதிகளையும்கொண்ட 7 பேர்ச் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட மக்களிடம் எவ்வித பணமும் அறவிடாமல் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சுமார் பன்னிரண்டு இலட்சம் ரூபா செலவில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனி வீடுகளாக நிரமாணிக்கப்பட்டுள்ளன. ஒரு வீட்டில் சமையலறை, விறாந்தை, 2 படுக்கையறைகள், குளியலறை, மலசலகூடம் போன்ற உட்கட்டமைபபு வசதியுடன் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுபபினர் எம்.திலகராஜ், மலைநாட்டு புதிய கிராமம் மற்றும் சமூக அபிவிருத்தி செயலாளர், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், சரஸ்வதி சிவகுரு மற்றும் பெருந்தோட்ட மனித வள பொறுப்பின் தலைவர் வி.புத்திரசிகாமணி பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (இ-7)

## இன்னும் விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்கவும்

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவத்தின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ள பொது மக்களின் 615 ஏக்கர் காணிகளை மீண்டும் உரிமையாளர்களிடம் கையளித்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எமது மக்கள் சார்பாக தனது நன்றியைத் தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, மேலும் விடுவிக்கப்பட வேண்டிய பொது மக்களது காணிகளையும், கட்டடங்களையும், கடற்தொழில்சார் துறை முகங்களையும் படிப்படியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன் வைத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, வலிகாமம் வடக்கு உட்பட வடக்கு மாகாணத்தில் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள், கட்டடங்கள், கடற்தொழில் சார் துறைமுகங்கள் என்பன மேலும் விடுவிக்கப்படாதிருக்கும் நிலையில், அம்மக்கள் தொடர்ந்து பல்வேறு இடர்பாடுகளுக்கு ஆளாகி வருகின்றார்கள். அத்துடன், ஏற்கனவே மீளக் குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு போதிய அடிப்படை மற்றும் வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் அரசு அவதானங்களைச் செலுத்த வேண்டியுள்ளது.

எனவே இவ்விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கைத் தமிழர் முகாம் மாணவர்கள் மூவர் மாயம்

பாடசாலைக்குச் சென்ற இலங்கை தமிழர் முகாமைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் வீடு திரும்பாததால் பெற்றோர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள தாரமங்கலம் பவளத்தானூரிலுள்ள இலங்கை தமிழர் முகாமை சேர்ந்த மாணவர்களான ஆறுமுகம் மாதவன் (வயது-14), அன்ரனி பவித்ரன் (வயது -1 5), பிரபாகரன் திலீப்கரன் (வயது- 16) ஆகியோரே காணாமற் போயுள்ளனர்.

காலையில் வீட்டை விட்டு புறப்பட்டுச் சென்ற இவர்கள் மாலையில் பாடசாலை முடிந்தும் வீடு திரும்பவில்லை. பாடசாலைக்குச் சென்று பெற்றோர் விசாரித்தபோது மூவரும் பாடசலைக்குச் செல்லாதது தெரியவந்துள்ளது.

இரவு 9.30 மணி வரை மாணவர்கள் வீட்டுக்கு வராததால் பெற்றோர் தாரமங்கலம் பொலிஸில் புகார் செய்தனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சோமவன்ச -வீரவன்ச சந்தித்துப் பேச திட்டம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் முன்னாள தலைவர் சோமவன்ச அமரசிங்கவும், கட்சியின் முன்னாள் பிரசார செயலாள ரும், தேசிய சுதந்திர முன்னணியன் தலைவருமான விமல் வீரவன்சவும் சந்திப்பு ஒன்றை நடததவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் யோசனைத் திட்டம் மற்றும் இலங்கையை சிக்க வைக் கும் காலனித்துவ ஆட்சியாளர்களின் முயற்சி குறித்து இருவரும் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் விமல் வீரவன்சவை தாம் சந்திக்க உள்ள தாக, சோமவன்ச அமரசிங்க சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை தொடர்ச் சியாக முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானத்திற்கு தேசிய சுதந்திர முன்னணி எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது. நானும் இந்த தீர்மானத் தினை எதிர்த்து போராடுகின்றேன்.

ஜெனிவா தீர்மானத்தின் ஊடாக நாடு பிளவடையலாம், தேசிய பாதுகாப் பிற்கு அச்சுறுத்தல் ஏற்படலாம்.

இதனால் தீர்மானத்திற்கு எதிர்ப்பை வெளியிடுகின்றோம் என சோம வன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியிலிருந்து விமல வீரவன்ச வெளியேறியதனைத் தொடர்ந்து சோமவன்ச அமரசிங்க வும் விமல் வீரவன்சவும் கடுமை யான பகையைக் கொண்டிருந்ததுடன் தொடர்புகள் எதுவும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கஞ்சா கடத்தல் முயற்சி முறியடிப்பு

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து, இலங்கைக்கு கஞ்சா போதைப் பொருள் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக கஞ்சா போதைப்பொருள் கடத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரின் வீட்டிலிருந்து 90 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா மீட்கப் பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பேரை தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று பேரை கைது செய்ய தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சம்பூரில் 60 வீதமான குடும்பங்களுக்கு இந்திய வீடுகளைப் பெறத் தகுதியில்லை

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் இந்திய உதவி வீடுகளை பெறுவதற்கு தெரிவான குடும்பங்களில் 60 வீதமான குடும்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

வீடுகளை பெற விதிக்கப் பட்டுள்ள தகுதிகள் மற்றும் புள்ளிகளின் அடிப்படையிலேயே இந்த குடும்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பூர்பிரதேசத்தில் அதிகாரபூர்வமாக 344 குடும்பங்கள் 9 ஆண்டுகளின் பின்னர் தற்காலிக குடியிருப்புகளை அமைத்து மீளக்குடியேறியுள்ளன.

அப்பகுதியில் அரச முதலீட்டு வலயத்திற்கு என சுவீகரிக்கப்பட்டு பின்னர் முதல் தொகுதியாக விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் மட்டும் 204 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளன.

இந்த குடும்பங்களே முன்னுரிமை அடிப்படையில் இந்திய உதவி வீடுகளுக்கு பிரதேச செயலக அதிகாரிகளினால் தெரிவாகியிருந்தன.

இந்திய உதவி வீடமைப்பு திட்டத்தை செயற்படுத்தும் யு. என். ஹபிட்டட் வெளியிட்டுள்ள பட்டியலில் 84 குடும்பங்கள் மட்டுமே அந்த வீடுகளைப் பெற தகுதி பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இது பற்றிய கூட்டமொன்றில் யு. என் ஹபிட்டட் உட்பட அதிகாரிகளினால் மக்களுக்கு அறிவிக்கப்பட்ட போது அனைத்து குடும்பங்களும் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து, நிபந்தனைகள் அல்லது புள்ளிகள் தொடர்பில் தங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் வலியுறுத்தியதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரான குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவித்தார்.

2008, 2009ஆம் ஆண்டுகளின் மதிப்பீடுகளின் அடிப்படையில் தற்போது வழங்கப்படுகின்ற 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தொகை போதுமானதாக இல்லை என்பதால் அதனை குறைந்தபட்சம் 7 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதில் இந்திய அரசு கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் மக்கள் அதிகாரிகளிடம் முன் வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இறுதி ஓவரில் ரபாடா அசத்தல்: கான்பூர் திரில்லரில் தென்னாபிரிக்கா வெற்றி

## ரோகித்தின் சதம் வீணானது



ரபடாவின் கரங்கள் இறுதி ஓவரில் அற்புதங்கள் காட்ட கான்பூர் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 ஓட்டங்களால் திரில வெற்றி பெற்றது.

கடின வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு தனது துடுப்பாட்டம் மூலம் கைகொடுத்த ரோகித்தின் அற்புதமான சதம் (150) வீணானது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கு பற்றுகிறது.

இத்தொடரின் முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று கான்பூரில் நடைபெற்றது. போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு டிவில்லியர்ஸ்(104), பெஹார்டின்(35) இணை இறுதி 5 ஓவர்களில் காட்டிய அதிரடியான துடுப்பாட்டம் மூலம் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களை எடுத்தது.

ஒரு கட்டத்தில் தென்னாபிரிக்க அணி 270 அல்லது அதிகம் போனால் 280 ஓட்டங்களையே எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இந்திய வேக பந்து வீச்சாளர்களின் அசிரத்தையான இறுதி ஓவர்களால் கடைசி 4.5 ஓவர்களில் தென்னாபிரிக்கா 65 ஓட்டங்களை எடுத்ததுடன், அஸ்வின் 4.4 ஓவர்கள் மட்டுமே வீசியதும் பின்னடைவுக்குக் காரணமாக அமைந்தது.

304 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 30 ஓவர்களில் 176/1 என்று சிறப்பான நிலையில் இருந்தது. அதன்போது வெற்றிக்கு ஒரு ஓவருக்குத் 6.6 ஓட்டங்களே தேவையானதாக இருந்தது. எனினும் இந்திய அணி தோல்வியடைந்தது புதிராத புதிராகவே உள்ளது.

தவான் 23 ஓட்டங்களுடன் விரைவாக வெளியேறிய போதிலும், 2ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக ஜோடி சேர்ந்த ரோகித் - ரஹானே இணை அற்புதமாக துடுப்பெடுத்தாடியது.

ரோகித் அடித்து ஆட, மறுமுனையில் ரஹானே நிதானத்தைக் கடைபிடித்தார். இவர்களின் இவ்வாறான ஆட்டத்தால் இந்தியாவின் வெற்றி மிக அருகாமையே இருந்தது.

இந்நிலையில் 2ஆவது விக்கெட்டுக்காக 149 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்த வேளை ரஹானே 60 ஓட்டங்களுடன் பெஹார்டீனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹோலி களமிறங்கினார். மறுமுனையில் ரோகித், பெஹார்டீன் பந்தில் மிட்-விக்கெட் திசையில் பவுண்டரி அடித்து தனது 8ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

18 பந்துகளில் 11 ஓட்டங்களையே எடுத்த விராட் ஹோலி, 40ஆவது ஓவரில் ஸ்ரெய்னின் பந்தில் ஆட்டமிழக்க இந்திய அணிக்கு நெருக்கடி பற்றிக்கொண்டது.

அடுத்து தோனி களமிறங்கி சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ரோகித்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார். இந்நிலையில் ரோகித் 132 பந்துகளில் 13 பவுண்டரிகள், 06 சிக்ஸர்களுடன் 150 ஓட்டங்களை பூர்த்தி செய்தார்.

தோனி - ரோகித் இடையே அரைசத கூட்டணி அமைந்தாலும் தோனியின் பங்களிப்பு வெறும் 8 ஓட்டங்களே. இதற்கு அவர் 14 பந்துகளை எடுத்துக் கொண்டார்.

தனது முன்னைய ஓவர்களில் ஓட்டங்களை வாரி வழங்கிய தாஹீர் 47ஆவது ஓவரில் இந்தியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். அந்த ஓவரின்முதல்பந்தில் ரோகித்(150), 5ஆவது பந்தில் ரெய்னா (03) என்ற இரு திமிங்கலங்களை அடுத்தடுத்து வெளியேற்றி தென்னாபிரிக்க அணிக்கு வெற்றிப் பாதையை வழியமைத்தார்.

இதனால் போட்டி எப்பக்கமும் சாயும் என்ற நிலைக்கு வந்தது. ஆனால் தோனி பினிஷராயிற்றே, முடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அவர் வழக்கத்துக்கு மாறாக அதிரடி காட்டாமல் நிறைய இரட்டை ஓட்டங்களை மூச்சிறைக்க ஓடி எடுத்தார். பந்தை இவர் அடித்து நொறுக்கினால் மைதானம் பத்



தாது. ஆனால் இவர் 2 ஓட்டங்களுக்கு பேய் மாதிரி ஓடியது பார்க்க பரிதாபமாக இருந்தது. தான் எதிர்கொண்ட 25ஆவது பந்தில்தான் தன்னுடைய ஒரேயொரு பவுண்டரியையும் அடித்தார்.

ஸ்ரெய்ன் வீசிய அந்த ஓவரில் 11 ஓட்டங்கள் வர கடைசி ஓவரில் இந்தியாவின் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவையாகின. இது தோனியால் முடியாததா? என்றே ரசிகர்கள் ஆவலுடன் ஆரவாரம் செய்தனர்.

எனினும் இறுதி ஓவரை வீசிய 20 வயதான ரபாடா 4ஆவது பந்தில் சென்னையின் சிங்கம், இந்தியாவின் தங்கம் தோனியை 30 ஓட்டங்களுடன் வெளியேற்ற இந்தியாவும் தோல்வியை தழுவியது.

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களை எடுத்து 5 ஓட்டங்களால் போராடித் தோற்றது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் ரபாடா, தாஹீர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டி வில்லியர்ஸ் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது போட்டி வரும் 14ஆம் திகதி பகலிரவு ஆட்டமாக இந்தூரில் ஆரம்பமாகிறது.

## கடும் போராட்டத்துக்கு பின் சீன ஓபனை கைப்பற்றியது சானியா - ஹிங்கிஸ் இணை




கடும் போராட்டதுக்கு பிறகு பீஜிங்கில் நடைபெற்ற சீன ஓபன் டென்னிஸில் சானியா - ஹிங்கிஸ் இணை சம்பியனானது.

சீன ஓபன் டென்னிஸ் போட்டிகள் பீஜிங் நகரில் கடந்த 27ஆம் திகதி முதல் இம்மாதம் 11 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் உலகத் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் சானியா (இந்தியா)- ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி, தைவானின் ஹயோ சிங்-யங் ஜான் ஜோடியை எதிர்கொண்டது.

இதில் சானியா ஜோடி கடும் போராட்டத்துக்கு பின் 6-7, 6-1, 10-8 என வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

சமீப காலமாக எளிதாக வெற்றி பெற்று வந்த சானியா ஜோடிக்கு இந்த தைவான் ஜோடி கடும் நெருக்கடி கொடுத்தது. முதல் செட்டில் இரண்டு ஜோடியும் மாறிமாறி புள்ளிகள் பெற்றன. இதனால் முதல் செட் பரபரப்பாக சென்றது. இறுதியில் தைவான் ஜோடி 7-6 எனக் முதல் செட்டை கைப்பற்றியது.

இதனால் 2-வது செட்டில் சானியா - ஹிங்கிஸ் ஜோடி ஆக்ரோஷமாக விளையாடி 6-1 என எளிதில் கைப்பற்றியது. இதனால் சம்பியன் பட்டத்தை நிர்ணயிக்கும் 3ஆவது செட்டில் தைவான் ஜோடி மீண்டும் நெருக்கடி கொடுத்தது.

இதனால் இந்த செட் நீண்டு கொண்டே சென்றது. இறுதியில் சானியா - ஹிங்கிஸ் ஜோடி 10:8 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 2:1 என்ற கணக்கில் கிண்ணத்தை கைப்பற்றியது.

## ஐ.எஸ்.எல் கால்பந்து: சென்னை முதல் வெற்றி

மென்டோசா பொழிந்த கோல் மழையால் ஐ.எஸ்.எல் தொடரில் சென்னையின் எப்.சி அணி முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

ஐ.எஸ்.எல்.கால்பந்து லீக் தொடரின் நேற்றைய 8ஆவது லீக் போட்டியில் சென்னை - கோவா அணிகள் மோதின. ஏற்கெனவே முடிந்த இரண்டு போட்டியிலும் சென்னை தோல்வியடைந்ததால், இந்த போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் களம் இறங்கியது.

தொடக்கம் முதலே பந்து சென்னை வீரர்கள் கைவசமே இருந்தது. ஆட்டம் தொடங்கிய 10ஆவது நிமிடத்தில் சென்னை அணி முதல் கோலை அடித்தது. இந்த கோலை மென்டோசா அடித்தார். முதல் பாதி நேரம் முடிவதற்கு சற்று முன் 43ஆவது நிமிடத்தில சென்னை அணி மேலும் ஒரு கோல் அடித்தது. இந்த கோலை சென்னை அணியின் தலைவர் இலானோ அடித்தார்.

2ஆவது பாதி நேரத்திலும் சென்னை வீரர்கள் கைவசமே பந்து இருந்தது. 63 ஆவது நிமிடத்தில் மென்டோசா மேலும் ஒரு கோல் அடித்தார். அத்துடன் அவரது கோல் தாகம் நிற்கவில்லை. 75ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்தார். இதனால் சென்னை அணி 4:0 என முன்னிலை பெற்றது.

அதன்பின் இரண்டு அணி வீரர்களும் கோல் அடிக்காததால் சென்னை அணி 4:0 என கோவாவை வீழ்த்தி முதல் வெற்றியை ருசித்தது. மெண்டோசா மூன்று கோல்கள் அடித்து முத்திரை பதித்தார்.

## அருணோதய மாணவன் சாதனை

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெறும் தடகள விளையாட்டுப் போட்டிகளில் அளவெட்டி அருணோதய கல்லூரி மாணவன் என்.நெப்தெலி ஜொய்சன் கடந்த பதின்மூன்று வருட சாதனையை முறியடித்து தேசிய மட்டத்தில் புதிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

19 வயதுப் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் இவர் நான்கு மீற்றர் 21 சென்ரி மீற்றர் உயரம் பாய்ந்து இந்த புதிய சாதனையை பாடசாலைகள் மட்டத்தில் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 2002-ம் ஆண்டு மாதம்பை சேனநாயக்க மத்திய மகா வித்தியாலய வீரன் மதுரங்கா பொன்னந்துவினால் நான்கு மீற்றர் தூரம் கோலூன்றிப் பாய்ந்து ஏற்படுத்திய சாதனையை இம்முறை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் நெப்தெலி



ஜோன்சன் முறியடித்து புதிய சாதனையை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழ் மக்களுக்கு இடையூறு விளைவிப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்

(கொழும்பு)

**தமிழ் மக்களது கடமைகளைத் தடுத்து அவர்களுக்கு இடையூறு விளைவிப்பதானது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இத்தகைய நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடக்கூடாது. கொழும்பில் சில குழுக்கள் இத்தகைய முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் சட்டத்தை தமது கையில் எடுக்க முனைகின்றனர். இதனையே பாபர் வீதி ஆலய சம்பவமும் உணர்த்துகின்றது என பொதுபல சேனா தெரிவித்துள்ளது.**

## பொதுபல சேனா கூறுகிறது

கொழும்பு, பாபர் வீதி, முனியாண்டி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய திருவிழாவை ஒரு சில மதவாதக் குழுக்கள் நடத்தவிடாமல் அடாவடித்தனமாக தடுத்து வருகின்றனர். அத்துடன் பொலிஸாரின் பாது காப்புடனேயே நேற்றுமுன்தினம் பாற்குடப் பவனியும் இடம் பெற்றுள்ளது. இது இனங்களுக்கிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தும் செயற்பாடாகும். எனவே, இவ்வாறான செயல்களை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் பொதுபல சேனா தெரிவித்துள்ளது.

மேலும், இவ்வாறான அடிப்படை வாதக் குழுக்களின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தி சகல இன மக்களும் தத்தமது மத அனுஷ்டானங்களையும், கடமைகளையும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் மேற்கொள்ள இடமளிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் பொதுபல சேனா அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திலிந்த தெரிவித்தார்.

கொழும்பு பாபர் வீதி முனியாண்டி ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்தின் திருவிழாவை நடத்தவிடாது சிலர் தடுத்த சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும், தெரிவிக்கையில்,

முஸ்லிம் அடிப்படை வாதம் நாட்டில் தலைதூக்குவதாக கடந்த காலங்களில் நாம் தெரிவித்த போது

அதற்கு தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பலர் எமக்கெதிராக கருத்து தெரிவித்தனர். ஆனால் இன்று நடந்தது என்ன? இதற்கு பிரதமர் உள்ளிட்டோர் என்ன விளக்கம் கூறப் போகிறார்கள். பல்லின மக்களும் பரந்து வாழும் பிரதேசம் கொழும்பாகும். இங்கு சகல இனத்தவர்களும் சுதந்திரமாக தமது கடமைகளை மேற்கொள்ள உரிமையுண்டு. இல்லையேல் நாட்டில் மீண்டும் அடிப்படை வாதமும், பிரிவினை வாதமுமே தலைதூக்கும். அதனால, மீண்டும் அமைதியற்ற குழப்பமான தொரு சூழ்நிலை உருவாகும்.

இவ்வாறான அடிப்படைவாத குழுக்களால் நாடு அழிவு பாதையை நோக்கியே பயணிக்கும். எனவே அவற்றுக்கு இடமளிக்காமல் இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இவ்வாறான அடிப்படைவாத குழுக்களைப் பற்றியும் அவர்களது செயற்பாடுகள் குறித்தும் நாம் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக கூறிவந்த போதிலும், அதற்கு எவரும் செவிசாய்க்கவில்லை. அவ்வாறு செவிசாய்த்திருந்தால் பாபர் வீதி ஆலய சம்பவங்கள் போன்ற செயற்பாடுகள் ஏற்பட்டிருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 19 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### ஜி.கே.வாசன் கோரிக்கை



இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 19 இந்திய மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு, தமிழக மற்றும் இந்திய அரசாங்கத்திடம் தமிழக மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தியாவின் நாகை மாவட்டம், கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன் பிடித்துக் கொண்டிருந்த 19 நாகை மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்தனர். நாகபட்டினம், அக்கரைபேட்டையைச் சேர்ந்த சுந்தர்ராஜன் எழிலரசன். இவருக்குச் சொந்தமான விசைப்படகில் காமராஜ் (40), ராமச்சந்திரன் (40), பழனி சாமி (36), வேல்முருகன் (30), சுந்தர்ராஜன் (30), கேசவன் (25), சுப்ர மணியன (30), மனோன்மணி (45), ரவி (50), கணேசன் (25) ஆகிய 10 பேரும கடந்த 5ஆம் திகதி மீன்பி டிக்கக் கடலுக்குச் சென்றனர்.

இதேபோல், கீச்சாங்குப்பம், பிரதான சாலையைச் சேர்ந்த மாரியப்பன் (60) என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ரவி (42), ஜெயபால் (55), பாலமுருகன் (26), ஆறுமுகம் (30), உதயன் (25), பாலமுருகன் என்கிற பாலா (30), கிறிஸ்துராஜ் (45), காளிதாஸ் (35), மணிகண்டன் (24) ஆகிய 9 பேரும் கடந்த 8ஆம் திகதி மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

இவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக் கிழமை இரவு கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களை சுற்றி வளைத்தனர். பின்னர் மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையினர், 19 மீனவர்களையும், 2 விசைப் படகுகளையும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு சென்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை கடற்படையைக் கண்டித்து நாகை மீனவர்கள் வேலை நிறுத்தம்

(நாகபட்டினம்)

மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படையைக் கண்டித்து நாகை மீனவர்கள் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடலில் மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை அத்துமீறி கைது செய்யும் சம்பவம் தொடர்ந்து வருகிறது. இதனால் நாகை மற்றும் ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் அச்சத்துடன் கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் அவலநிலை நீடித்து வருகிறது.

இந்த பிரச்சினைக்கு பல ஆண்டுகளாக தீர்வு காணாமல் இருப்பது மீனவ மக்களை வேதனையில் ஆழ்த்தி உள்ளது.

கடந்த முதலாம் திகதி நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது.

ஏற்கனவே இலங்கை சிறையில் தமிழக மீன வர்கள் 28 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள னர். அவர்களை மீட்க வேண்டும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இந்தநிலையில் நாகை அக்கரைப்பேட்டை மற்றும் கீச்சாங்குப்பத்தை சேர்ந்த 19 மீனவர்கள் 2 விசைப்படகுகளில் சென்று கோடிக்கரைக்கு தென்கிழக்கே நடுக்கடலில் மீன்பிடித்துகொண்டு இருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் 2 விசைப் படகுகளையும் சுற்றிவளைத்து 19 மீனவர்களையும் கைது செய்தனர். 2 படகுகளையும் பறிமுதல் செய்து இலங்கைக்கு கொண்டு சென்றனர்.

பின்னர் அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட் டனர். அவர்களை 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இதுபற்றி அறிந்த நாகை அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம் மீனவர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். கீச்சாங்குப்பம் மீனவ பஞ்சாயத்தார் நேற்று அவசர ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

பின்னர் சிறைபிடிக்கப்பட்ட படகுகளையும், மீனவர்களையும், மத்திய- மாநில அரசுகளை வலியுறுத்தியும், இந்திய எல்லைப்பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யும் இலங்கை கடற்படையை கண்டித்தும் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவித்தனர். (இ-7)

## ராசி பலன்

12.10.2015

(புரட்டாதி 25, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 5.32 மணிவரை
அத்தம் பின்னிரவு 2.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
மாளயபட்ச முடிவு,
அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம் | | சந் |
| | | | குரு<br>செவ்<br>சுக் |
| | சனி | | சூரி,<br>சந், ராகு,<br>புத |

**மேடம்:** கடன்களை வசூலாக்க எடுத்த முயற்சிகளில் வெற்றி தரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** தொலைபேசி வழித்தகவலால் சந்தோசமடைவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நிதி நிலை உயரும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**சிம்மம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கற்பனை மிகுதியான நாள், சான்றோர் சந்திப்பு இடம் பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், வேலைச்சுமை கூடும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும்நாள்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவிட்டு மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**விருச்சிகம்:** சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், வீட்டு தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர்கள் வருகையுண்டு, எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், புதிய திருப்பங்கள் ஏற்படும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும்.

**கும்பம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாததால் தாமதமாகலாம்.

**மீனம்:** காரிய அனுகூலமுண்டு, மன திற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு, ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

# நலன்புரி முகாம்களுக்கு வெளியே வாழும் குடும்பங்களையும் மீள்குடியேற்ற வேண்டும்

## புனர்வாழ்வு சங்கத் தலைவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல் வெளியிடங்களில் இடம் பெயர்ந்து வாழும் குடும்பங்களையும் மீள்குடியேற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலி. வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து 25 வருட காலமாக முகாம்களிலும் வெளி இடங்களிலும் வாழும் மக்களை மீள் குடியேற்றுவதற்கு அரசு தற்போது முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்க விடயம் ஆகும்.

இதுவரைகாலமும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.2010 ஆம் ஆண்டின் தரவின் படி வலி.வடக்கில் இருந்து இடம்




பெயர்ந்து 9 ஆயிரத்து 905 குடும்பங்களில் ஆயிரத்து 300 குடும்பங்கள் மாத்திரமே முகாம்களில் வசித்து வருகின்றன. முகாம்களை விட்டு வெளி இடங்கள், உறவினர்களின் வீடுகள், இந்தியா போன்ற பகுதிகளில் 8 ஆயிரத்து 700 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இடம் பெயர்ந்து முகாம்களில் .உள்ள மக்களுக்கு மாகாண சபையூடாகவும் நிறுவனங்கள் ஊடாகவும், வெளிநாட்டு உறவுகள் ஊடாகவும் சிறிதளவு உதவிகள் கிடைக்கின்றன. அவை போதுமானதாகவும்இல்லை. ஆனால் முகாம்களை விட்டு வெளியில வசிக்கும் குடும்பங்களைப்பற்றி இதுவரை கால மும் எவரும் சிந்திப்பதாக இல்லை.

அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியிலாகவோ, அரசாங்கத்தினூடாகவோ எந்தவிதமான உதவிகளும் இது வரை காலமும் கிடைக்கவில்லை. கடந்த பாராளுமன்ற அமர்வில் மீள் குடியேற்ற அமைச்சர் முகாம்களிலுள்ள மக்களைப பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளார். வெளியிடங்களில் வாழும மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விடயம் ஆகும்.

மயிலிட்டி, பலாலி, ஊறணி, தையிட்டி,காங்கேசன்துறை போன்ற கரையோர பகுதிகளில் பரம்பரையாக வாழ்ந்தவர்களில் பலர் வெளி இடங்களில் வசித்து வருகின்றார்கள். கரையோரப்பகுதி மக்களை மீள் குடியேற்றலால் மட்டுமே ஏனைய பகுதிகளில் மீள் குடியேற்றம் செய்வது பயனுள்ளதாக அமையும்.

கரையோரப்பகுதியை அண்டியே அவர்களின் வாழ்வாதாரம் அமைந்துள்ளது. மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டே மீள் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.


மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படை தேவையாக வீடு,நீர், மின்சாரம், வீதி என்பன மிக முக்கியமாக தேவைப்படுகிறது. இவற்றை முழுமையாகச் செய்து முடிக்காமல் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீள் குடியேறாமல் உள்ளார்கள் என்று கருத்துத் தெரிவிப்பது கண்டிக்கத்தக்க விடயம். அடிப்படை தேவைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்தால் மட்டுமே முற்று முழுதான மீள் குடியேற்றத்தை எதிர்பார்க்கமுடியும்.

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 800 ஏக்கர் நிலப்பரப்பில் ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்புத்தான் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆயிரத்து 600 ஏக்கர் நிலப்பரப்பில் சிறிய சிறிய பகுதிகளாக நில விடுவிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் முகாம்களில் வாழும மக்களை மாத்திரம் மீள் குடியேற்றுவதை பற்றிச் சிந்திக்காமல் இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் மாத்திரமே மீள்குடியேற்ற மக்களுக்கு பயனுள்ள விடயமாகவும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாடு வெட்டிய குற்றச்சாட்டின் பேரில் 7பேர் சங்கானையில் நேற்றுக்கைது

(யாழ்ப்பாணம்)



சங்கானைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 3 பசு மாடு உட்பட 5 மாடுகளை வெட்டியதுடன் அரச பாவனையிலுள்ள அனுமதி அச்சைப் போலியாக பயன்படுத்தி அனுமதிபத்திரம் தயாரித்து இறைச்சி விற்பனை செய்து வந்த 2 கடை உரிமையாளர்கள் உட்பட 7 பேரை யாழ்ப்பாண விசேட குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

சங்கானைப் பகுதியிலுள்ள கொல்களம் ஒன்றில் நேற்றைய தினம் அதிகாலை 3 மணியளவில் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையின் போது அனுமதிப்பத்திரமின்றி வெட்டப்பட்ட 400 கிலோவுக்கு மேற்பட்ட மாட்டிறச்சியுடன் 6 பேரும்,வெட்டுவதற்கு தயாரான நிலையில் இருந்த 2 பசுக்களுடன்ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து இறைச்சியும் பசுக்களும் கைப்பற்றப்பட்டன.

குறித்த 2 கடைகளிலும் பல நாட்களாக இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்று வந்ததாகவும் அரச பாவனையில் உள்ள அனுமதி அச்சை போலியான முறையில் தயாரித்து அதைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு இறைச்சியை விற்பனைசெய்து வந்தமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை வெட்டியமை, அரச பாவனையிலுள்ள அச்சை போலியாகப் பயன்படுத்தியமை,களவான முறையில் பசுக்களைக் கொண்டு வந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தார்.(இ-9)

## சந்தை வியாபாரிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி மத்திய சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த நான்கு வியாபாரிகள் பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டு அங்கு வைத்து எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

வியாபார நடவடிக்கைகளின் போது தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதால் அங்கு வரும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

இது விடயம் தொடர்பாக பொதுமக்களினாலும் சந்தைகுத்தகைக்காரரினாலும் நெல்லியடி பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் நெல்லியடி மத்திய சந்தைக்குச் சென்ற பொலிஸார் இரண்டு பெண்களையும் இரண்டு ஆண்களையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

இந்த நடவடிக்கையில் பெண் பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர்.

பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்கள் சந்தைப்பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான வார்த்தைப் பிரயோகங்களை தவிர்க்குமாறு எச்சரித்ததுடன் இவ்வாறான சம்பவம் எதிர்வரும் காலத்தில் இடம் பெறுமானால் குறித்த நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என் றும் பொலிஸார் எச்சரித்தனர்.

அத்துடன் குறித்த நான்கு வியாபாரிகளிடமும் இவ்வாறு இனிவரும் காலங்களில் செய்ய மாட்டோம் என்ற உறுதிமொழியுடன் கூடிய கையொப்பத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

நெல்லியடி மத்திய சந்தைப் பகுதியில் கீரை மற்றும் பழவகைகளை விற்பனை செய்து வந்த வியாபாரிகளே இவ்வாறான தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கபட்டுள்ளது.

சுமார் 150 இற்கு மேற்பட்ட வியாபாரிகள் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற மேற்படி சந்தையில் குறித்த 4 வியாபாரிகளும் நீண்ட நாட்களாக தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதேவேளை பொலிஸ் விசாரணைகளின் பின்னர் முற்பகல் 10 மணியளவில் மேற்படி நான்கு வியாரிகளும் அமைதியான முறையில் தமது வியாபார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்திருந்தனர். அத்துடன் பொலிஸார் இது குறித்து நாம் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (இ-3-60)



மாதகல் "மலரும் மொட்டுக்கள்" பகல் பராமரிப்பு நிலைய முன் பள்ளியில் ஆசிரியர் தின விழா நேற்று முன்தினம் காலை நடைபெற்றபோது...

## முதலாமிடமும் மூன்றாமிடமும் சண்டிலிப்பாய்க்கு

கலை, கலாசார இராஜாங்க அமைச்சினால் வருடந் தோறும் நடத்தப்படும் 172 கலாசார மத்திய நிலையங்களுடையிலான பிரதீபா தர ங்க தேசிய மட்டப்போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செய லகத்திற்குட்பட்ட கலாசார மத்திய நிலைய மாணவர்கள் முதலிடத்தையும் மூன்றாமிட த்தையும் பெற்றுள்ளனர்.

இதில் தனி இசையில் கட் டுடை கிராமிய வளாக மாணவனாக கணேச மூர்த்தி- தனு ஜன் முதலிடத்தையும் கோலாட்டம் நடனத்தில் இளவாலை கிராமிய வளாக மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற் றுள்ளனர். (இ-5)

## ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்ஊடாக கலைத்துறை சார்ந்த வகுப்புக்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலை, கலாசார இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம் 2016 ஆம் ஆண்டு திறமை மேம்பாட்டு நிகழ்ச்சிக்காக சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்பட இருக்கும் கலாசார மத்திய நிலையத்தால் இசை, நடனம், சித்திரம், நாடகம், தவில், சிங்களம், ஆங்கிலம் போன்ற பாடநெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

இப்பாடநெறிகளை கற்பிக்க ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். மேற்குறித்த கற்கை நெறிகளை கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தத்தமது சுயவிபரங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம்,வடலியடைப்பு, பண்டத்தரிப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)

## புனரமைப்பு வேலைகள் முழுமையடையவில்லை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலடியில் இருந்து வங்களாவடி துறைமுகம் வரை செல்லும் பிரதான வீதியின் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் முழுமையடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

3 கிலோமீற்றர்நீளமுடைய குறித்த வீதியின் ஒன்றரைக் கிலோமீற்றர் வரையுள்ள வீதி மட்டும் வீதிஅபிவிருத்தித்திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் மீதி ஒன்றரை கிலோமீற்றர் வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை..

அவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் வீதியால்பயணிக்கமுடியாதநிலையும் ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதி நீண்ட காலமாக புனரமைப்புச் செய் யப்படாது கவனிப்பாரின்றிய நிலையே காணப்பட்டது.

இது தொடர்பாக வீதிப்பயனாளிகளால் உரிய தரப்பினருக்கு கோரிக்கை விடப்பட்டும் இதுவரை கவனிக்கப்படாத நிலையியே உள்ளது.

குறித்த வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்ற நோயாளர்கள், கர்ப்பிணிப் பெண்கள் என்போர் தினமும் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 50ஆயிரம் பனை விதைகள் ஆரம்ப நிகழ்வில் நடப்படும்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையால் இன்று நடத்தப்படவுள்ள பனை விதை நடுகை ஆரம்ப விழாவில் 50 ஆயிரம் பனை விதைகள் நடப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தலைவர் சோ. கோகுலதாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை அபிவிருத்திச் சபையின் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாக பனை விதை நடுகை செயற்றிட்டம் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் பனை விதை நடுகை ஆரம்ப விழா இன்று மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாமுனைப் பகுதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் மாதிரி பனம் பண்ணையில் நடைபெறவுள்ளது.

இப்பண்ணையில் மாத்திரம் 50 ஆயிரம் பனை விதைகள் இன்று நடப்படவுள்ளதோடு தொடர்ச்சியாக யாழ். மாவட்டம் முழுவதும் பனம் விதைகள் நாட்டப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# சீனாவின் இடத்தை ஜப்பான் நிரப்பும்

கடந்த ஜனவரி மாதம நடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையில் நிகழ்ந்துள்ள பெரியதொரு மாற்றத்தை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானியப் பயணம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இருந்து, ஒரு வழக்கம் இருந்து வந்தது. ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், முதல் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்வது அதையடுத்து சீனாவுக்குச் செல்வது இது தான் அந்த வழக்கம்.

மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர், இலங்கையில் சீனாவின் செல்வாக்கு மிகையாகியிருந்தது.

போர்க்காலத்தில் பாதுகாப்புத் தேவைகளுக்கும், போருக்குப் பிந்திய காலத்தில் அபிவிருத்தி மற்றும், உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்கும் சீனாவின் தயவிலேயே இலங்கை தங்கியிருந்தது.

மகிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னர், கடந்த ஜனவரி மாதம், அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முதலில் புதுடில்லிக்கும் அடுத்து பீஜிங்கிற்கும் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

அவரும்மகிந்த ராஜபக்ஷவின் பாரம்பரியத்தையே பின்பற்றினார். ஆனால், கடந்த ஒகஸ்ட் மாதம் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, வழக்கம்போலவே முதலாவதாக கடந்த மாதம் புதுடில்லிக்குப் பயணத்தை மேற்கொண்டார்.

ஆனால் அவரது இரண்டாவது பயணம் சீனாவுக்கு இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக ஜப்பானுக்கே பயணம் மேற்கொண்டார்.

இது, சீனாவிடம் இருந்து தற்போதைய அரசாங்கம் வெகுவாக விலகி நிற்கிறது என்பதற்கான அடையாளம்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் உள்ளிட்ட சீனாவின் சில அபிவிருத்தித் திட்டங்களை இலங்கை அரசாங்கம், மீளாய்வு என்ற பெயரில் இடைநிறுத்தியது.

அது சீனாவுக்கு எரிச்சலூட்டியதென்றாலும், இலங்கையுடன் அதிகளவில் முரண்பட விரும்பவில்லை.

புதிய அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சமமான அளவில் உறவுகளைப் பேண விரும்புவதாக அறிவித்திருந்தாலும், சீனாவிடம் இருந்து விலகிச் செல்லும், மேற்குலகின் பால் நெருங்கிச் செல்லும் வெளிவிவகாரக் கொள்கையையே தற்போதைய அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது என்பதே உண்மை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானியப் பயணத்தையிட்டு, சீனா கட்டாயம் சினம் கொள்ளக் கூடும். ஏனென்றால், அது அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

இந்தியாவை அடுத்து, தமது நாட்டுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பயணத்தை மேற்கொள்ளவில்லை என்பது மட்டும் தான் சீனாவின் கவலைக்குரிய விடயம் அல்ல.

அதற்கும் அப்பால் ஜப்பானுடன் இணைந்து கடல்சார் கண்காணிப்புத் திறனைப் பெருக்கிக் கொள்ளும் உடன்பாடு ஒன்றில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியல் இருக்கும் வரையில், இந்தியப் பெருங்கடலில் கோலோச்சிய சீனா, இப்போது தனக்கு எதிராக அணி சேரும் நாடுகளைக் கண்டு அச்சம் கொள்ளாமல் இருக்க முடியாது.

ஏற்கனவே, சீனாவுடன் பலப்பரீட்சை நடத்தும் இந்தியாவுடன், அமெரிக்கா கைகோர்த்துக் கொண்டுள்ளது.

அதையடுத்து, இந்தியாவுடன் ஜப்பான் கைகோர்த்துக் கொண்டது. தொடர்ந்து அவுஸ்திரேலியாவும் இணைந்து கொண்டது. சீனா அடிப்படையில் வெறுக்கும் நாடுகளில் ஒன்று ஜப்பான். இரண்டு நாடுகளுக்கும் இடையில் நீண்ட காலப் பகைமை இருந்து வருகிறது.

இப்போதும், இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள பல தீவுகளுக்காக உரிமைப் போர் நடக்கிறது.

ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியை சீனா எப்போதுமே தனக்கான அச்சுறுத்தலாகவே பார்த்து வந்திருக்கிறது. இத்தகைய கட்டத்தில், ஜப்பானின் தற்போதைய பிரதமர் சின்ஷோ அபே நாட்டின் நெடுங்கால சட்டதிட்டங்களை மாற்றியமைத்து வருகிறார்.

அதில் முக்கியமானது, வெளிநாடுகளுக்குச் சென்று போரிட ஜப்பானியப் படைகளுக்கு இருந்து வந்த தடை நீக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் தளங்களை அமைக்கவும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போரில அழிவுகளைச் சந்தித்த ஜப்பான், வெளிநாடுகளின் மீது படையெடுக்கவோ படைகளை நிறுத்தவோ தடைகளை விதிக்கும் வகையில் அரசியலமைப்பை ஏற்படுத்தியது.

ஆனால், இப்போது ஜப்பான், அந்த விதிமுறைகளை மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறது.

சீனாவுக்கு, இந்தியப்பெருங்கடல் பிராந்தியம் எந்தளவுக்கு முக்கியமோ, அதுபோலவே ஜப்பானுக்கும் முக்கியம் தான்.

ஜப்பானைப்பொறுத்தவரையில் இயற்கையான மூலவளங்கள் அதனிடம் கிடையாது. அது பிற நாடுகளின் கனிம வளங்களை இறக்குமதிசெய்து பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்யும் ஒரு நாடு.

அந்த வகையில் ஜப்பானுக்கு பாதுகாப்பான கடல் பாதை என்பது அவசியம். அதில் தடங்கல்கள் ஏற்பட்டால் ஜப்பானின் பொருளாதாரம் முடங்கி விடும்.

இந்தியப் பெருங்கடல் வழியாகவே ஜப்பானுக்கு எண்ணெயும், கனிம வளங்களும் எடுத்துச் செல்லப்படுவதால், இதில் சீனாவின் தலையீடுகளை கட்டுப்படுத்த அல்லது' சீனாவின் செல்வாக்கு ஓங்குவதை தடுக்க ஜப்பான் விரும்புகிறது.

அதனால் தான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவுடன் இணைந்து தனது கடற்பலத்தை பெருக்கி வருகிறது.

ஜப்பானுக்கு இன்னொரு வகையில் ஆதரவளிக்கும் நாடு அமெரிக்கா.

இந்த நாடுகளின் கூட்டு, இந்தியப் பெருங்கடல் பகுதியில் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டும், கூட்டு கடற் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றன.

வெளிநாடுகளில் தளம் அமைக்கவும், வெளிநாடுகளுக்கு படைகளை அனுப்பவும் இருந்து வந்த கட்டுப்பாட்டை ஜப்பான் நீக்கியுள்ளதானது சீனாவை சினங்கொள்ள வைத்திருக்கிறது.

இதற்கு சீனா வெளிப்படையாகவே அதிருப்தியும் தெரிவித்திருக்கிறது.

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், ஏற்பட்டுள்ள சூழலை ஜப்பான் சரியாக கையாளத் தொடங்கியிருக்கிறது.

சீனாவிடம் இருந்து இலங்கை எதனைப் பெற்றுக் கொண்டதோ, அதனை தானாகவே வழங்க ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்கும் அபிவிருத்திக்கும் இனி ஜப்பானிய நிதி உதவிகள் அதிகம் கிடைக்கும்.

ஜப்பானிய முதலீட்டாளர்கள், அதிகளவில் இலங்கையில் கால் பதிக்கின்ற நிலை உருவாகும். அவற்றுடன், இலங்கையின் கடல் கண்காணிப்பு திறனை வலுப்படுத்துவதற்கும் ஜப்பான் உதவப் போகிறது.

இதுபற்றித் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானிய பயணத்தின் போது முக்கியமாக ஆராயப்பட்டது.

ஐந்து நாட்கள் ஜப்பானில் தங்கியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபே, இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசியிருந்தார்.

அதைவிட, இதற்கு முன்னர், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மட்டும், இதுவரை உரையாற்றியுள்ள, ஜப்பானிய நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்ற வாய்ப்பும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப் பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பயணத்துக்கு ஜப்பான் அதிகளவு முக்கியத்துவத்தை அளித்திருந்தது.

காரணம், இது சீனாவுக்கு எதிராக வகுக்கப்படும் ஒரு முக்கியமான மூலோபாயத் திட்டத்தில், இலங்கையையும் பங்காளியாக்குவதற்கானது.

உலகில் சில விடயங்களை அமெரிக்கா நேரடியாகவே கையாள்கிறது, சிலவற்றை நோர்வே போன்ற நாடுகளின் ஊடாக நகர்த்துகிறது. இன்னும் சிலவற்றுக்கு ஜப்பானையும் பயன்படுத்துகிறது.

இலங்கையில், அமெரிக்காவின் நிதியுதவிகள் அதிகரிக்கப்பட்டாலும், சீனாவைப் போல அதனால் அள்ளி வழங்க முடியாது. ஆனால், அதற்கு ஜப்பானைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதற்காகவும், கடல்சார் கண்காணிப்பு ஒத்துழைப்பில் இலங்கையுடன் கூட்டுச் சேர்வதற்கும் ஜப்பானைப் பயன்படுத்திக் கொள்வதில் மேற்குலகம் முனைப்புக் காட்டுகிறது.

இப்போது, இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில், சீனாவின் தலையீடுகள் பெரிதும் சிக்கலடைந்திருக்கின்றன என்று கூறலாம்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா என்று வலுமிக்க சக்திகள், ஒன்றுபட்டு நிற்கின்றன. இவை தம்முடன் இலங்கையையும் இணைத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளன.

இந்தநிலையில், சீனாவுக்கு பட்டுப்பாதை திட்டத்தை செயற்படுத்துவதும் சரி, இந்தியப் பெருங்கடலில் அதன் ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதும்சரி, இலகுவான காரியமாக இருக்காது.

இதற்கு முக்கிய காரணம், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள, இலங்கைத்தீவு இப்போது சீனாவின் கையில் இருந்து விலகிச் செல்லத் தொடங்கியிருக்கிறது.

இதனை சீனா உணர்ந்து கொண்டுள்ளதால் தான், ஜப்பான் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் வந்திறங்கிய கையோடு, சீனாவின் விசேட தூதுவராக, அந்த நாட்டு உதவி வெளிவிவகார அமைச்சர், லியூ சென்மின் இலங்கை வந்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானியப் பயணம், சீனாவை எந்தளவுக்கு பாதித்திருக்கிறது என்பதை, அவரது இந்த அவசர பயணம் எடுத்துக் காட்டியிருக்கிறது.

அதேவேளை, இலங்கை அரசாங்கம் சீனாவின் கைக்குள் இருந்தவரைக்கும் மேற்குலக நாடுகளால் சாதிக்க முடியாதவற்றை இப்போது அவர்களால் சாதிக்க முடிகிறது என்றால் இலங்கைத்தீவின கேந்திர முக்கியத்துவம் எத்தகையது என்பதை புரிந்து கொள்வதொன்றும் அவ்வளவு சிரமமான விடயமல்ல.

ஹரிகரன்




# பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணி

(வவுனியா)

வவுனியா மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை பேரவையினால் அறநெறிப் பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு கட ந்த மாதம் 27 ஆம் திகதி போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

இப்போட்டி பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டுப்பணியானது வவுனியா தெற்கு கல்வி வலய அனுசரணையில் தெற்கு வலயத்திலுள்ள பாடசாலைகளில் சைவநெறிப் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களினால் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் நடத்தப்படவுள்ளதாக அறநெறிப்பாடசாலை பேரவைச் செயலாளர் அறிவித்துள்ளார். (2)



கிளிநொச்சி திருவையாறு முதலாம் பகுதி பிரதான வீதியில் புனரமைப்பு செய்யப்பட்ட மதகு அமைந்த பகுதி போக்குவரத்து மேற்கொள்ளமுடியாது மிகவும் மோசமாக சேதமடை ந்து காணப் படுவதைப் படத்தில் காண லாம்.

(படம்:-கிளிநொச்சி செய்தியாளர்)

# 4 கோடி 21 இலட்சம் ரூபா நிதியில் வகுப்பறைக்கட்டடங்கள் திருத்தம் புதிதாக கட்டடங்கள் நிர்மாணித்தல்

(மல்லாவி)

சர்வதேச அபிவிருத்தி சங்கம் அவுஸ்ரேலிய அரசாங்கம் ஆகியவற்றின் நிதியனுசரணையுடன் மத்திய கல்வியமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களில் உள்ள 5 பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டடங்கள் திருத்துதல், புதிதாக கட்டட நிர்மாணங்கள் ஆகியவைசெய்வதற்காக 4 கோடியே 21இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வடக்கு மாகாண கல்வியமைச்சின் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழுள்ள மு/சம்பத் நுவர தேசிய பாடசாலையின் அழகியல் பிரிவு கட்டடம், மலசலகூடங்கள் ஆகியன நிர்மாணிப்பதற்காக 85 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள வவு/இறம்பைக்குளம் பெண் மகா வித்தியாலயத்தில் கட்டடங்களை புனரமைப்பு செய்வதற்காக 84 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் மன்னார் கல்வி வலயத்திலுள்ள மன்/முசலி மகாவித்தியாலயத்தின் கட்டடங்களை புனரமைப்பு செய்வதற்காக 82 இலட்சம் ரூபாவும் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் கட்டடங்களை புனரமைப்பு செய்வதற்காக 85 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரியின் கட்டடங்களைப் புனரமைப்பு செய்வதற்காக 84 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 4 கோடியே 21 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டங்கள் யாவும் இவ்வருட இறுதிக்குள் 120 நாட்களுக்குள் செய்து முடிக்கப்படவுள்ளதாகவும் அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)






மன்னார் வங்காலை கிராமத்தில் புனித ஆனாள் மகா வித்தியாலயத்திலுள்ள இளையோரால் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்ட சிறார்கள் மற்றும் முதியோருக்கு அங்கர் பால்மா பக்கற்றுக்கள் அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.

## துணுக்காய் கல்வி வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கண்காட்சி போட்டி முடிவுகள்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப கண்காட்சி போட்டியில் முதல் 10 இடங்களைப் பெற்ற பாடசாலைகளையும் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரங்களையும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

மு/மல்லாவி மத்திய கல்லூரி
ஆர்.டிலான் சுஜீபன், பி.விஷ்ணுராஜ்

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்
பி.விதுஷன்

மு/மல்லாவி மத்திய கல்லூரி
பி.ரோகன், பி.போல்கிறிஸ்ரர்

மு/ஒட்டுசுட்டான் ம.வி
கே.கிசோபிகன்

மு/முத்தையன்கட்டு வலதுகரை ம.வி
உ.சாருசன்

மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்
பா.சுஞ்சீபன்

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்
பொ.சஞ்சுதன்

மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்
து.பிரியங்கா, க.குசிகன்

மு/வன்னிவிளான்குளம் அ.த.க.பா
ஞா.சாளினி, நி.கீர்த்திகா, இ.ரஜீந்தினி, இ.டிலக்சனா

மு/முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை
யோ.வானுஜா, து.தனோஜன், சு.சுபர்திலா, தி.துசாந்தினி

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மிக விரைவில் அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## காணி உறுதிகளை அடையாளப்படுத்தும்வரை எல்லைப்படுத்தும் நடவடிக்கை இடைநிறுத்தம்

### முல்லை–கேப்பாப்பிலவு மக்களுக்கு வனவளத்திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியை வனவளத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லைப்படுத்துவதற்கு முயற்சிப்பதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த இம்மக்கள் யுத்தம் முடிவுற்ற பின்பு தம்முடைய சொந்தக் காணிகளில் தற்காலிக வீடுகளை அமைத்து சிரமங்களுக்கு மத்தியில் குடியிருக்கும்போது இராணுவத்தினரும் வேறு பல அமைப்புக்களும் மக்களுக்கு இடையூறு விளைவித்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியை வனவளத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லைப்படுத்துவதற்கு அண்மையில் முற்பட்ட வேளை பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதால் அவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்தநிலையில் மாவட்ட அதிகாரி காணி உறுதிப்பத்திரங்கள் இருக்குமானால் அவற்றைத் தமது அலுவலகத்திற்கு கொண்டு வரும் படி கூறியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வனவளத்துறை அலுவலகத்திற்கு அண்மையில் சென்ற மக்கள் காணி உறுதிகளைக் காட்டியதும் காணி உறுதிகளை எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை அடையாளப்படுத்தும் வரை தமது எல்லைப்படுத்தும் நடவடிக்கைகளை கைவிடுவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் மக்களின் காணிகளை இராணுவமும் கையகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 14ஆம் திகதி காணி உரிமையாளர்கள் தமது காணிகளை காண்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-28)

## கலாமன்றங்களுக்கு அடுத்தாண்டில் இசைக்கருவிகள் வழங்கப்படும்

### வ.மா.சபை உறுப்பினர் ரவிகரன் உறுதிமொழி

புதுக்குடியிருப்பு பகுதியில் பதிவுசெய்யப்பட்டு இயங்குநிலையிலுள்ள கலாமன்றங்களுக்கு அடுத்த ஆண்டில் இசைக்கருவிகள் வழங்கப்படும் என ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லை. புதுக்குடியிருப்பு கலைஞர்களின் குறைகேள் சந்திப்பொன்று அண்மையில் மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை கட்டடத்தொகுதியொன்றில் நடைபெற்றது. இக்குறைகேள்சந்திப்பில் 1ம் வட்டாரம் முதல் பத்தாம் வட்டாரம் வரையிலுள்ள பல்வேறு கலாமன்றங்களைச் சேர்ந்த இளைய மூத்த கலைஞர்கள் பலரும் கலந்து தமது குறைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

எதுவித இசைக்கருவியையும் சொந்தமாக கொண்டிராது ஒவ்வொரு நிகழ்விற்கும் வாடகை முறையிலேயே இசைக்கருவிகளை பெறும் நிலையில் தாம் இருப்பதாக பல கலைஞர்களும் தமது குறைக ளை முன்வைத்தனர.

ஒரு தாள இசைக்கருவியேனும் இல்லாது பாரம்பரிய தமிழர் கலைகளை வெளிப்படுத்தும் சமயங்களில் தாம் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குவதாகவும் கலாமன்றங்கள் மூலமாக கலைகளை தொடர்ந்தும் இச்சமூகத்திலே இளைய தலைமுறையினரிடையே கொண்டுசெல்வதற்கான உதவிகளை புரியவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

குறைகளையும் கோரிக்கைகளையும் கேட்டுக்கொண்ட ரவிகரன் தனது உரையில்,

எமது மொழியும் கலையும் பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக ஆழமாக மண்ணில் வேரூன்றி நிற்பவை. அவற்றின் திடமான இருப்பும் காலத்துடனான புத்தாக்க எழுச்சியுமே தமிழ்த்தேசிய வாழ்வியலை தொடர்ந்தும் இந்த ஈழ மண்ணில் நிலைபெறச்செய்யும். தமிழரதும் பெருமைகளை எடுத்தியம்பும் ஓர் ஊடகமாகவும் தற்காலத்திற்குகேற்றதான பண்பாட்டுப்புத் தாக்கங்களை விதைக்கவல்ல வழிநடத்துமையங்களாகவும் இக்கலாமன்றங்கள் ஈழத்தமிழ் சமூகத்திலே நிலைபெற வேண்டும.

முன்வைக்கப்பட்ட அனைத்து குறைகளும் ஒன்றன்பின் ஒன்றாக தீர்வதற்கான பொறிமுறைகளை உருவாக்க தன்னாலியன்ற முயற்சிகளை முன்னெடுப்பேன் என உறுதியளித்த ரவிகரன், இதன் முதற்கட்டமாக 2016ஆம் ஆண்டிற்கான தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து புதுக்குடியிருப்பு பகுதியில் பதிவுசெய்யப்பட்டு இயங்குநிலையில் உள்ள அனைத்து கலாமன்றங்களுக்கும் ஆர்மோனியம், தபேலா, டோலக் மற்றும் தாளங்கள் போன்ற இசைக்கருவிகளை வழங்குவதாக தெரிவித்தார். (2-281)

# உள்ளக விசாரணைக்கு உடன்பட்டது எதற்காக?

## கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் புலம்பெயர் தமிழர்கள் கேள்வி

**சர்வதேச விசாரணை க்கு ஆதரவு தெரிவித்து விட்டு உளளக விசாரணைக்கு உடன பட்டது ஏன் எனக் கேள்வி யெழுப்பிய புலம் பெயர் தமி ழர்களுடன் முரண்பட்டுக் கொண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜெனிவா சென்ற கூட்டமைப்பு பிரதி நிதிகள் சிலர் கூட்டத்தை இடைநிறுத்திவிட்டு வெளியேறியதாக கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமைகள் தொடர்பான கூட்டத் தொடரில் பங்கேற்பதாக ஜெனிவா சென்ற தமிழ்த் தேசிய கூட் டமைப்பின் பிரதிநிதிகளான செல்வம் அடைக்கல நாதன், ஜி.கவீந்திரன்,எம்.கே. சிவாஜிலிங்கம், கோவிந்தன் கருணாகரன் உள்ளிட்டவர் கள் பரீஸ் நகரில் அண்மை யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பங்கேற்றி ருந்தனர்.

புலம்பெயர் தமிழர்க ளுடன் கலந்துரையாட ஏற் பாடு செய்யப்பட்ட மேற்படிக் கலந்துரையாடலில் 50 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றி ருந்தனர்.

இதன் போது ஜெனிவா செல்வதற்கு முன்பாக கொழும்பில் வைத்து சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்தப் போவதாகவும் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் எதிர் பார்ப்பு சர்வதேச விசாரணையே.

உள்ளக விசாரணைக்கு ஒரு போதும் உடன்படமாட் டோம் என்றும் கூறியிருந் தீர்கள்

ஆனால் உள்ளக விசார ணைகக்கு சார்பாக ஜெனிவாக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் உடன்பட்டது ஏன் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதி பிரதிநிதிகளைப் பார்த்து கேள்வி எழுப்பியிருந்தனர் புலம்பெயர் தமிழர்கள்.

இதனால் கூட்டம் கூச்சல் குழப்பத்துடன் பாதியில் இடை நிறுத்தப்பட்டதாக அந்த ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## எக்னெலிகொட விசாரணைகள் வெலிகந்த முகாமிற்கு மாற்றம்

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்ப வம் குறி த்த விசாரணைகள் வெலிகந்த முகாமிற்கு மாற்றப்பட்டுள் ளது. புலனாய்வுப் பிரிவினர் வெலிகந்த முகாமில் இந்த விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். எக்னெலிகொட கிரித்தலே முகா மில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என முன்னதாக தகவல் வெளி யிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் விசாரணைகள் நடத் தப்பட்டன. அதனைத் தொடர்ந்து தற்போது வெலிகந்த முகாமிலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிரித்தலே முகாமிலிருந்து எக்னெலிகொட, வெலிகந்த முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட சந்தேக நபர்கள் கிரித்தலே முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். (இ-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் உ.ஜானுசன்

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் செல்வன் உ.ஜானுசன் -167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

(2027)

வாழ்த்துவோர்கள்:
அம்மப்பா, அம்மம்மா (யாழ்ப்பாணம்),
பெரியப்பா, பெரியம்மா (கிளிநொச்சி),
மாமா - ரமேஷ், அண்ணா - சுஜித், அக்கா - சோபனா



பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் முரளிதரன் ஹரிப்பிரணா (163)

நடந்த 2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யா/ மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலய மாணவனான முரளிதரன் உஷா தம்பதிகளின் புத்திரன் செல்வன் ஹரிப்பிரணா -163 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். அவர் மென்மேலும் கல்வியில் சிறந்து பல பட்டங்கள் பெற வேண்டும் என அவரை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மதுமதராஜா அஞ்சன ஜீவல்லறி,
திலீபன் (மாமா), இளமதி (மாமி),
அபிசயன்- மச்சான், சாருமதி (மச்சாள்)

பிரதான வீதி,
சங்கானை.

(2022)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் செந்தில்குமார் நிதர்ஷன்



கடந்த 2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவன் செல்வன் செ.நிதர்ஷன் 168 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். அவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென அவரை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அப்பு, அப்பு அம்மா,
சித்தப்பாமார்,
லவன், பவன், தாசன்.

பண்ணாகம்,
சுழிபுரம்.



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:58 செவ் 7 ல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/5075 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 34 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2201 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:34<br>தகைமை/தொழில்O/L/சுவிஸ் NOTPR<br>தொ.இ: B/5077 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 33 செவ் 12 இல்<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில்<br>தொ.இ: G/5083 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 04<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:வைத்தியர்<br>தொ.இ: B/5080 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 75செவ் 7 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/2402 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 32செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/கட்டார்<br>தொ.இ: B/5081 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 16 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:B.COM/வங்கியாளர்<br>தொ.இ: G/2403 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

### போதைப்பொருட்களுடன் இருவர் பொலிஸாரால் கைது

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 211 ஆம் இலக்க தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் எக்ஸ்டசி (Ecstay), மற்றும்எல்எஸ்டி(LSD) வகையான போதைப்பொருட்களை வைத்திருந்த இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவர்களிடமிருந்து 163 குளிசைகளையும் 17 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

163 குளிசைகளில் 131 குளிசைகள் Ecstay வகையைச் சேர்ந்தது என்றும் 32 குளிசைகள் LSD வகையைச் சேர்ந்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


# பொய் கூறி கப்பம் கோரிய சிறைச்சாலை காவலர் கைது

குற்றப்புலனாய்வுத்திணைக்கள உத்தியோகத்தர் எனக் கூறி கப்பம் பெற முற்பட்ட சிறைச்சாலை காவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவத்தை - கிரில்லவல பகுதியைச் சேர்ந்த ஒருவரின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்டு, அவர் வாங்கிய ஆட்டோ போலி ஆவணங்களுடன் உள்ளதாக கூறியதோடு அதன் பொருட்டு விசாரணை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இதனை மேற்கொள்ளாதிருக்க 25 ஆயிரம் ரூபாவை தனது வைப்பிலிடுமாறும் கூறியுள்ளார். அந்த நபரும் அவ்வாறே பணத்தை வழங்கியுள்ளார். இதனையடுத்து மீண்டும் ஒருமுறை இவ்வாறு பணம் கோரியதால் குறித்த நபர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் மொரோன்தோட - உடகமுவ பகுதியைச் சேர்ந்த சிறைச்சாலை காவளாளி எனத தெரியவந்துள்ளது. (இ-7)



# கதைக்க முடியாத நிலைமை நாட்டில் உருவாகியுள்ளது!

## அஸ்கிரிய பீடாதிபதி ஆதங்கம்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது கேட்கவும் பார்க்கவும், வாசிக்க கிடைப்பதை பார்க்கும் போது அதனை பற்றி கதைக்க முடியாத நிலைமை உருவாகியுள்ளதாக அஸ்கிரிய மாநாயக்கர் கலகம அத்ததஸ்சி தேரர் தெரிவித்துள்ளார்.**

தம்புள்ள ரஜமஹா விகாரையின் நடு விகாரை நேற்று ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

குடிமக்களை குணப்படுத்த பௌத்த மதகுருமார் முன்வர வேண்டும். பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதில் பணம் உள்ளவர்களுக்கும் கிராமங்களில் உள்ளவறியவர்களுக்கும் வித்தியாசங்கள் உள்ளன.

அத்துடன் நாட்டின் சிங்களவர்களுக்கு என்ன நடந்தது என்பதை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் மாநாயக்க தேரர தெரிவித்தார்.(இ-7)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர்தொழில்நுட்ப பிரிவின் சேவை பதவிகளுக்கு ஆட்சேர்த்தலுக்காக தகைமை பெற்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பம்ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையின் போது சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத்திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

➢ ➢ ➢ ➢ ➢ ➢ ➢

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஊடாக நடத்தப்படுகின்ற இரண்டு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் மூன்றிலும் கட்டாயமாக திறமைச்சித்தியும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களுடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

இங்குஒரேஅமர்வில்மூன்று பாடங்களில்திறமைச்சித்திகளுடன் ஆகக் குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தியடைந்து இருத்தல் வேண்டும். மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதீகவியல் விவசாயம், உயிரியல்விஞ்ஞானம்போன்ற பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம்ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 17 வயதுக்கு குறையாதவராகவும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி), கால்நடை உற்பத்தி சுகாதாரக் திணைக்களம், த.பெ.இலக்கம் 13, பேராதனை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும். மேலதிக தகவல்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

### எதிர்பார்ப்பை சீர்குலைத்த அமைச்சர் மலிக் சமரவிக்ரம

அபிவிருத்தி வழிமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக விவகார அமைச்சர் மலிக் சமரவிக்ரம. அமைச்சரவையில் தாக்கல் செய்ய உள்ள அமைச்சரவை பத்திரம் காரணமாக பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால மற்றும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் எதிர்பார்ப்புகள் சீர்குலைந்து வருவதாக தெரியவருகிறது.

அமைச்சர் மலிக் சமரவிக்ரம. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவி உட்பட நிறுவனத்தின் உயர்பதவிகளுக்கு அரசியல்வாதிகள் போட்டியிட தடைவிதிக்கும் ஷரத்து ஒன்றை உள்ளடக்கிய யோசனையை அமைச்சரவையில் தாக்கல் செய்யவுள்ளார்.

இந்த அமைச்சரவை பத்திரம் காரணமாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவராகும் எதிர்பார்ப்பில் இருக்கும் திலங்க சுமதிபால மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோரின் எதிர்பார்ப்பு சீர்குலைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நிலவும் பனிப்போரின் ஒரு கட்டமாகவே இந்த தடை கொண்டு வரப்படுவதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

### உள்ளூராட்சி தேர்தல் குறித்து

# ஐ.தே.க. - ஸ்ரீல.சு.கவுக்கு இடையில் கருத்து மோதல்

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் திகதி மற்றும் நடைபெறும் முறை தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டுக்கும் இடையில் பெரிய அளவிலான கருத்து மோதல் ஒன்று ஆரம்பித்துள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியினால் உள்ளூராட்சித் தேர்தல்கள் வரம்பிடும் வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியிடப்பட்டது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 3 (ஏ) பிரிவிற்கமைய ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ள அதிகார விதிமுறைகளில் உள்ளூராட்சித் தேர்தல்கள் வரம்பிடுதல் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய தேர்தல்கள் புதிய தேர்தல் முறைக்கமைய நடத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அறிவித்துள்ள நிலையில், உள்ளூராட்சி தேர்தல்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் நடைபெற வேண்டும் என்பது ஐக்கிய தேசிய கட்சியின் பெரும்பான்மை விருப்பமாகும்.

எப்படியிருப்பினும், மார்ச் மாதத்திற்கு முன்னர் எதிர்பாராத திகதி ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளூராட்சித் தேர்தல்களுக்காக அறிவிக்கவுள்ளதாக குறித்த அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல்களுக்காக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தனியாக போட்டியிட வேண்டும் எனவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சி தேர்தல் விவகாரத்திற்கு செயல்மிகு தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்பது கட்சி பெரும்பான்மையினரின் கருத்தாகவுள்ளன.

இதற்கிடையில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் செயற்பாடு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை வெற்றி பெற செய்தலுக்கான செயற்பாடுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்து விட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைதியாக இருப்பதற்கு தீர்மானித்துள்ளார் என விமல் வீரவன்சவின் இணையத்தளம் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7)

### போதையிலுள்ள சாரதியை கண்டுபிடிக்க நவீன பலூன்

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த பலூன் தற்பொழுது நவீனமயப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட பலூன் அல்கொலைசர் குழாயினால் ஊதப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

புதிய முறையில்பலூன்சாதாரணமாக சந்தேக நபரினால் ஊதச் செய்யப்பட்டு பின்னர் அல்கொலைசர் குழாயை பலூனில் பொருத்தி காற்றை வெளியேற்றி பரிசோதனை நடத்தப்படுவதாகவும் பொலிஸர் தெரிவித்தனர.

பழைய பலூனில் பரிசோதனையின் பின்னர் சீல் வைக்கப்பட வேண்டியிருந்ததாகவும், புதிய பலூன் பரிசோதனையின் போது அவ்வாறு சீல வைக்கத் தேவையில்லையெனவும் பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-7)

# சட்டவிரோதமான முறையில் இளைஞர்கள் கைதாகினர்

## பொலிஸார் மீது குற்றச்சாட்டு

கொட்டதெனியாவ சிறுமி சேயாவின் கொலை தொடர்பில் அப் பிரதேசத்தை சேர்ந்த பல இளைஞர்களை பொலிஸார் சட்ட விரோதமான முறையில் கைது செய்து தாக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

கொட்டதெனியாவ, அக்ரன கஹறா ஊரை சேர்ந்த கிட்டத்தட்ட 10 இளைஞர்களை இவ்வாறு கைது செய்து தாக்கியுள்ள நிலையில் குறித்த இளைஞர்களை பல சந்தர்ப்பங்களில் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு கைது செய்யப்பட்டாலும் 17 வயதுடைய பாடசாலை மாணவர் மற்றும் ஒரு குழந்தையின் தந்தையை மாத்திரமே நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ள நிலையில் மேலும் கைது செய்த 3 இளைஞர்களை 4 நாட்கள் தடுத்து வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சிறுமி சேயாவின் கொலை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் போது கொட்டதெனியாவ பொலிஸார் செயற்பட்ட முறை தொடர்பில் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

# வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர்களின் சம்மேளனம் உருவாக்கம்

## வ.மா. போக்குவரத்து அமைச்சர் தலைமையில் நேற்று தெரிவு

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்தில் மாவட்டங்களுக்கு இடையில் பேருந்து சேவைகளை வழங்குகின்ற பேருந்து உரிமையாளர்களுக்கு இடையிலான சம்மேளன உருவாக்கம் நேற்று காலை 11 மணியளவில் வட.மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றது.



இது தொடர்பில் தெரியவருவதாவது,

இதுவரை காலமும் வன்னி மாவட்டங்களுக்கு இடையில் பேருந்து சேவைகளை வழங்குகின்ற பேருந்து உரிமையாளர்களுக்கு இடையில் உருவாக்கப்பட்ட ஒன்றியம் சில காரணங்களினாலும் முரண்பாடுகளினாலும் நீண்டகாலமாக இயங்காத நிலையில் காணப்பட்டது.

இந்நிலைமையை தீர்த்து வைத்து ஒன்றியத்தை இயங்க வைக்க வேண்டுமென அமைச்சரினால் பல்வேறுபட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன.


இருந்தும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட தீர்க்க முடியாத முரண்பாடுகள் காரணமாக ஒன்றியத்தை மீள இயக்க வைக்க முடியவில்லை.

இருந்தும் வடக்கு மாகாணத்தில் மாவட்டங்களுக்கு இடையில் பேருந்து சேவைகளை வழங்கி வருகின்ற உரிமையாளர்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்பது மட்டுமல்லாது பொது மக்களுக்கு தரமான பாதுகாப்பான சேவைகளை வழங்க வேண்டும் என்பதற்காக வடக்கு மாகாணத்தை பிரதிபலிக்கும் முகமாக பேருந்து உரிமையாளர்களை உள்ளடக்கியதான சம்மேளனம் ஒன்றின் உருவாக்கம் காலத்தின் தேவையாக இருந்தது.

இதனையடுத்து நேற்றையதினம் வெளி மாவட்டங்களுக்கு இடையில் போக்குவரத்து சேவைகளை வழங்குகின்ற தனியார் பேருந்து உரிமையாளர்களை உள்ளடக்கியதான சம்மேளனம் ஒன்று தலைவர், செயலாளர், உப-தலைவர், உப- செயலாளர், பொருளாளர் உட்பட 15 உறுப்பினர்களை கொண்ட புதிய நிர்வாகம் பலத்த எதிர்ப்புகள், பிரச்சினைகள் ஆகியவற்றிற்கு மத்தியில் மேற்படி விடயங்கள் அமைச்சரின் தலைமையில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டு நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இதில் குறிப்பாக 5 மாவட்டங்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட்டு மேற்படி 5 பிரதான பொறுப்புக்களில் உள்ளவர்கள் 5 மாவட்டங்களுக்கும் பொறுப்பானவர்களாகவும் அது தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து 2 உறுப்பினர்கள் தெரிவாகினர்.


(2-9-15-281)




# வவு.வில் பொலிஸாருக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வு

## 424 தமிழ் இளைஞர்கள் பங்கேற்பு

(குருமன்காடு)



வடக்கு மாகாண பொலிஸ் நிலையங்களில் பொது மக்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பி சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக தமிழ் பேசும் இளைஞர்களை பொலிஸ் சேவைக்குள் இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நேற்று காலை வவுனியா காமினி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து பொலிஸ் சேவைக்கு விண்ணப்பித்திருந்த 424 தமிழ் இளைஞர்கள் இந்த நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஈ.எம். எம்.ஏக்கநாயக்க உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். இந்நிலையில் நேற்றைய தினம் பொலிஸ் பணிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் முற்றிலும் வடக்கு மாகாண பொலிஸ் நிலையங்களில் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

# காணிப் பிரச்சினை கத்திக்குத்தில் முடிவு

(முள்ளியவளை)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்து சம்பவத்தில் முடிவடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் முள்ளியவளை பிரதேச சபைக்கு அண்மையாக இடம்பெற்றது.

இதில் முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவராசா யசோ (வயது 32) என்ற குடும்பஸ்தரே கத்திக்குத்துக்கு இலக்காகி மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதுதொடர்பில் தெரியவருவதாவது,

மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவி வந்த காணிப்பிரச்சினை வாய்த்தர்க்கமாக மாறியதை அடுத்தே இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

சம்பவம் அறிந்த முள்ளியவளை பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

மற்றைய நபர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளதுடன் அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-300)

# பட்டினிச்சாவுக் குற்றத்துக்கு ஆளாகாமல் அரசை இரணைமடுக்குளம் காப்பாற்றியது

## வ.மா. விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு





இலங்கை அரசு இன அழிப்பை மேற்கொண்ட குற்றச்சாட்டுக்கும் மனித உரிமை மீறல்களை நிகழ்த்திய குற்றச்சாட்டுக்கும் ஆளாகிச் சர்வதேசத்தின் முன்னால் இன்று தலைகுனிந்து நிற்கிறது. இக்குற்றச்சாட்டுக்களோடு இலங்கை அரசு தமிழ் மக்களைப் பட்டினியால் கொலை செய்த பட்டினிச்சாவுக் குற்றச்சாட்டுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருக்கும். அவ்வாறு ஆளாகாமல் இலங்கை அரசை இரணைமடுக்குளமே காப்பாற்றியது என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து விவசாய உள்ளீடுகளை வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிமனையில் நடைபெற்றது.

பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் வன்னியில் 75 ஆயிரம் பேர் வரையிலேதான் உள்ளார்கள் என்று அறிவித்த இலங்கை அரசாங்கம், அவர்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருட்களை மாத்திரமே வன்னிக்குள் எடுத்துச் செல்ல அனுமதித்தது. ஆனால், போர் முடிந்தபோது வன்னி முற்றுகைக்குள் இருந்து 3 இலட்சம் பேர் வரையில் வெளியேறினார்கள். அரசினால் அனுப்பி வைத்த உணவை மாத்திரமே நம்பியிருந்தால் இவர்கள் எல்லோரும் பட்டினிச் சாவால் இறந்திருப்பார்கள்.

போர்க்காலத்தில் கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவுக்கு மக்கள் இடம்பெயரும்போது தங்கள் உடைமைகளை விட்டுச் சென்றார்கள். ஆனால் சேமித்து வைத்திருந்த நெல்லையும் அரிசியையும் எடுத்துச் சென்றார்கள். இந்த நெல்லும் அரிசியும்தான் பட்டினிச்சாவில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றியது.

வடக்கின் நெற்களஞ்சியம் என்று கிளிநொச்சி மாவட்டத்தைக் குறிப்பிடலாம். வடக்கின் ஏனைய மாவட்டங்களை விட கூடுதல் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டமாக கிளிநொச்சி உள்ளது.

இங்கு 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கையும் 15 ஆயிரம் ஏக்கரளவில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படுகிறது. இதில் இரணைமடுக்குளத்தின் பங்களிப்பு மிகப்பெரியது. அந்த வகையில் பட்டினிச்சாவுக் குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் இலங்கை அரசை இரணைமடுக்குளமே காப்பாற்றியுள்ளது.

அண்மையில் இரணைமடுக்குளத்து அருகாமையில் இலங்கை ஜனாதிபதி தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அப்போது எமது விவசாயிகளைக் கௌரவிக்கும் முகமாகவே தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தை கிளிநொச்சியில் ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டிருந்தார். இலங்கை அரசாங்கமும் பட்டினிச்சாவுக் குற்றச்சாட்டு ஏற்படாமல் தன்னை காப்பாற்றியதற்காக இரணைமடுக்குளத்துக்கு நன்றி உடையதாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (2)






யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து இளைஞர் மன்றத்தினால் முல்லைத்தீவு இனிய வாழ்வு இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்கு பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மன்றத்தினால் குடைகள்-50, சாப்பாட்டுப் பெட்டி-50, மழைக் கவசம்-50 என்பன வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மனோரமா மறைவு மிகப்பெரிய இழப்பு

## ஜெயலலிதா இரங்கல்

மனோரமாவின் மறைவு மிகப்பெரிய இழப்பு என முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பழம்பெரும் திரைப்பட நடிகை மனோரமா உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் நள்ளிரவு காலமானார் என்ற செய்தி அறிந்து நான் மிகுந்த மனவேதனை அடைந்தேன்.

தமிழ்த் திரையுலகினராலும், திரைப்பட ரசிகர்களாலும் "ஆச்சி" என அன்போடு அழைக்கப்படும் மனோரமா இந்தியத் திரைப்படத் துறையில் மாபெரும் சாதனை படைத்தவர். மேடை நடிகையாக தன்னுடைய கலையுலக வாழ்க்கையைத் தொடங்கி, சினிமாவில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், சிவாஜி என அன்றைய தலைமுறை கதாநாயகர்கள் மற்றும் இன்றைய தலைமுறை கதாநாயகர்களுடன் 1500 திரைப்படங்களுக்கு மேல் நடித்து சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் திரையுலகை ஆட்சி செய்தவர் மனோரமா.

தமிழ் சினிமாவில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்து திரைப்படத்துறை வரலாற்றில் மாபெரும் சாதனை படைத்த மனோரமா 1958 ஆம் ஆண்டு கவிஞர் கண்ணதாசன் இயக்கிய "மாலையிட்ட மங்கை" திரைப்படத்தில் நடித்த முக்கிய வேடத்தின் மூலம் தமிழ் திரையுலகத்திற்கு அறிமுகமானார். இவர் கதாநாயகியாக 1963 ஆம் ஆண்டு வெளிவந்த "கொஞ்சும் குமரி" என்ற படத்தில் நடித்துள்ளார்.

பொம்மலாட்டம், சூரிய காந்தி, பட்டிக்காடா பட்டணமா, கலாட்டா கல்யாணம், அன்பேவா, தில்லானா மோகனாம்பாள், சின்னத்தம்பி, உன்னால் முடியும் தம்பி, சம்சாரம் அது மின்சாரம், நடிகன் போன்ற எண்ணற்ற திரைப்படங்களில் இவரது நடிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது.

பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் மனோரமா. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் என்னுடன் பல படங்களில் நடித்துள்ளார் மனோரமா. அவர் என்னுடன் நடித்து வெளி வந்த கந்தன் கருணை, கலாட்டா கல்யாணம் போன்ற படங்களில் அவருடன் நடித்த அனுபவங்கள் இன்றும் எனது நினைவில் பசுமையாக உள்ளன.

என்னுடன் அவர் நடித்து அன்று வெளிவந்த பொம் மலாட்டம் திரைப்படத்தில் அவரது சொந்தக் குரலில் பாடிய "வா வாத்தி யாரே வூட்டாண்ட" என்ற பாடலும், சூரிய காந்தி படத்தில் அவர் பாடிய "தெரியாதோ நோக்கு" என்ற பாடலும் அன்று பட்டி தொட்டிகள் அனைத்திலும் பிரபலமானது ஆகும். இத்துடன் 300க்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியுள்ளார்.

இவர் திரைப்படத் துறையில் ஆயிரம் திரைப் படங்களுக்கு மேல் நடித்ததற்காக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். கலைத் துறையில் இவர் ஆற்றிய ஈடு இணையற்ற பங்களிப்பிற்காக மத்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருது, தேசிய விருது மற்றும் தமிழக அரசின் சார்பில் கலைமாமணி விருது என எண்ணற்ற விருதுகளைப் பெற்றவர்.

மனோரமாவின் மறைவு தமிழ் திரைப்படத் துறைக்கு மிகப் பெரிய இழப்பாகும். இவருடைய இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது.

மனோரமாவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ரசிகர்களுக்கும், திரைப் படத் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். என்றும் ஜெயலலிதா தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-7)

# யாரையும் சிறுமைப்படுத்தாத மனோரஞ்சிதம் மனோரமா

## கவிஞர் வைரமுத்து புகழஞ்சலி

சாதனை சிகரம் 'ஆச்சி' மனோரமா நேற்று முன்தினம் இரவு காலமானார். சென்னை தி.நகரில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு பல்வேறு தரப்பினரும் நேரில் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். இந்நிலையில், மனோரமாவின் மறைவுக்கு கவிஞர் வைரமுத்து புகழஞ்சலி செலுத்தியுள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மனோரமா ஒரு மனோரஞ்சிதப் பூ. மனோரஞ்சிதப்பூவுக்குத்தான் ஒரு வித்தியாசமான குண நலம் உண்டு. அதாவது, நாம் எந்த பூவை மனதில் நினைத்துக் கொண்டு மனோரஞ்சித பூவை நுகர்கிறோமோ, அது அந்த பூவின் வாசனையை அப்படியே வெளிப்படுத்தும். அதேபோல், மனோரமாவை நாம் ஒரு நகைச சுவை நடிகையாக பார்த் தோமானால், அவர் அதைப் போலவே பளிச்சிடுவார். ஒரு குணச் சித்திர நடிகையாக பார்த் தால், அதைப்போல் அப்படியே பளிச்சிடுவார். இதுபோல், எந்த மாதிரி அவரைப் பார்த்தாலும், அந்த பாத்திரமாகவே அவர் காட்சியளிப்பார்.

மனோரமா, பெரிய வரலாற்றுக்குக் சொந்தக்காரர். இந்த பெருமை எந்த நடிகைக்கும் கிட்டியதில்லை. மனோரமாவின் மறைவு தமிழ் திரையுலகுக்கு ஒரு மறைவு. என்னைப் பொறுத்தவரை ஒரு பாடகி மறைந்துவிட்டார் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. மனோரமா 4 தலைமுறை நடிகர்களுடன் பழகி வந்திருக்கிறார். ஆனால், அவர் யாரையும் புறம் பேசியதில்லை. யாரையும் சிறுமைப்படுத்தியதில்லை. இதை அனைவரும் பின்பற்ற வேண்டும். யாரும், யாரையும் புறம் பேசாதீர்கள், சிறுமைப்படுத்தாதீர்கள். அவரவருக்கு தெரியும், தங்களது வாழ்க்கை இதுதான் என்று. அப்படியிருக்கும்போது யாரையும் புறம் பேசுவதில் ஒரு பயனும் இல்லை. இதுதான் மனோரமா நமக்கு எல்லாம் விட்டுச் சென்ற ஒரு பாடமாக எல்லோரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார். (3-7)

### மனோரமாவின் வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு:- 26.05.1937, மன்னார்குடி, தமிழ்நாடு
இயற்பெயர்:- கோபிசாந்தா
கணவர்:- எஸ்.எம்.இராமநாதன் (மணமுறிவு)
பிள்ளை:- பூபதி
இறப்பு:- 10.10.2015
புனைபெயர்:-ஆச்சி, மனோரமா
நடித்த படங்கள்:- 1500
முதல்படம் : மாலையிட்ட மங்கை (1958)
கதாநாயகியாக: கொஞ்சும் குமரி (1963)
பாடிய பாடல்கள்: 300








அரசியல் மற்றும் திரைப் பிரமுகர்கள் மனோரமாவிற்கு அஞ்சலி செலுத்திய போது...








# "மாலையிட்ட மங்கை" மனோரமா காலமானார்

தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டம் மன்னார் குடியில் 1937ஆம்ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி பிறந்தவர் நடிகை மனோரமா. அவரது இயற்பெயர் கோபிசாந்தா. அவருடைய குடும்பம் மன்னார்குடியில் இருந்து காரைக்குடி அருகேயுள்ள பள்ளத்தூருக்கு இடம் பெயர்ந்தது.

குடும்பச்சூழல் காரணமாக 12 வயதிலேயே மேடை நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். நாடக நடிகையான போது அவருக்கு மனோரமா என்கிற பெயர் சூட்டப்பட்டது. நடிப்பு. பாட்டு. வசன உச்சரிப்பு. நடனம் என்று அனைத்திற்காகவும் அவர் நாடக உலகில் பாராட்டப்பட்டார்.

வைரம் நாடக சபா உள்ளிட்ட தொழில்முறை நாடக நிறுவனங்கள் பலவற்றில் நடித்துக் கொண்டிருந்த மனோரமாவை மேடை நாடகக் கலைஞராக பெரிய அளவில் அடையாளம் காட்டியது திராவிட இயக்கத்தின் பிரசார நாடகங்கள்தான்.

திருநிறுவனர்அண்ணா, மு. கருணாநிதி. எஸ் எஸ் ராஜேந்திரன் உள்ளிட்ட பல முன்னணி திராவிட



இயக்கத்தலைவர்களுடன் அவர் மேடை நாடகங்களில் நடித்தார். அவரது தெளிவான வசன உச்சரிப்பும். உச்சஸ்தாயியில் அநாயாசமாக பாடும் வல்லமையும் அவருக்கு ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுத்தந்தன.

**மாலையிட்ட மங்கையாக திரைப்படத்துறைக்குள் வந்தார்.**

நாடக நடிகையாக இருந்த மனோரமாவை கவியரசு கண்ணதாசன் திரை யுலகில் அறிமுகம் செய்தார். கண்ணதா சன் தயாரித்து 1958 ஆம்அண்டுவெளியான மாலையிட்ட மங்கை என்கிற திரைப் படத்தில் அறிமுக மானார் மனோரமா.

மனோரமா முதன் முதலில் கதாநாயகியாக நடித்த திரைப்படம் "கொஞ்சும் குமரி". மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் தயாரித்து 1963ஆம் ஆண்டு வெளியானது இந்த திரைப்படம்.

அதேசமயம் மனோரமா என்ற மாபெரும் நடிகையின் நடிப்புத்திறன் பெரிதும் வெளிப்பட்ட முக்கிய திரைப்படமாக தில்லானா மோகனாம்பாள் படத்தையே திரை விமர்சகர்கள் இன்றளவும் குறிப்பிடுகிறார்கள்.

அந்த திரைப்படத்தின் கதாநாயகன் சிக்கல் சண்முகசுந்தரமாக நடித்த சிவாஜிக்கும். திருவாரூர் மோகனாம்பாளாக நடித்த பத்மினிக்கும் சற்றும் சளைக்காமல். 'ஜில் ஜில் ரமாமணி என்ற நகைச்சுவைக் கதாபாத்திரத்தில் மிகச்சிறப்பாக நடித்துப் பாராட்டைப் பெற்றார் மனோரமா.

ஜில் ஜில் ரமாமணி கதாபாத்திரம் நகைச்சுவை நடிகையாக மனோரமா புகழ்பதித்த பல திரையுலக பாத்திரங்களில் முக்கியமானதாக இன்றுவரை பேசப்படுகிறது.

அரை நூற்றாண்டுகாலம் தமிழ்த் திரையுலகின் கதாநாயகர்கள். நகைச்சுவை நடிகர்கள். குணச்சித்திர நடிகர்கள் ஆகியோருக்கு ஈடு கொடுத்து நடித்து புகழ் பெற்றவர் மனோரமா.

அவர் திரைத்துறையில் அறிமுகமானபோது தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னர்களாக திகழ்ந்த சிவாஜி. எம்.ஜி.ஆர் படங்களில் தொடங்கி கமல். ரஜினி படங்களில் அவர்களுக்கு போட்டி போட்டு நடித்தவர். நாகேஷ். சோ. தேங்காய் சீனிவாசன். தங்கவேலு. சுருளிராஜன். கவுண்டமணி எனப் பல நகைச்சுவை நடிகர்களுடன் நடித்தவர். பாக்கியராஜ். சத்யராஜ் என்று பலதரப்பட்ட நடிகர்களுடனும் நடித்திருக்கிறார் மனோரமா. நகைச்சுவையாக மட்டுமல்லாமல் குணச்சித்திர வேடங்களிலும் மனோரமாவின் நடிப்பு முத்திரை பதித்தது. தனித்துவம் வாய்ந்தது. நகைச்சுவைக்கு மட்டுமல்ல நவரசங்களுக்கும் நாயகி என பாராட்டப்பட்டார்.

நகைச்சுவை நடிப்போடு அவரது தனித்துவமான குரலில் பாடிய நூற்றுக்கணக்கான பாடல்களும் இன்றளவும் ரசிகர்கள் நினைவில் நிற்கின்றன. மனோரமாவைத் திரையில் முதலில் பாட வைத்தவர் இசையமைப்பாளர் ஜி.கே.வெங்கடேஷ். மகளே உன் சமத்து என்ற படத்தில் 'தாத்தா.. தாத்தா பிடிகொடு. இந்த தள்ளாத வயசிலே சடுகுடு' என்று எல்.ஆர். ஈஸ்வரியுடன் சேர்ந்து பாடினார் மனோரமா.



பொம்மலாட்டம் படத்தில் வி.குமாரின் இசையில் 'வா.. வாத்யாரே வூட்டாண்ட... நீ வராங்காட்டினா வுடமாட்டேன்" என்று சென்னை வழக்கில் மனோரமா பாடிய பாடல் கருந்தேள் கண்ணாயிரம் படத்தில். 'பூந்தமல்லியிலே ஒரு பொண்ணு பின்னாலே.. நான் போயி வந்தேன்டி அவ பொடவ நல்லால்லே.." என்று அவர் பாடிய பாடல் பாட்டி சொல்லைத் தட்டாதே படத்தில் சந்திரபோஸ் இசையில். 'டெல்லிக்கு ராஜானாலும் பாட்டி சொல்லைத் தட்டாதே' என்ற பாடல் ஏ.ஆர்.ரஹ்மான இசையில் மே மாதம் படத்தில். 'மெட்ராஸை சுத்திப்பார்க்கப் போறேன்' என்கிற பாடல் என மனோரமாவின்கம்பீரமான குரலில் ஒலித்தபாடல்கள் இன்றளவும் பிரபலமாக இருககின்றன.

**ஆயிரம் படங்களைத் தாண்டிய ஆச்சி**

தமிழ் தவிர தெலுங்கு. மலையாளம். இந்தி உட்பட 1000 படங்களுக்கு மேல் நடித்து கின்னஸ் சாதனை படைத்திருப்பவர் மனோரமா. அவர் நடித்த நாடகங்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கு அதிகம். உலகின் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத் தியவர் அவர். பத்மஸ்ரீ கலை மாமணி விருதுகளுடன்சிறந்த குணச்சித்திர நடிகைக்கான இந்திய தேசிய விருதினையும் மனோரமா பெற்றிருக்கிறார்.

தமிழ் திரைப்படத்துறையில் கலைவாணரில் தொடங்கி இன்றைய இளம் நகைச்சுவை நடிகர்கள் வரை ஆண் நகைச்சுவை நடிகர்களுக்கு என்றொரு தொடர்ச்சியான நெடிய பாரம்பரியம் உண்டு.

ஆனால். நகைச்சுவை நடிகைகளுக்கு அப்படியானதொரு தொடர்ச்சியான பாரம்பரியம் இல்லை என்கிற விமர்சனம் உண்டு. தமிழில் நகைச்சுவை நடிகைகளின் எண்ணிக்கை குறைவு என்பது மட்டுமல்ல. நகைச் சுவை நடிகைகள் நீடித்து நிலைப்பது இல்லை. நகைச்சுவைக்கென வரும் நடிகைகள் குறைவான காலத்தில் கிடைக்கும் வாய்ப்புகளில் பிரகாசித்து விட்டு ஒதுங்கிவிடுவார்கள்.

ஆனால். மனோரமா அதிலும மாறுபட்டவர். அரை நூற்றாண்டுகாலத்திற்கும் மேலாக அசைக்கமுடியாத நடிகையாக தமிழ்த்திரையுலகில் நிலைத்திருந்தவர் ஆச்சி என்று அன்பு கலந்த மரியாதையுடன் அழைககப்பட்ட நடிகை மனோரமா. அவரின் புகழ் அடுத்த நூற்றாண்டிலும் பேசப்படும் என் கிறார்கள் திரை விமரசகர்கள்.



## 'பெண் சிவாஜி' மனோரமா பற்றிய சுவாரஸ்ய தகவல்கள்

நகைச்சுவை அரசியை தமிழகம் இழந்து விட்டது. தமிழகத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் மனோரமா உறுப்பினர் போலத்தான். கிட்டத்தட்ட தங்களுக்கு நெருக்கமான ஒருவரை இழந்து விட்டது போன்ற உணர்வில் தமிழகம் தத்தளிக்கிறது.

நகைச்சுவை அரசி மனோராமா பற்றிய சில சுவாரஸயத் தகவல்கள்.

அகத்தின் அழகு முகத்தில தெரியும் என்ற பழமொழிக்கு ஏற்ப. மனதை மகிழ்ச்சியாக வைத்திருந்தால். உடலும் இளமையாக இருக்கும் என்று மனோரமா தனது இளமை பற்றி கூறியுள்ளார்.

தமிழ் சினிமாவில் அதிகளவில் "அம்மா" கரக்டர்களில் மனோரமா நடித்துள்ளார்.

டிவி" நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய எழுத்தாளர் சோ". மனோராமாவை "பெண சிவாஜி" என்று குறிப்பிட்டு பேசினார்.

தில்லானா மோகனாம்பாள். அனுபவிராஜா அனுபவி. சம்சாரம் அது மின்சாரம். சின்னக்கவுண்டர். நடிகன். சின்னத்தம்பி. கிழக்கு வாசல் போன்ற படங்களில் நடிகர் மனோரமா முத்திரை பதித்திருந்தார்.

1985ஆம் ஆண்டு மனோரமா ஆயிரம் படங்களில் நடித்து விட்டார். மொத்தத்தில் 1500 படங்களுக்கு மேல் அவர் நடித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது மனோரமாவுக்கு வழுங்கப்பட்டது.

1964 ஆம்ஆண்டு மனோரமா- நடிகர் எஸ்.எம். ராமநாதன் திருமணம் திருச்செந்தூர் கோயிலில் திருமணம் நடைபெற்றது. 1966 ஆம் ஆண்டு அவரிடம் இருந்து விவாகரத்து பெற்றார் மனோரமா. ஒரே மகன் பூபதி.

பெற்றோர் வைத்த பெயர் கோவிந்தம்மாள். பள்ளத்தூர் பாப்பா என்றும் அழைப்பார்கள். செட்டிநாட்டுப் பள்ளத்தூரில் வளர்ந்ததால் "ஆச்சி" என்று அன்பு அடைமொழி சேர்ந்துகொண்டது.

"பாட்டி சொல்லை தட்டாதே" என்ற படத்தில் "தில்லிக்கு ராஜானாலும் பாட்டி சொல்லைத் தட்டாதே" என்ற பாடல் பட்டி தொட்டியெல்லாம் எதிரொலித்தது.

உணவுக் கட்டுப்பாடு ஆச்சிக்கு அதிகம். செவ்வாய். வெள்ளி அசைவம் கிடையாது. புதன். ஞாயிறு கண்டிப்பாக அசைவம் உண்டு!

நெருங்கிய தோழிகளான எம்.என்.ராஜம். ஸ்ரீப்ரியா. இருவரும் ஆச்சியின் உடல் நலத்தில் மிகவும் அக்கறை எடுத்துக்கொள்வார்கள். அடிக்கடி ஆச்சியைச் சந்திப்பவர்கள் கமல். ரஜினி!

வீட்டில் செல்லமாகக் கூப்பிடுவது "பாப்பா". ரசிகர்களுக்கு "ஆச்சி". உடன் நடிக்கும் நடிகர்களுக்கு "அம்மா"!

முருகனின் அடிமை. ஆறுபடை வீடுகளும் அவ்வளவு இஷ்டம்.

மனோரமாவின் அம்மா இறந்த 16 ஆவது நாள் சடங்குகளை "சகோதரன்" என்ற முறையில். உடனிருந்து செய்தவர் சிவாஜி கணேசன். இந்த நெகிழ்வில் சிவாஜியை வாய் நிறைய. "அண்ணே" என்றுதான் அழைப்பார் ஆச்சி!

காரில் செல்லும்போது. "மெள்ளப் போ. மெள்ளப் போ" என ஓட்டுநரைக் கட்டுப்படுத்திக்கொண்டே இருப்பார். ஆனாலும். எந்த நிகழ்ச்சிக்கும் சரியான நேரத்துக்குச் செல்ல வேண் டும் என்பதில் குறியாக இருப்பார்!

ஆச்சி நடித்ததில் எல்லோருக்கும் பிடித்த படம் "தில்லானா மோகனாம்பாள்". ஆச்சிக்கே பிடித்தது "சின்னக் கவுண்டர்". "நடிகன்". ஒரு துளி விரசம் இல்லாமல "நடிகன்" படத்தில் நடிச்சது எனக்குப் பெருமையான விஷயம்" என்பார்!

பேச்சில் புலி. அவ்வளவு விவரமாக எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பார். வார இதழ்கள் ஒன்றுவிடாமல் படித்துவிடுவார். படித்தது மூன்றாம் வகுப்பு வரைதான். ஆனால். ஆச்சிக்குத் தெரியாதது எதுவும் இல்லை!

மனச்சோர்வு இருந்தால கூட பட்டுப் புடவை. திருநீறு மணக்கும் நெற்றி. அகலப் பொட்டுடன் மங்களகரமாகத்தான் வெளியே கிளம்புவார்.

அரசியல் சார்பு இல்லை என்பதால் கருணாநிதி. ஜெயலலிதா இருவரிடமும் அன்பு பாராட்டுவார்!

"ஆச்சி இன்டர் நஷனல்". "அல்லி ராஜ்யம்". "காட்டுப் பட்டிச் சத்திரம்" என சின்னத்திரை தொடர்களிலும் வெற்றிவலம் வந்தவர்!

இவரது நடிப்புத் திறமை. நாடகக் கலைக்கான பங்களிப்பைப்பாராட்டி அண்ணா. நெடுஞ்செழியன். கருணாநிதி. அன்பழகன். ஈ.வி.கே.சம்பத். கண்ணதாசன் போன்றோர் பேசியதை இன்னமும் மனதில் சேமித்துவைத்துள்ளார் ஆச்சி!

"வணக்கம். ஆச்சி தாங்க பேசுறேன். பேசலாமா" என முன் அனுமதி வாங்கிப் பேசுகிற நயத்தக்க நாகரிகம் ஆச்சி ஸ்பெஷல். சொல்ல வந்ததை ரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விடுவார்!

"மஞ்சள் குங்குமம்" என்ற படத்தில் நடிக்கும் போது. மனோரமாவை கட்டு விரியன் பாம்பு கடித்து விட்டது. சிகிச்சைக்கு பின் மனோரமா உயிர்பிழைத்தார் அதன பின்னரும பல வெற்றிடங்களில் நடத்திருந்தார் ஆச்சி மனோரமா.

# தமிழ் சினிமா வரலாறு

## 25 "ராஜமுக்தி" அதிர்ச்சி தோல்வி


...பாகவதர் சிறை செல்வதற்கு முன், ராஜயோகி உட்பட சில படங்களுக்காக நாலைந்து பாடல்கள் பதிவாகியிருந்தன. அந்தப் பாடல்கள் இப்படத்தில் பயன்படுத்தப்பட்டன.

மித்ரதாஸ் டைரக்ஷனில் படம் வளர்ந்துகொண்டிருந்தது. அந்த சமயத்தில் பாகவதரின் கண் பார்வை மங்கியது. பார்வையைப் பெற அவர் வைத்தியர்களை நாடாமல் சமயபுரம் மாரியம்மன் கோவிலில் தங்கி அம்மன் அருளை வேண்டினார்.

பார்வை ஓரளவு திரும்பியது.



புதுவாழ்வு படத்தில் பாகவதர்



புதுவாழ்வு படத்தில் பாகவதர்

கச்சேரிகள் நடத்தலானார். 1959 ஒக்டோபரில் பொள்ளாச்சியில் கச்சேரி நடத்தியபின் அவரை ஒரு சாமியார் சந்தித்தார். நீங்கள் பூரண குணம் அடைய ஒரு மருந்து தருகிறேன் என்று கூறி சுரைக்காய் கொடியில் கஷாயம் தயாரித்துக் கொடுத்தார். அதைக் குடித்துவிட்டு சேலம் திரும்பிய பாகவதரின் உடல்நலம் பாதிக்கப்பட்டது.

அவரை சென்னைக்கு காரில் அழைத்துச்சென்று ஜெனரல் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்த்தனர்.

அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆயினும் பலன் இல்லை. தமிழ்த் திரை உலகின் முதல் பொற்காலத்தை உருவாக்கிய பாகவதர், 1959 நவம்பர் 1 ஆம் திகதி மாலை காலமானார். ஒரு சகாப்தம் முடிவடைந்தது.

அவர் உடல் திருச்சிக்கு கொண்டு போகப்பட்டு பெற்றோர் சமாதிக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டது.

பாகவதர் மறைவுக்குப் பின் வெளிவந்த சிவகாமி சிறப்பாக இருந்தும் தலைமுறை இடைவெளி காரணமாக சுமாராகவே ஓடியது.

கும்பகோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகம் நடைபெறுகிறது அல்லவா? மகாமகத்தின்போது பெரிய பொருட்காட்சியும் நடைபெறுவது வழக்கம். பொருட்காட்சியில் பாட்டுக் கச்சேரி, நாடகம் முதலான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.



கலை நிகழ்ச்சிக்களுக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பை டைரக்டர் கே.சுப்பிரமணியம் ஏற்றிருந்தார். மதுரையைச் சேர்ந்த ஒரு இளம் பாடகியை தனக்குத் தெரியும் என்றும் நல்ல குரல் வளம் படைத்த அந்தப் பாடகிக்கு கலை நிகழ்ச்சியில் பாடுவதற்கு வாய்ப்பு அளிக்குமாறும் சுப்பிரமணியத்திடம் எஸ்.டி.சுப்புலட்சுமி கேட்டுக்கொண்டார்.

அதன்படி அந்தப் பாடகிக்கு வாய்ப்பளித்தார். கே.சுப்பிரமணியம். மேடையில் மிக இளம் வயது பாடகி இடையே பெரும் ஏமாற்றம். இந்தச் சின்னப்பெண் எப்படி சிறப்பாக கச்சேரி நடத்த முடியும்? என்று அலட்சியமாக அமர்ந்திருந்தனர்.

இளம் பாடகி பாட ஆரம்பித்தார். கூட்டத்தினர் நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

ஆகா!

எவ்வளவு இனிமையான குரல்! சிரமமான கர்நாடக இசைப் ' பாடல்களை எவ்வளவு சரளமாகப் பாடுகிறார்! என்று வியந்தனர். ஒவ்வொரு பாடல் முடிவிலும் கைதட்டல் விண்ணை எட்டியது.

அந்த இடம் பாடகிதான் பிற்காலத்தில் இசையில் உலகப்புகழ் பெற்ற பாரத ரத்னா எம்.எஸ்.சுப்புலட்சிமி.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 293

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

....இதை ஒரு சமயம், அவரும் அவரது சீடர்களும் சூஃபி மதம் ஒரு மதமாக ஏற்றுக்கொள்ளப் படாத சில கிராமங்கள் வழியாக அலைந்து திரிந்து கொண்டிருந்தனர்.

முதல் கிராமங்கள் வழியாக அலைந்து திரிந்துகொண்டிருந்தனர். முதல் கிராமத்தில் மக்கள் அவர்களைப் பிச்சை எடுப்பதற்காகப் பழித்து மிகவும் சொற்பமான அளவு உணவையே அவர்களை நோக்கி வீசி எறிந்தான்.

இரண்டாவது நாள் மக்கள் அவர்களுக்கு எந்தவிதமான பிச்சையும் இட மறுத்தனர்.

மூன்றாவது நாள் அவர்கள் கடந்து சென்ற கிராம மக்கள் மிகவும் விரோதத்துடன் அவர்களைக் கம்புகளையும் கற்களையும் கொண்டு விரட்டியடித்தனர்.

அன்று இரவும் வழக்கம்போலவே ஜுன்னாயத் முழந்தாளிட்டு கடவுளுக்குத் தன் நன்றியுணர்வைச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்.

அவருடை சீடர்கள் அவரைக் கவனித்துக்கொண்டிருந்தனர். இதை அவர்களால் தாங்க முடியவில்லை. ஜுன்னாயத் ஏன் கடவுளுக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவர்கள் மிகவும் ஆவேசத்தில் இருந்தனர். குருவே! மூன்று நாட்களாக நாம் உணவில்லாமல் இருந்து



கொண்டிருக்கிறோம். இது நம்மை அந்த கிராமத்தை விட்டு நாயைப் போலத் துரத்தியடித்தனர்! அதற்காகத்தான் நீங்கள் உங்கள் நன்றியுணர்வைச் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறீர்களா? என்று அவர்கள் கூக்குரலிட்டனர்.

ஜுன்னாயத் அவர்களைப் பார்த்துச் சொன்னார், நீங்கள் மூன்று நாட்கள் பட்டினி கிடந்ததைப் பற்றிப்பேசுகிறீர்கள்.

ஆனால் முப்பது வருடங்களாக உங்களுக்கு உணவு கொடுத்ததற்காகக் கடவுளுக்கு என்றைக்காவது நன்றி சொல்லியிருக்கிறீர்களா?

இன்னொரு விடயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்; என்னுடைய நன்றியுணர்வானது எனக்கு எதுவும் கிடைத்ததற்காகவோ அல்லது கிடைக்காமல் போனதற்காகவோ அல்ல. அது வெறுமனே என்னுடைய இருப்புத் தன்மையின் ஆழமான மகிழ்ச்சியின் மற்றும் அன்பின் வெளிப்பாடு; அது தேர்ந்தெடுத்தலற்ற பிரார்த்தனையின் வெளிப்பாடு, அவ்வளவே!

உங்களால் உங்களுக்குள் தாங்க முடியாத நன்றியுணர்வுடன் வாழ முடிந்தால் வேறெதுவும் தேவைப் படாத ஒரு வெற்றிடத்தைக் கண்டு பிடித்துவிட்டீர்கள்.

நீங்கள் தியானத்திற்குள் விழுந்து விட்டீர்கள் என்று பொருள். பிறகு நீங்கள் வேறு எதைப் பற்றியும் கவலைப்படமாட்டீர்கள்.

நீங்கள் சரியான பாதையில் இருக்கிறீர்கள். உங்கள் வளர்ச்சிக்கு உங்கள் மனம் இனியும் ஒரு தடையாக இருக்காது.

உங்கள் மனம் மறைந்துவிட்டது. இனியும் உங்கள் மனம் உள்ளே வர முடியாது; ஏனெனில் நீங்கள் இதயத்தில் இருந்து தளும்பிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மனதிற்கு இடமேயில்லை. உங்கள் மனதிற்கு இடமில்லாதபோது அதிருப்தி எங்கேயிருந்து வரும்?

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# போர்க்குற்றவாளிகள் உண்மை சொன்னால் மன்னிப்பு

## சிங்கள ஊடகம் செய்தி

(கொழும்பு)

**போர்க்குற்றச் செயல் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுடன் தொடர்புடையவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியனவற்றுக்கு இடையில் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய உள்ளக விசாரணைப் பொறிமுறைமை உருவாக்கப்படவுள்ளது.

இந்த விசாரணைப் பொறிமுறைமையில் குற்றத்தை ஒப்புக்கொண்டு உண்மை கூறுவோருக்கு மன்னிப்பு வழங்கப்படும் என அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசாரணைப் பொறிமுறைமையின் முதல் கட்டமாக வழக்குத் தொடரக்கூடிய சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டு, அவை உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

மதத் தலைவர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட கருணைச் சபையினால் மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

உண்மையை ஒப்புக்கொள்ளத் தவறுவோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட உள்ளதாக குறித்த சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# அமைச்சுக்களை முகாமை செய்வதற்கு 16கண்காணிப்பு குழுக்கள் நிறுவப்படும்

(கொழும்பு)

அமைச்சுக்களை முகாமை செய்வதற்கு 16 கண்காணிப்பு குழுக்களை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் 50 அமைச்சுக்களினதும் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு இந்த 16 கண்காணிப்பு குழுக்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்தக் கண்காணிப்புக் குழுக்களின் உறுப்பினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட உள்ளனர். ஒவ்வொரு குழுக்களிலும் அனுபவம் மிக்கவர்கள் புத்திஜீவிகளை ஆலோசகர்களாக நியமித்துக்கொள்ள முடியும்.

தேவை ஏற்பட்டால் தற்காலிக அடிப்படையில் நிபுணத்துவம் மிக்கவர்களை நியமித்துக்கொள்ள முடியும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் இந்தக் குழுக்கள் நிறுவப்படவுள்ளன.

இதுவரையில் அமைச்சுக்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற ஆலோசனை செயற்குழுக்களையும் விட இந்த கண்காணிப்புக் குழுக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

அமைச்சுக்களின் நடவடிக்கைகளை முழு அளவில் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுப்பதற்காக இவ்வாறு கண்காணிப்பு குழுக்கள் நிறுவப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காட்டிக்கொடுப்போரை ஆசீர்வதிக்கும் மகிந்த

(கொழும்பு)

காட்டிக் கொடுப்பவர்களே நான் உங்களையும் ஆசீர்வாதம் செய்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

என்னையும் ராஜபக்ஷ குடும்பத்தையும் எல்லா விடயங்களிலும் காட்டிக் கொடுத்தேனும் தனது இருப்பினை தக்க வைத்துக் கொள்ள சிலர் முயற்சிக்கின்றனர்.

அவ்வாறானவர்களையும் நான் ஆசீர்வாதம் செய்கின்றேன்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இவ்வாறான சம்பவங்களை பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

எனக்கு போதியளவு அனுபவம் காணப்படுகின்றது. நிலைமைகளை நான் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.



அண்மையில் மிரிஹானவில் உள்ள தமது இல்லத்தில் அரசியல் தலைவர்கள் சிலரை சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவோரில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

வருடாந்தம் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெறுபவர்களில் பெண்களின் வீதம் அதிகரித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் பெண்களின் தொகை 40 வீதமாக காணப்பட்டதாகவும், தற்பொழுது இவ் வருடத்தில் 50 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரையில் அரச அனுமதி பெற்ற சாரதி பயிற்சி பாடசாலைகளினூடாக இலகுரக வாகனங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்துள்ளவர்களில் அதிகமானவர்கள் பெண்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் புதிதாக 25 ஆயிரம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி ஆணைக்குழு மீது சர்வதேசத்திற்கு நம்பிக்கையில்லை

மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான, காணாமற் போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் சர்வதேச சமூகத்திற்கு நம்பிக்கையில்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகளை வேறு ஓர் பொறிமுறைமைக்குள் உட்படுத்துமாறு சர்வதேச சமூகம் கோரி வருகின்றது.

ஆணைக்குழுவின் விசாரணைகள்நம்பகமானவைஎனஏற்றுக்கொள்ள சர்வதேச சமூகம் தயக்கம் காட்டி வருகின்றது. எனவே இந்த ஆணைக்குழு விரைவில் கலைக்கப்படும்.

அதற்கு பதிலீடாக புதியதொரு விசாரணைக் கட்டமைப்பு உருவாக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைகளுக்கு அமைய பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்வது அல்லது திருத்தங்கள் செய்வது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது என அவர் ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நம்புவோம் வெற்றி பெறுவோம்

கங்கையாற்றில் ஒரு புண்ணிய காலத்தில் ஆயிரக்கணக்கான பேர் நீராடிக் கொண்டிருந்த நேரம். கைலாயத்தில் பக்கம் இருந்த பரமேஸ்வரனைப் பார்த்து பார்வதிதேவி கேட்டாள் சுவாமி... இத்தனை பேர் பாவமும் இன்றோடு விட்டதா? இவர்கள் இனி பாவிகள் அல்லரா? அத்தனை பேரும் கைலாயம் வருவார்களா சுவாமி? அப்படியானால் இதற்கு முன் இப்படிக் குளித்தவர்கள் இங்கு வந்து சேரக் கைலையில் கூட்டம் நெரிய வேண்டுமே?

பார்வதி கேட்டு நிறுத்தியதும் சிவபெருமான் பொருள் பொதிந்த புன்னகை உதிர்த்தார். உமையம்மையின் ஓங்காரச் செவிகளில் ஏதோ இரகசியம் சொன்னார். அம்பிகை கலகல எனச் சிரித்தார். அடுத்த நொடி கயிலையில் இருவரையும் காணவில்லை!.

ஆனால் கங்கைக் கரையில் பழுத்த சுமங்கலி நின்றாள். வெள்ளத்தின் வேகத்தில் ஒரு சுழலின் மையத்தில் கிழவர் ஒருவர் சிக்கித் திணறுகிறார். அந்தப் பெருமாட்டி அலறினாள்... ஐயா... என் கணவரை யாராவது காப்பாற்றுங்கள் . அவருக்கு நீச்சல் தெரியாது. ஐயா... அவரைக் காப்பாற்றுங்கள். உடல் வலிமை உடையவர்கள், படித்தவர்கள், பாவ புண்ணிய சர்ச்சையிலிருந்த பண்டிதர்கள். பக்த மகாஜனங்கள், கிழவர்கள் என்று பலர் உதவிக்கு ஓடி வந்தனர்.

நீரில் குதிக்கப் போனவர்களைப் பார்த்துக் கிழவி எச்சரித்தாள். ஐயா பாவிகள் அவரைத் தொடக் கூடாது. தொட்டால் என் கணவர் தொட்டவர் இருவர் உயிரும் போய்விடும். அவர் இல்லையேல் நானும் இறந்து போவேன். பாவமே இல்லாதவர்கள் அவரைக் காப்பாற்றுங்கள் என்றாள்.

முன்னால் வந்த கூட்டம் பின்னால் சிதறியது. பாவமே இல்லாதவர் யார் இருக்க முடியும்? பாவத்தோடு கிழவரைத் தொட்டுச் சாவதா? பல சாவுகளை ஏற்படுத்துவதா? கிழவி கதறிக் கதறி அழுதும் உதவ ஆள் இல்லை. திடீர் என்று படிப்பறிவில்லாத பாமர வாலிபன் நீரில் பாய்ந்து கிழவரை மீட்டுக் கரையில் கொண்டு வந்து போட்டான். பலரது பார்வையில் ஆச்சரியம் படம் எழுதியது. பண்டிதர் ஒருவர் படபடத்தார். தம்பி... நீ பாவமே செய்ததில்லையா? கரகரத்த குரலில் அவன் பேசினான். நிறைய நிறைய பாவங்கள் செய்திருக்கிறேன்.

பாவிகள் கிழவரைத் தொடக்கூடாது என்றாளே கிழவி. அதனால் தானே நாங்கள் தயங்கினோம். அவள் சொன்னது பொய்யா? பண்டிதர் கேள்வி கேட்டார்.

ஐயா... நான் பாவிதான் என்றாலும் கிழவி கதறிய போது என்னால் தாங்க முடியவில்லை. அது மட்டுமல்ல ... கங்கையில் குளித்தால் இந்தப் புனித நீர் பட்டால் பாவங்கள் யாவும் போய் விடும் என்று கொஞ்சம் முன்னால் நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் பாவங்கள் செய்திருந்தாலும் கங்கையில் இறங்கியதும் அவை போய் விட்டனவே. அதன்பிறகு அவரைத் தொட்டாலும் எனக்கும் அவருக்கும் எதுவும் ஆகாது என்று தோன்றியது. அதனால் குதித்துக் காப்பாற்றினேன் என்றான். அடுத்த நொடி கிழவனையும் கிழவியையும் காணவில்லை.

கைலைமலை முழுவதும் அவர்கள் கலகலத்த சிரிப்பு எதிரொலித்தது. பார்த்தாயா தேவி... கங்கையில் குளித்தால் பாவம் போகும் என்று பலர் பேசிக் கொண்டாலும் நம்பினவன் இலட்சத்தில் ஒருவன் தான். இப்போது தெரிகிறதா? கைலாயத்தில் கூட்டம் எப்படிக் குறைகின்றது என்று! புன்சிரிப்போடு பேசி முடித்தார் சிவபெருமான்.

நம்பிக்கை முழுமையாக இருக்க வேண்டும். அரை குறை நம்பிக்கைகள் ஆபத்தானவை. ராம நாமத்தை அனுமன் நம்பிய அளவு சுக்ரீவன் நம்பவில்லை. அனுமன் பெற்ற நிலையைச் சுக்ரீவனால் பக்தி உலகில் அடைய முடியவில்லை.

மகாமகக் குளத்தில் மற்றவர்களை குளிக்க விடாமல் குளித்து விட்டால் அது புண்ணியமா? இல்லை. சர்வேசநாயகனை சர்வேஸ்வரனைத் தியானம் பண்ணிக் கொண்டு வேறு சிந்தனை இன்றி சகல நதிகளும் புண்ணிய தீர்த்தங்களும் இந்தக் குளத்தில் இந்த வேளையில் இருப்பது சத்யம் என்ற தீர்மானத்தோடு குளித்தவர்கள் பாக்யவான்கள். அந்த உணர்வு- அனுபவம்-பாவனை இல்லாமல் குளத்தில் நின்றிருந்தால் குளோரின் எரிச்சல் தான் மிச்சம்! திருநாவுக்கரசர் என்ற ஞானி இதைத் தீர்மானம் போட்டு அறிவிக்கின்றார். கங்கை ஆடில் என் காவிரி ஆடில் என்றார். நீ எங்கே குளித்தால் தான் என்ன? எங்கும் இறைவன் என்ற அனுபவம் வரவில்லை உன் வழிபாடு வேஷம் என்று முழங்கினார்.

தண்ணீரில் உடல் அழுக்கானதைத் தானே நீக்கும். அது எப்படி உள்ள அழுக்கை நீக்க முடியும் என்ற கேள்விக்கு வள்ளுவர் புறத் தூய்மை நீரான் அமையும். அகத் தூய்மை வாய்மையால் காணப்படும் என்று நீராட்டம் பாவ நீக்கம் தொடர்பைக் கோடு போட்டுக் காட்டினார். தீது நீங்கக் கடலாடியும் மாசு போகப் புனல் படிந்தும் என்பது பட்டினப்பாலை. கடவுளையே நீராக எண்ணி நீர் வண்ணன் என்பது வைணவர் வாழ்வியல்.

தண்ணீருக்கும் கடவுளுக்கும் நிறையவே ஒற்றுமை உண்டு. இறைவனுக்கும் சரி தண்ணீருக்கும் சரி வடிவம் இது தான் என்று சொல்லமுடியாது. எந்த வடிவத்தில் வைக்கின்றோமோ அந்த வடிவம் பெறும். மேல் இருந்து கீழ் இறங்கும் (பள்ளமடை) இயல்பு-கருணை பொதுவானது. குளிர்ந்திருப்பது பொதுக்குணம். அழுக்கை நீக்குவது பொதுப்பணி. இன்னும் நிறைய சொல்லலாம். அதனால் தான் பெருமாள் கோவிலில் தீர்த்தமே பிரசாதம் ஆனது. ஆர்த்துப் பிறவி துயர் கெட ஆர்த்தாடும் தீர்த்தனன் என்று சிவபெருமானை தீர்த்தனன் என்கிறார் மாணிக்கவாசகர்.



# இலங்கை அரசுக்குள் குழப்பம்



## அமெரிக்க நகர்வால்

மனித உரிமைகள் பேரவைக்கு ஐ.தே.க விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்வதாகவும் இதனால் இலங்கை ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் மைத்திரிக்கு ஆதரவான குழுவினர் கருதுகின்றனர்.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் மொழியாக்கம் செய்துள்ளார் நித்திய பாரதி.**

அண்மையில் ஜெனீவா மற்றும் நியூயோர்க்கில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பாக கொழும்பின் உயர் அரசாங்க அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறுபட்ட கருத்துக்களும் எண்ணங்களும் நிலவுகின்றன.

ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் அண்மையில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், அமெரிக்க மூத்த உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இவர் இலங்கையில் தங்கியிருந்த நாட்களில், அமெரிக்கா தலைமையில் முன்வைக்கப்படும் தீர்மானமானது இலங்கைக்கு ஆதரவாகக் காணப்படும் என அறிவித்திருந்தார்.

அந்தவேளையில் நிஷா பிஸ்வால் கொழும்பிற்குச் சார்பாக முன்வைத்த கருத்தானது பலராலும் பேசப்பட்டது. இதுவே இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பில் இதன்மீது கலப்பு அனைத்துலக நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்கப்படுவதற்கு அழுத்தம் கொடுத்திருந்தது.

எது எவ்வாறெனினும், பேரவையின் அறிக்கை மற்றும் அமெரிக்காவின் தீர்மான வரைபு தொடர்பில் கொழும்பிலுள்ள இலங்கை அரசாங்க உயர்மட்டம் திருப்தியடையவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

அமெரிக்காவானது பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கையைத் தான் ஆதரிப்பேன் என வாக்குறுதி வழங்கிய அதே வேளையில் இதற்கு முரணாக இலங்கையின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவரிடம் தனது கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார்..

அதாவது மனித உரிமைகள் விடயத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பேன் என அமெரிக்கா தெரிவித்துள்ள போதிலும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிதிசார் உதவிகளை அமெரிக்கா வழங்கவில்லை என குறித்த உயர் மட்ட அதிகாரி தெரிவித்திருந்தார். 'இலங்கையின் அரசாங்கமானது மாற்றமுற்ற பின்னர் அமெரிக்கா எமக்கு உதவும் என நாம் எதிர்பார்த்த போதிலும் இதுவரை அமெரிக்காவிடமிருந்து எந்தவொரு நேர்மறையான ஆதரவுகளையும் நாம் பெறவில்லை' என அவ் அதிகாரி சுட்டிக்காட்டியிருந்தார்.



இக்கருத்தானது அமெரிக்காவை விட இலங்கைக்கு சீனா ஆதரவளிப்பதைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

அதாவது அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு ஆதரவளிப்பதில் பின்நிற்கும் அதேவேளையில், இவை இலங்கை மீதான மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக பேசுவதில் மட்டுமே குறியாக உள்ளன என்பதே இலங்கையின் உயர்மட்டத்தின் மத்தியில் நிலவும் கருத்து எனக் கூறப்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கையின் வரவேற்பை சீனாவே பெற்றுக்கொள்ளும். இந்தச் சூழலை சீனா தனக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டால், மகிந்தவின் கோட்பாடுகள் சரியானதே என இலங்கை வாழ் மக்கள் தெரிவிப்பார்கள்.

2001 இல் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமானது அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக செயற்பட்டது. இதன்மூலமே விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அத்துடன் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தை வழங்கத் திட்டமிடப்பட்டதுடன், இலங்கையின் சமாதான நகர்வுகளில் மேற்குலகம் சார்பாக இதன் அனுசரணையாளராக நோர்வே செயற்பட்டது.

அந்த நேரம் மிதவாதக் கோட்பாட்டைப் பின்பற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜேவிபி போன்றன இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டில் மேற்குலகிற்கு எதிராக அழுத்தத்தை வழங்கின. இதுவே ரணிலினுடைய அரசாங்கம் தனது ஆதரவை இழக்கக் காரணமாகியது.

இறுதியாக, அனைத்துலக நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்பு முற்பட்ட ரணிலினுடைய அரசாங்கம் தோல்வியுற்றது. இதுவே மகிந்த ஆதரவுக் குழுக்கள் அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்கு வாய்ப்பளித்தது.

இவ்வாறானதொரு சூழல் தற்போது மீண்டும் எழுவதற்கான சமிக்கைகள் தோன்றியுள்ளன. மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்ட அறிக்கையானது மைத்திரி-ரணில் அரசாங்கத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

மகிந்தவின் ஆதரவாளர்கள் கடந்த ஓகஸ்ட்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் தற்போது பேரவையின் அறிக்கையுடன் மீண்டும் தமது ஆதரவை வலுப்படுத்துவதற்கான பரப்புரையை மேற்கொள்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையிலுள்ள வரைபுகளைப் பின்பற்றி ரணில்-மைத்திரி அரசாங்கம் செயற்பட்டால், 2001 இல் ரணில் அரசாங்கத்திற்கு நடந்த கதியே ஏற்படும். தற்போது இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தியை எட்டவில்லை. பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில், பேரவையின் அறிக்கையை இலங்கையின் தற்போதைய அரசாங்கம் பின்பற்றிச் செயற்பட்டால் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதற்குச் சமமாகிவிடும்.

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரல் என்பது தெளிவற்றதாக உள்ளது. போர்க் குற்றங்களைக் காரணங்காட்டி குறித்த நாடுகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதே அமெரிக்காவின் வழமை என ஆபிரிக்க நாடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்காவின் இத்தகைய மனப்பாங்கால் இந்த நாடுகள் பல்வேறு சிக்கல் களைச் சந்திக்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடனான இலங்கையின் தொடர்பாடல் முறைமையின் வடிவம் தொடர்பில் ஐ.தே.க மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கிடையில் பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

மனித உரிமைகள் பேரவைக்கு ஐ.தே.க விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்வதாகவும் இதனால் இலங்கை ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் மைத்திரிக்கு ஆதரவான குழுவினர் கருதுகின்றனர்.

அமெரிக்காவைப் போல ஐக்கிய தேசியக் கட்சியும் உலகத் தமிழர் பேரவை போன்ற புலம்பெயர் தமிழர் அமைப்புக்களைப் பாதுகாக்க முயற்சிப்பதாகவும் நம்பப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இத்தகைய நிலையானது மைத்திரி அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளியள்ளதாகவும் மைத்திரி ஆதரவு சக்திகள் கருதுகினறன.

புதிய அரசாங்கம் ஒரு நாட்டைப் பொறுப்பெடுக்கும் போது அமெரிக்காவானது அதன் நிலைப்பாட்டை மாற்றியமைக்காமல் இருக்க முடியாது என்பது உண்மை.

இலங்கையின் புதிய அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பெடுத்தவுடன் அதற்கு நிதிசார் ஆதரவுகளை முதலில் வழங்கிவிட்டு அதன் பின்னர் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் விடயங்களை பேசியிருந்தால் இது அறிவார்ந்தமான செயற்பாடாக அமைந்திருக்கும்.

பசியுடன் இருக்கும் மக்களுக்கு போதனைகள் வழங்கப்படக் கூடாது என்பதே புத்தர் பெருமானின் உபதேசமாகும்.

பசியுடன் வாழும் மக்களுக்கு உணவு வழங்கிய பின்னரே அவர்கள் போதிக்கப்பட வேண்டும் என புத்த பெருமான் உபதேசித்துள்ளார்

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# இதய சத்திர சிகிச்சைப் பிரிவு உடன் அமைக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

**இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சைப் பிரிவு மிக விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலை இதய சிகிச்சை நிபுணர் பூ.லக்ஷ்மன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்திலேயே ஒரேயொரு இதய சிகிச்சைப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலையிலேயே காணப்படுகின்றது.

கடந்த 1963 ஆம் ஆணடு தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரை யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சைப் பிரிவு இயங்கி வந்தது.

1984 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக இதய சத்திர சிகிச்சை நிபுணர்கள் வெளியேறியதுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சைகள் நடைபெறவில்லை. அன்றில் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை இதய சத்திர சிகிச்சைக்காகவும் மேலதிக பரிசோதனைக்காகவும் பல சிரமத்தின் மத்தியில் தென்பகுதியை நோக்கியே மக்கள் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது.

இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் 2005 ஆம் ஆண்டு வைத்தியர் ஜி.ஆர். ஹன்டியின் ஞாபகார்த்தமாக (பிரத்தியேக) இதய சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு இதய சிகிச்சைப் பிரிவுக்கென 20 கட்டடங்கள் கொண்ட புதிய விடுதி ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இதய சிகிச்சைக்கான பரிசோதனைக் கூடம் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு பரிசோதனைகள், சிகிச்சைகள் என்பன தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. வடமாகாணத்தில் இருந்து மட்டுமல்லாமல் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் மக்கள் இதய நோய் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகின்றார்கள்.

ஆனால் இதய சத்திர சிகிச்சைக்காக சிறியவர்கள், பெரியவர்கள் கொழும்பு, கண்டி, காலி ஆகிய மாவட்டங்களுக்கே அனுப்ப வேண்டிய நிலை காணப்படுகின்றது. கொழும்பு, கண்டி, காலியில் இதய நோய்க்கென அரச தனியார் வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. இனி வடமாகாணத்திற்கு தான் இதய சத்திரசிகிச்சை பிரிவு மிக முக்கியமாக தேவைப்படுகின்றது.

அத்துடன் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள இதய சிகிச்சைப் பிரிவில் 3 வைத்திய நிபுணர்களே கடமையாற்றுகின்றனர். கனிஷ்ட நிலை வைத்தியர்கள் மற்றும் தாதியர் பற்றாக்குறை காணப்படுவதால் மக்களுக்கான சேவையை விரிபுபடுத்த முடியாமல் இருக்கின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சை பிரிவை ஆரம்பிப்பதற்கு அனைத்து தரப்பினரும் முன்வந்தால் மட்டுமே வெகுவிரைவில் ஆரம்பிக்க முடியும்.

இதய சத்திர சிகிச்சை நிபுணர்கள் யாழ். மாவட்டத்திறகு வருகை தந்து சேவையை வழங்க தயாராக உள்ள நிலையிலும் உட்கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்படாத காரணத்தால் இங்கு இதய சத்திரசிகிச்சையை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது.


எமது மக்களுக்கு தரமானதும் திருப்திகரமானதுமான சேவையை வழங்க யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சை பிரிவை ஆரம்பிப்பதற்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 1110 | 120 |
| தக்காளி | 120 | 120 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 |
| கோவா | 70 | 30 | 70 | 60 |
| கரட் | 100 | 60 | 60-140 | 70 |
| பூசணி | 40 | 50 | 40 | 40 |
| புடோல் | 50 | 50 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 120 | 50-100 | 80 |
| பெரிய வெங்காயம் | 110 | 140 | 80 | 120 |
| பாகற்காய் | 120 | 140 | — | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 50 | 50 |
| போஞ்சி | 160 | 200 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | — | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 40 | 20 |
| தேசிக்காய் | 240 | 300 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35-60 | 50 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | — | 40 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 120 | 120 |
| முள்ளங்கி | 50 | 40 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 515


அனுஜன்



சஜிதா




காந்தன்



அபி



நிதுர்ஷா



பிரதாப்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ரகசியங்களை வெளியிடும் வெளிநாட்டு அதிகாரிகள்

**வெளிநாட்டு இராஜதந்திர சேவையில் ஈடுபட்டிருக்கும் நபர்கள் ஊடாக தற்போதைய பங்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் வெளியாகிக் கொண்டிருப்பதாக அரசாங்கத் திற்குள் தீவிர சந்தேகம் உருவாகியுள்ளது.**

இலங்கை தொடர்பில் ஜெனீவா பிரேரணை சமர்ப்பித்தல், அதற்கு முகம் கொடுப்பது மற்றும் சர்வதேச நாடுகளுடன் இணக்கப்பாட்டிற்று வருவது தொடரபில் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் வெளிநாட்டு சேவை முக்கியஸ்தர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அக்கலந்துரையாடலின் பாதுகாக்கப்பட வேண்டிய விடயங்கள் இராஜதந்திர அதிகாரிகளினால் ஊடகங்களில் வெளியாகியுள்ளதனை அரசாங்கம் யூகிக்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமையின் காரணமாக எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள இவ்வாறான கலந்துரையாடல்களுக்கு இராஜதந்திர சேவையில் ஈடுபட்டிருக்கும் நபர்களை இணைத்துக் கொள்வதனை தடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# கவனயீர்ப்புப் போராட்டம் நடத்த 3 சங்கங்கள் இணைந்து முடிவு

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை முகாமையாளருக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் உள்ள 3 தொழிற்சங்கங்கள் இணைந்து பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை நடத்தவிருப்பதாக அறிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபையில் யாழ். மாவட்டத்தில் உள்ள தொழில் சங்கங்களான ஸ்ரீலங்கா சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம், தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம், தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகியன இணைந்து யாழ். சாலை முகாமையாளருக்கு எதிராக 10 கோரிக்கைகளை முன்வைத்து இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

நாளை மறுதினம் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் பயனாளிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலையில் நடைபெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பாக 3 தடவைகள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதற்குரிய தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. அதற்கான தீர்ப்பை வலியுறுத்தியும் மாதாந்த தொழிற் சங்க கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளை தன்னிச்சையாக செயற்படுத்தல், தொழில் சங்கங்களை சுதந்திரமாக இயங்க விடுவதில்லை, ஊழியர் சேமலாப நிதியை வழங்குவதில் தாமதம், பகுதிநேர வேலை தொடர்பிலான சரியான நேர அளவை குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட ஊழியர்களுக்கு சலுகைகள் முன்னுரிமைகள் வழங்குவதை நிறுத்த வேண்டும். மாத சம்பளத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் சரியான விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை உள்ளடக்கி இப்பாரிய கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

யாழ். சாலை முகாமையாளரின் செயற்பாடு தொடர்பாக பல தடவை பல அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதனால் இப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இக் கவனயீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் தமக்கு நீதி கோரியும் விரைவில் நடவடிக்கை எடுக்கக் கோரியும் மகஜர் ஒன்றினை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் ஊடாக போக்குவரத்து அமைச்சருக்கு கையளிக்கவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

# வடக்கில் மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 16.10.2015 வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கையின் மின்சார சபை அறிவித்துள்ளது.

அந்த வகையில் 12.10.2015 திங்கட்கிழமை யாழ. பிரதேசத்தில் அராலி வடக்கு, செட்டியார்மடம், வலிக்கன் தோட்டம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் உளுக்குளம் LB கொலனியிலும், மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்,

13.10.2015 செவ்வாய் கிழமை யாழ் பிரதேசத்தில் திருநேல்வேலி ஆடியபாதம் வீதி, பலாலி வீதி, பனிக்கர் லேன், கலாசாலை வீதி, பாற் பண்ணை, அரசடி அம்மன் வீதி, நாவலடிலேன, இராமலிங்கம் சந்தியிலிருந்து திரு நெல்வேலிச் சந்தி வரை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்த கிராமத்திலும், மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன்மடுவிலிருந்து புதுக்காமம் வரை, குருவில், வட்டக்கண்டல் ஆகிய பிரதேசங்களிலும்,


14.10.2015 புதன் கிழமை யாழ். பிரதேசத்தில் அச்செழு பிரதேசம், அராலி வடக்கு, செட்டியார்மடம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும்,

15.10.2015 வியாழன்க் கிழமை யாழ் பிரதேசத்தில் திருநேல்வேலி ஆடியபாதம் வீதி, பலாலி வீதி, பனிக்கர் லேன், கலாசாலை வீதி, பாற்பண்ணை, அரசடி அம்மன் வீதி, நாவலடி லேன், இராமலிங்கம் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்தி வரை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் தென்னியன்குளம், உயிலங்குளம், வற்றலைடைப்பு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் உளுக்குளம் LB கொலனியிலும், மன்னார் பிரதேசத்தில் முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொன்னாச்சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான், தம்பட்ட முசலி, மறிச்சசுக்கட்டி, கூளாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, விடத்தற் தீவு வைத்தியசாலை, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, பெரியமடு, சன்னார், வெள்ளாங்குளம், சன்னார் இராணுவ படை முகாம், CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும்,

16.10.2015 வெள்ளிக் கிழமை யாழ் பிரதேசத்தில் அராலி வடக்கு, செட்டியார் மடம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மடுக்கநத கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரிய கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கைக்கு ஐரோப்பியர் வருகை 08



•••இதனால் ஆத்திரம் அடைந்த போர்ச்சுக்கீசியர்கள், யாழ்ப்பாண அரசைக் கைப்பற்ற தக்க தருணத் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

முதலாம் சங்கிலிக்குப் பிறகு இரண்டாம் சங்கிலி (1615-1619) ஆட்சிக்கு வந்தான். அப்போது போர்ச்சுக்கீசியர்கள் உள்நாட்டு கலவரத்தைத் துண்டி விட்டனர். இதற்கு பிதுறு பொட்டன் கோன் என்ற போர்ச்சுக்கீசிய பாதிரியார் தலைமை தாங்கினார்.

### கடும் போர்

உள்நாட்டுக் கலவரத்தை ஒடுக்க இரண்டாவது சங்கிலி மன்னன் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டான். தனக்கு உதவி செய்யுமாறு, தமிழ் நாட்டில் இருந்த ரகுநாத நாயக்க மன்னனுக்குச் செய்தி அனுப்பினான். நாயக்க மன்னனும் வர்ணகுலத்தான் என்ற தளபதி தலைமையில் 5,000 வீரர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தான்.

அதே சமயம், மன்னன் சங்கிலியை முறியடிக்கப் போர்ச்சுக்கீசியர்கள் படை திரட்டினர். கோட்டையிலிருந்து மன்னாரை நோக்கி நூறு போர்ச்சுக்கீசிய வீரர்களும் சில நூறு சிங்களக் கூலிப் படையினரும் அனுப்பப்பட்டனர்.

இந்தக் கால கட்டத்தில் இந்தியாவில் உள்ள கோவா நகரம் போர்ச்சுக்கீசியர் வசம் இருந்தது. அங்கு சங்கிலியைக் கொண்டு சென்றனர்.

சங்கிலிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவன் தூக்கில் போடப்பட்டான்.

ஈழ மன்னன் முதன் முறையாக அந்நியர்களான போர்ச்சுக்கீசர்களிடம் தோற்றதுடன் மரணத்தையும் தழுவ நேரந்தது. அதற்குப் போர்ச்சுக்கீசியர்களுக்கு உதவியாக இருந்தவர்கள் சிங்களவர்கள். இலங்கையின் மத்திய பகுதி கிழக்குக் கடற்கரைப் பகுதி ஆகி யவை தவிர இலங்கையின் மற்ற பகுதிகள் போர்ச்சுக்கீசியர்கள் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.

ஆட்சிக்கு வந்த பிறகு அரசு அலுவலகங்களில் உயர் பதவிகளுக்குப் போர்ச்சுக்கீசியர்களும் தாழ்ந்த பதவிகளுக்குத் தமிழரும் சிங்களவர்களும் அமர்த்தப்பட்டனர்.

சிங்களவர்களையும் தமிழர்களையும் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். பொருளாதாரத்தில் பின் தங்கியிருந்தவர்களும் கீழ்ச்சாதி என்று கருதப்பட்டவர்



தூக்கு மேடையில் சங்கிலி மன்னன்

களும் கிறிஸ்தவ மதத்துக்கு மாறினர். போர்ச்சுக்கீசியர்கள், இலங்கையின் முன்னேற்றத்துக்காக எதுவும் செய்யவில்லை. மிளவு, லவங்கப் பட்டை, பாக்கு போன்றவற்றையும், யானைகளையும் தங்கள் நாட்டுக்குக் கொண்டு போயினர்.

அதே நேரத்தில் தரை வழியாகவும் 130 போர்ச்சுக்கீசிய இராணுவ வீரர்களும், 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்களக் கூலிப் படையினரும் யாழ்ப்பாணத்தை நோக்கி விரைந்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையே கடும் போர் நடந்தது. சிங்களக் கூலிப் படையின் உதவியுடன் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியைப் போர்ச்சுக்கீசியர் தோற்கடித்து கைது செய்தனர்.

### தூக்குத் தண்டனை

போர்ச்சுக்கீசியர்கள் ஆட்சி காலத்தை இலங்கையின் இருண்ட காலம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். (தொடரும்)

# அமெ. ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மீது ரஷ்ய விமானங்கள் அகோர குண்டுவீச்சு

## சிரியாவில் 300 போராளிகள் பலி

(பெய்ரூட்)

**சிரியாவில் செயற்பட்டுவரும் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மீது ரஷ்ய போர் விமானங்கள் நடத்திய அகோர குண்டுவீச்சில் 300 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். ரஷ்ய போர் விமானங்கள் நேற்று முன்தினம் 24 மணி நேரத்தில் 67 தடவைகள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன.**



ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காகவும், அவர்கள் கைப்பற்றிய பகுதிகளை மீட்பதற்காகவும் சிரியா நாட்டின் கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்க இராணுவம் போர் பயிற்சி மற்றும் உதவி அளித்து வருகிறது. இந்தநிலையில் சிரிய ஜனாதிபதி பசர் அல் ஆசாத்தின் வேண்டுகோளின்படி ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை சிரியாவில் ரஷ்யா நடத்தி வருகிறது.

ரஷ்யாவின் 13ஆவது டிவிஷன் போர்விமானங்கள் சிரியாவின் இத்லிப் மாகாணத்தில் உள்ள கான் ஷெய்குன் என்னும் கிராமத்தின் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. 24 மணி நேரத்தில் 67 முறை குண்டுகள் வீசப்பட்டன.

இந்த தாக்குதலில் அந்த கிராமத்தில் இருந்தவர்களில் 300 பேர் பலியாகினர். ஆனால், இவர்கள் அனைவரும் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய விமானங்கள் கான் ஷெய்குன் கிராமத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கருதி இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அதேநேரம், தீவிரவாதிகளை அழிக்கிறோம் என்கிற பெயரில் கிளர்ச்சியாளர்கள் மீது ரஷ்யா குண்டு வீசுவதாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்திருக்கிறது. (3-7)

# அமைதி ஊர்வலத்தில் தற்கொலைத் தாக்குதல்

## துருக்கியில் 95 பேர் கோரப் பலி

### 3 நாள் துக்கம் அனுஷ்டிப்பு

துருக்கி தலைநகர் அங்காராவில் அமைதி ஊர்வலத்தில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 95 பேர் பலியாகியுள்ளனர். 246 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் அங்கு 3 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. துருக்கியில் ஆட்சியாளர்களுக்கும் 'குர்ஷித்' அமைப்பினருக்கும் இடையே மோதல் இருந்து வருகிறது.

இதனால் குர்ஷித் அமைப்பினர் தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டு உயிரிழப்பு நிகழ்த்துகின்றனர். எனவே நாட்டில் அமைதி நிலவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அதன் ஒரு பகுதியாக அமைதிப் பேரணி தலைநகர் அங்காராவில் நேற்றுமுன்தினம் நடந்தது. அப்போது இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதனால் தள்ளுமுள்ளு மற்றும் சலசலப்பு ஏற்பட்டது. இதை பயன்படுத்திய தற்கொலை படை தீவிரவாதிகள் 2 பேர் கூட்டத்துக்குள் ஊடுருவி தங்கள் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்க செய்தனர்.

இதில் பலர் உடல் சிதறி தூக்கி வீசப்பட்டனர். பலர், கை. கால்களை இழந்து இரத்த வெள்ளத்தில் துடித்தனர். அதை தொடர்ந்து அப் பகுதியே போர்களம் போன்று காட்சியளித்தது என்று தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்கள் நாலாபுறமும் சிதறியோடினர்.

இந்த தற்கொலை படை தாக்குதலில் நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி 86 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 9 பேர் பலியானதையடுத்து பலி எண்ணிக்கை 95 ஆக உயர்ந்துள்ளது.

இத்தாக்குதலில் 246 பேர் காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 48 பேரின் நிலைமை மோசமாக உள்ளது. எனவே பலி எண்ணிக்கை உயரும் அபாயம் உள்ளது.



இந்த தாக்குதலுக்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், தற்கொலை தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் துருக்கியில் 3 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதற்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டது. (3-7)

# கடலில் செயற்கை தீவுகள் அமைப்பதில் சீனா தீவிரம்

எண்ணெய் வளமிக்க தென் சீனக் கடலின் பெரும்பகுதியை உரிமை கொண்டாடி வரும் சீனா. அங்கு செயற்கை தீவுகள் அமைத்து பல்வேறு கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் இந்த கடலோர பகுதிகளில் அமைந்திருக்கும் பிலிப்பைன்ஸ். வியட்நாம், மலேசியா உள்ளிட்ட பிற நாடுகள் சீனாவின் இந்த அத்துமீறலுக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

மேலும் இந்த விவகாரத்தில் அமெரிக்காவும் சீனாவின் செயலை கண்டித்து வருகிறது. இதனால் தென் சீனக்கடல் சர்ச்சை தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில் தென் சீனக் கடலில் அமைந்துள்ள ஸ்பிரேட்லி தீவுக் கூட்டத்தில் 2 கலங்கரை விளக்கங்களை சீனா அமைத்து வந்தது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் எதிர்ப்பையும் மீறி நடந்து வந்த இந்த பணிகள் அனைத்தும் தற்போது முடிவடைந்துள்ளன.

கடலோர பாதுகாப்பு. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற் காக இந்த கலங்கரை விளக்கங்கள் நிறுவப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்தது.

அந்த பிராந்திய நாடுகளுக்கு உதவுவதற்காகவும், கப்பல்களின் தடையற்ற பயணத்துக்காகவும் மேலும் அங்கு கட்டுமான பணிகளை மேற்கொள்ளப் போவதாகவும் சீனா கூறியுள்ளது. இதனால் தென் சீனக்கடல் பகுதியில் பதற்றம் அதிகரித்து உள்ளது. (3-7)



# சிறுவர் அரங்கம்

1262

## பசி அடங்கா குருவிக் குஞ்சு

முள்ளிப்பட்டி ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமத்தின் வடக்கு மூலை யில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அந்த மரத்தில் ஒரு குருவி கூடு கட்டி வசித்து வந்தது.

ஒருநாள் அந்தக் கூட்டிலிருந்து 'க்கீ க்கீ ' என்று சத்தம் வந்தது. அம்மா குருவி அடை காத்த முட்டையிலிருந்து மூன்று குருவிக் குஞ்சுகள் வெளியே வந்தன.

அம்மா குருவிக்கு ரொம்ப சந்தோ சம். இறக்கை படபடக்க குஞ்சுகளைச் சேர்த்து அணைத்துக் கொண்டது.

ஒரு குருவிக்குஞ்சு மட்டும் தலையை மேலே தூக்கி ஆட்டியது.

" உனக்குப் பசிக்கிதாடா செல்லம்" என்றது அம்மா குருவி.

"ஆமா" என்றது குருவிக்குஞ்சு.

உடனே, அம்மா குருவி பறந்து போய்க் கொஞ்சம் அரிசியைக் கொத் திக் கொண்டுவந்து கொடுத்தது. குருவி க்குஞ்சியும் லபக் லபக்கெனக் கொத் தித் தின்றது. மற்ற இரு குஞ்சுகளுக் கும் ஒரு அரிசிமணிகூட மிச்சம் வைக்கவில்லை.

இரண்டு நிமிடம்கூட ஆகியிருக்காது. திரும்பவும் தலையைத் தூக்கி ஆட்டியது அதே குருவிக்குஞ்சு.

"என்ன?" என்று கேட்டது அம்மா குருவி.

"எனக்கு இன்னும் பசிக்கிது" என்றது குரு விக்குஞ்சு.

அம்மா குருவி திரு ம்பவும் இரை தேடிப் பற ந்தது. எங்கெல்லாமோ இரை தேடி அலைந்தது. ஒன்றும் கிடைக்கவி ல்லை.கொஞ்ச நேரம் வரை பொறுத்திருந்து பார்த்தது குருவிக்குஞ்சு. அம்மா குருவி வரவே யில்லை.



"எனக்கு ரொம்பப் பசி க்கிது. நா இரை தேடப் போறேன்"என்றது பசித்த குருவிக்குஞ்சு.

"பொறு அம்மா வந் துடுவாங்க " என்றன மற்ற இரு குஞ்சுகளும்.

"நீங்க வராட்டிப் போங்க நா போறேன்" என்றபடி இறக்கையை அடித்துப்-பறக்க ஆரம் பித்தது குருவிக்குஞ்சு.

மனம்போன போக் கில் பறந்துபோனது. ஒரு இரையும் கண் ணில் படவில்லை. ஊரைக் கடந்து ரொம்ப தூரத்துக்கு வந்துவிட்டது குருவிக்குஞ்சு.

பக்கத்து ஊர் கோயிலில் பொங்கல் வைத்துவிட்டு, எல்லாரும் சாமி கும்பிடக் கோயிலுக்குள் போயிருந்தார் கள். பெரிய அண்டா, அண்டா நிறைய பொங் கச் சோறு. வெல்லம், ஏலக்காய் கலந்த கமகம வாசனை.

குருவிக்குஞ்சுக்கு அடிச்சது லக்கி. நல்ல பசி வேறு. கொஞ்சங்கொஞ் சமா சாப்பிட நேரமி ல்லை. அதற்குள் அவர் கள் வந்துவிட்டால் மாட் டிக் கொள்வோமே! என்ன செய்வது? அண்டா பக்கத்தில போயி 'ஆ' ன்னு பெரிசா வாயைத் திறந்தது. ஒரே முழுங்கு தான். அப்படியே அண்டா வோடு சேர்த்து மொத்தப் பொங்கலையும் முழுங் கிட்டு, அங்கிருந்து ஓடி வந்துவிட்டது.

"யப்பா இப்பத்தான் லேசா பசி அடங்கியிருக்கு!"ன்னு சொல்லிக் கொண்டே, தண்ணீர்க் குடிக்க குளக் கரைக்குப் போனது.



அண்டாவோட பொங்கலை முழுங் கியதால், குருவிக் குஞ்சுயோட வயிறு அண்டா மாதிரி பெரிசாகிப் போயிருந் தது. குளக்கரையில் தண்ணீர் எடுத் துக் கொண்டு குடத்தோடு ஒரு அக்கா வந் தாள். குருவியின் வயிற்றைப் பார் த்து, அடக்க முடியாமல் சிரித்தாள்.

(தொடரும்)



10.2015
12

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ கி.மு 539 - பாரசீகத்தின் மகா சைரசின் இரா ணுவம் பாபிலோனைப் பிடித்தது.
❖ 1492 - கொலம்பஸ் கரிபியனில் பஹாமாசை அடை ந்தார். அவர் கிழக்காசியாவைத் தான் அடை ந்ததாக எண்ணினார்.
❖ 1654 - நெதர்லாந்தில் டெல்ஃப்ட் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் நூற்றுக்கும் அதிகமா னோர் கொல்லப்பட்டனர்.
❖ 1785 - ரிச்சார்ட் ஜான்சன் என்பவர் தமிழ்நாட்டின் முதல் செய்திப்பத்திரிகையான மெட்ராஸ் கூரியர் என்ற வார இதழை வெளியிட்டார்.
❖ 1798 - இலங்கை பிரித்தானியாவின் அரச குடி யேற்ற நாடாக (King's Colony) அறிவிக் கப்பட்டது. பிரெடெரிக் நோர்த் ஆளுநராக ஆக்கப்பட்டார்.
❖ 1899 - தென்னாபிரிக்காவின் போவர் குடியரசு இங்கிலாந்து மீது போரை அறிவித்தது.
❖ 1918 - மினெசோட்டாவில் கிளம்பிய காட்டுத்தீயி னால் 453 பேர் கொல்லப்பட்டனர்.
❖ 1941 - உக்ரேனின் தினிப்ரோபெத்ரோவ்ஸ்க் நகரில் இந்நாளிலும் இதற்கு அடுத்த நாளிலும் நாசி ஜேர்மனியினர் 11,000 யூதர்களைக் கொன் றனர்.
❖ 1964 - சோவியத் ஒன்றியம் வஸ்கோத் 1 விண் கலத்தை விண்ணுக்கு ஏவியது. இதுவே பல விண்வெளி வீரர்களை விண்ணுக்குக் கொண்டு சென்ற முதலாவது கப்பலாகும்.
❖ 1968 - எக்குவடோரியல் கினி ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்றது.
❖ 1976 - மறைந்த மா சே துங்கின் இடத்திற்கு ஹுவா குவோஃபெங்க் என்பவரை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக நியமி ப்பதாக மக்கள் சீனக் குடியரசு அறிவித்தது.
❖ 1984 - ஐ.ஆர்.ஏ குண்டுவெடிப்பில் இருந்து மார் கரெட் தாட்சர் காயமெதுவும் அடையாமல் உயிர் தப்பினார்.
❖ 1993 - இந்தியாவின் தேசிய மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்டது.
❖ 1994 - மகெலன் விண்கலம் வீனஸ் கோளின் வளி மண்டலத்தை அடைந்ததை அடுத்து அதனு டனான தொடர்புகளை நாசா இழந்தது. இது அடுத்தடுத்த நாட்களில் எரிந்து சேதமடைந்தது.
❖ 1999 - பாகிஸ்தானில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியில் பெர்வேஸ் முஷாரஃப் நவாஸ் ஷெரீப்பை ஆட்சியில் இருந்து அகற்றி நாட்டின் அதிபரானார்.
❖ 1999 - உலகின் மக்கள் தொகை 6 பில்லியனை எட்டியது.
❖ 2001 - அமைதிக்கான நோபல் பரிசு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடு களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.
❖ 2005 - சீனாவின் இரண்டாவது ஆட்களுடன் கூடிய விண்கலம் சென்ஷோ 6 இரண்டு விண் வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.

### பிறப்புக்கள்

❖ 1891 - எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப் பாளர் (இ. 1956)
❖ 1921 - ஆர்ட் குலொக்கி, களிமண்ணால் செய்யப்படும் இயங்குபடங்களின் முன்னோடி (இ. 2010)
❖ 1918 - கே. கே. பிர்லா, இந்தியாவின் தொழிலதிபர் (இ. 2008)
❖ 1935 - லூசியானோ பாவ்ராட்டி, இத்தாலியப் பாடகர் (இ. 2007)

### இறப்புகள்

❖ 1605 - பேரரசர் அக்பர், முகலாயப் பேரரசின் மன் னர் (பி. 1542)
❖ 1870 - ராபர்ட் ஈ. லீ, அமெரிக்க இராணுவத் தளபதி யும் பொறியியலாளரும் (பி. 1807)
❖ 1924 - அனத்தோலி பிரான்ஸ், பிரெஞ்சு எழுத்தா ளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1844)
❖ 1965 - போல் ஹேர்மன் முல்லர், சுவிட்சர்லாந்து வேதி யியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1899)
❖ 1999 - வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடை ப்பந்து ஆட்டக்காரர் (பி. 1936)

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்த வும் தெரியவேண்டும். ~ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் களவு

வடபுலத்து மக்கள் நிம்மதியாக வாழக் கூடாது என்பதில் பல தரப்பினரும் கவனமாக இருப்பது தெரிகிறது.

ஒரு காலத்தில் பொலிஸாரின் நாட்டாமைத்த னங்கள்; ஊர் சார்ந்த சண்டியர்களின் அட்டகாசம்; இதன் பின்னர் ஆயுதப் போராட்டம்; ஒன்றுக்கு மேற் பட்ட இயக்கங்கள்; கூடவே படையினரின் பிரசன் னங்கள்; தொடர்ந்து இடப்பெயர்வுகள்; இறுதி யுத் தம்; பேரழிவு என்பதாக கடந்த நாற்பது ஆண்டு கால வரலாறு பதிவாகியுள்ளது.

2009ஆம் ஆண்டில் வன்னிப் பெருநிலப்பரப் பில் நடந்த யுத்தம் மிகப் பெரிய உயிரிழப்புக்களைத் தந்ததுடன், எங்கள் தமிழ்ப் பண்பாட்டின் அடித் தளங்கள் அனைத்தையும் வேரோடு பிடுங்கிக் கொண்டன.

இவற்றின் விளைவு கணவனை இழந்த இளம் பெண்கள் தங்கள் குடும்பச் சுமையைத் தாங்க வேண்டிய பரிதாபத்திற்கு ஆளாகினர்.

ஆயிரக் கணக்கான சிறுவர்கள் பெற்றோரைப் பறி கொடுத்து அநாதைகளாகினர்.

தத்தம் தாய் தந்தையரோடு கூடி வாழ்ந்த அந் தச் சிறுவர்கள் அநாதை இல்லங்களிலும் பராம ரிப்பு நிலையங்களிலும் வாழ வேண்டியதாயிற்று.

பெற்றவர்களின் இழப்பால் பிள்ளைகள் அன்பை யும் இழந்தனர். இந்தத் துயரங்கள் இந்த ஜென் மத்தில் முடிந்து போகாது என்ற நிலைமையில், எங் கள் தமிழர் தாயகத்தில் குழப்பங்களும் வன் முறைகளும் கலாசாரச் சீரழிவுகளும் ஏதோ ஒரு வகையில் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டே இருக் கின்றன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது கிறிஸ் பூதம் என்ற மிகப்பெரிய திகில் நாடகம் வடபுல மண்ணில் அரங்கேறியது. அப்போது பாது காப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷ கிறிஸ் பூதத்தை தமிழர்களின் ஒரு கற்பனைப் படைப்பாக விமர்சித்திருந்தார். எனினும் கிறிஸ் பூதத்தின் உருவாக்கம்; அதன் நோக்கம்; கிறிஸ் பூதங்கள் உருவாகிய இடங்கள்; அவை தங்கியி ருந்த இடங்கள் என அனைத்தையும் அவர் அறி யாதவருமல்ல.

எதுவாயினும் கிறிஸ் பூத நாடகம் வடபுலத்து மக்களின் உறக்கத்தை நீண்டகாலத்திற்கு ஆக்கிர மித்திருந்தது.

பாலியல் பலாத்காரங்கள், களவு என எல்லா மும் தலைவிரித்தாடின. இவை சற்றுத் தணிவு பெற்றபோது, வாள்வெட்டுக் கலாசாரம் மேலெழுந் தது. எந்நேரமும் எதுவும் நடக்கலாம் யாரையும் வாள் கொண்டு வெட்டலாம் என்ற நிலைமை இன்னமும் முற்றுப் பெறாமல் இருக்கையில்,

இப்போது களவு மீண்டும் விஸ்வரூபம் எடுத் துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் சில துறைக ளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒரு நிம்மதியான வாழ் வைத் தரும் என்று நினைத்த வேளை, இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ள களவின் காரணமாக மக் கள் உறக்கத்தை தியாகம் செய்ய வேண்டிய தாயிற்று.

எனவே இது தொடர்பில் பொலிஸார் தமது பணியை தீவிரமாக்குவதுடன் சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்தும் செயற்பாட்டை முழுமையாகச் செய் தாக வேண்டும். இல்லையேல் யாழ்ப்பாணம் உள்ளி ட்ட வடபுலத்தை வன்கலாசாரங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமித்துக் கொண்டே இருக்கும்.

# வடக்கு ஊடகவியலாளர்கள் படுகொலை குறித்து நீதியான விசாரணைக்கு வலியுறுத்தும் பிரேரணை

## வடக்கு அமர்வில் கொண்டு வரப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலா ளர்கள் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளப்படுவது போன்று வடக்கில் படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் நீதி யான விசாரணையொன்று மேற்கொள ளப்பட வேண்டும் என மத்திய அர சினை வலியுறுத்தும் பிரேரணை யொன்று வடக்கு மாகாண சபையின் எதிர்வரும் அமர்வில் கொண்டுவரப் படவுள்ளது.

தென்னிலங்கையில் கடத்தப்பட்டு காணாமல் போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொட ர்பில் ஆட்சியில் உள்ள புதிய அரசி னால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொட காணாமல்போன சம்பவம் தொடர்பில் பல முன்னேற்றகரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர் கடத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் என்பன கண்டறிய ப்பட்டுமுள்ளன.

ஆட்சியில் உள்ள புதிய அரசு இவ் வாறு தென்னிலங்கையில் கடத்தப்பட்டு காணாமல் போன மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவரும் அதே நேரம் வடக்கில் படுகொலை செய்யப்பட்ட ஊட கவியலாளர்கள் தொடர்பில் எவ்வித விசா ரணைகளும் மேற்கொள்ளப்படாமல் மௌனம் சாதித்தே வருகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே வடக் கிலும் தெற்கில் மேற்கொள்ளப்பட்டு வரு கின்ற விசாரணை போன்று முன்னெடு க்கப்பட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தி வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களான எஸ். பரஞ்சோதி மற்றும் கே.விந்தன் ஆகி யோரால் இணைப்பிரேரணை ஒன்று எதிர்வரும் ஐந்தாம் திகதி நடைபெறவு ள்ள மாகாண சபை அமர்வில் கொண்டு வரப்படவுள்ளது.

வடக்கில் யுத்தத்தின் முன்னரும் பின்னரும் பல ஊடகவியலாளர்கள் முன்னைய ஆட்சியாளர்களினாலும் ஒட் டுக்குழுக்களினாலும் கொல்லப்பட்டும் கடத்தப்பட்டும் உள்ளனர். இவற்றில் ஓரிரு சம்பவங்களின் குற்றவாளிகள் தொட ர்பில் சந்தேகங்கள் உள்ள போதிலும் அவற்றின் விசாரணைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளன.

இன்னும் சில கொலைச் சம்பவங் கள் தொடர்பிலான விசாரணை அறி க்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்ப ப்பட்டும் சட்டமா அதிபரினால் வழக்கு தொடுக்கப்படாமல் பாரபட்சம் காட்டப் பட்டு வருகின்றது. இனந்தெரியாத நப ர்களினதும் இராணுவத்தினரதும் தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாள ர்கள் தொடர்பிலும் இதுவரை எவரும் கைதாகவும் இல்லை. இவ்வாறு வட க்கு ஊடகவியலாளர்கள் மீதான வன் கொடுமைகள் இன்றும் தொடர்கின்றன.

இவற்றை மேற்கோள் காட்டியே மேற்படி தீர்மானம் கொண்டுவரப்பட வுள்ளதாக கூறியுள்ள வடமாகாண சபை உறுப்பினர் விந்தன், தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் தீர்மானத் தின் பிரதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் அனுப்பி வைக்கப்ப டவுள்ளதாக தெரிவித்தார். (செ-4)

# கைதான 54 தமிழக மீனவர்களையும் உடன்விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## பிரதமர் மோடிக்கு முதல்வர் ஜெயா கடிதம்

(சென்னை)

இலங்கையில் கைதுசெய்யப்பட்டு ள்ள 54 தமிழக மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என, தமிழக முதலமைச்சர் ஜெய லலிதா ஜெயராம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியு ள்ளார்.

குறித்த கடிதத்தில் கூறியிருப்பதா வது,

தென் தமிழ்நாட்டின் பாரம்பரிய கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண் டிருந்த ஏழை அப்பாவி மீனவர்கள் 5-வது முறையாக தொடர்ந்து மீண்டும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்க ப்பட்டுள்ளனர். அது குறித்து தங்களு க்கு மீண்டும் கடிதம் எழுதுகிறேன். சில வார இடைவெளியில் 5 தடவை இது போன்ற சம்பவம் நடந்துள்ளதை மன வேதனையுடன் தங்களிடம் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நாகபட்டினத்தை சேர்ந்த 19 மீனவர்கள் அவர்களது 2 படகுகளில் மீன்பிடித்து கொண்டிருந்த போது நேற்றுமுன்தினம் அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதன்மூலம் இதுவரை 54 மீனவ ர்கள் இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மேலும் 34 படகுகளும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள் ளது. எனவே இலங்கை அரசின் பிடி யில் சிக்கி தவிக்கும் மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைவில் மீட்டு தரும்படி தங்களுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

கடந்த 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் சட்டத்துக்கு புறம்பாக ஏற்பட்ட இந்திய, இலங்கை ஒப்பந்தம் மற்றும் கச்சதீவை விட்டுக் கொடுத் தது போன்றவையே பிரச்சினைக்கு முக் கிய காரணம் என்பதை தங்களின் கவ னத்துக்கு மீண்டும் கொண்டுவருகி றேன்.

வரலாற்று சிறப்பு மிக்க பாரம்பரி யம்மிக்க பாக்ஜலசந்தி பகுதியில் நமது மீனவர்களின் அமைதியான முறை யில் மீன்பிடிக்கும் உரிமை மறுக்கப்படு கிறது. அவர்களின் உரிமை மறுக்கப்படு வதுடன் கைது செய்யப்படும் நமது மீன வர்கள் நீண்ட நாட்கள் இலங்கை சிறை யில் சட்டவிரோதமாக அடைக்கப்படுகிறா ர்கள்.

இலங்கை அரசின் நடவடிக்கை ளால் மீன்பிடி படகுகள் மற்றும் கருவி கள் நீண்ட நாட்களாக பயன்படுத்தப்ப டாமல் இருப்பதால் அவை பழுதடைந்து விடுகின்றன. அதனால் தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது என்பதை ஏற்கனவே தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வந்து இருக்கிறேன்.

இந்திய மீனவர்களின் பாரம்பரிய பாக்ஜலசந்தி பகுதியில் பாதுகாப்புடன் பாரம்பரிய மீன் பிடி உரிமைகளை திரும்ப பெற்றுத்தர வேண்டும். மீன வர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ் வாதாரத்தை தூதரக மட்டத்தில் தீர்க்க வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் பிடி த்து வைக்கப்பட்டுள்ள 54 தமிழக மீனவர்கள் மற்றும் 34 படகுகளை யும் உடனடியாக மீட்க வேண்டும். இதற்கு முக்கியத்துவம் கொடுத்து கால தாமதம் செய்யாமல் நடவடிக்கை எடு க்க வேண்டும் என கேட்டுக்கொள்கி றேன் என ஜெயலலிதா தனது கடிதத் தில் தெரிவித்துள்ளார். (செ-12)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை


## விடுதலைக்கான வழி
## (The Path of Freedom)



சூரிய ஒளியினால் சூடு பெற்றுக் கடலிலிருந்து ஆவி யாக மாறி மேகமாகி அது குளிர்ந்து எந்த இடத்தில் மழையாகப் பெய்தாலும் அந்த நீர், தனக்குப் பிறப்பி டமாகிய கடலை நாடியே ஓடுவது போல, இறை நிலை யிலிருந்து புறப்பட்டுப் பல தலைமுறைகளாக ஜீவன்களில் இயங்கி, மனிதனிடம் இறுதியாக வந்து இயங்கிக் கொண் டிருக்கும் சிற்றறிவு, முற்றறிவான இறைவனை நாடியே அலை கின்றது. அத்த கைய வளர்ச்சி நிலையில் உடல் தேவைக்கான பொருள், புலன் இன்பம் இவற்றில் ஈடுபடுகிறது. இங்கு தான் அறிவானது தான் போக வேண்டிய இடத்தை மறந்து, அடுத்தடுத்து தொடர்பு கொண்ட பொருட்கள், மக்கள், புலன் இன்பம் இவற்றோடு தொடர்பும், மேலும் பொருள்களும் இன்பமும் எளிதாக மேலும் மேலும் உழைக்காமலே கிடைக்கக்கூடிய வழிகளாகிய அதிகாரம், புகழ் இவற்றின் மீது நிறைவு பெறாத அவாவையும் பெருக்கிக் கொள்ளுகிறது.

எவ்வளவு தான் பொருளோ, புலன் இன்பமோ, புகழோ, அதிகாரமோ அமைந்தாலும் இன்னும் வேண்டும், இன்னும் உயர்வாக வேண்டும் என்ற உணர்ச்சி வயமான மன அலையில் இயங்குகிறது. இதனால் அளவு மீறியும், முறை மாறியும், ஞானேந்திரியங்களையும், கர்மேந்திரியங்களையும் பயன்படுத்த அவைகள் பழுதுபட்டு உடல் துன்பம், மன அமைதியின்மை, செயல் திறமிழத்தல், இதனால் சமுதாயத்தில் மதிப்பிழத்தல் ஆகிய குறைபாடுகளோடு வருந்திக் கொண்டே இருக்க வேண்டியதாகிறது. மெய்யுணர்வு பெற்ற குருவழியால் அறம் பயின்று இறைநிலை விளக்கமும் பெறும்போதுதான் தடம் மாறிய மன ஓட்டம் நேர்மையான இயக்கத்திற்கு வரும். துன்பத் தொடரிலிருந்து விடுதலை கிடைக்கும் வேறு எந்த வழியும் மனிதன் உணர்வதற்கு இல்லை.

# பருத்தித்துறை கழகங்களுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி







மார்சியல் தற்காப்புக் கலை நிறுவனத்தினால் சிஹான் வொனி றோபேட்டின் 2-வது வருடாந்த ஞாபகார்த்தமாக 04.10.2015 அன்று பருத்தித்துறையில் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட காரத்தே வெற்றிக்கேடய சுற்றுப் போட்டியில் எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தின் 8 மாணவர்கள் பங்கு பற்றி அதில் 13 பதக்கங்களை வென்றனர்.

ம.கண்ணாளன் வெண்கலம், கு.சுவேந்திரன் வெள்ளி மற்றும் வெண்கலம், ந.சுமன் 2 தங்கம், ஜெ.லதீப் 2 வெண்கலம், அ.நிக்சன் தங்கம் மற்றும் வெண்கலம், அ.டிலைக்சன் வெள்ளி, க.ஈழப்பிரியங்கன் வெண்கலம், ந.வைகரன் 2 வெள்ளி ஆகிய பதக்கங்களை வென்றுள்ளனர். (க)



# தொண்டைமானாறு ஒற்றுமையை வென்றது வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்

மைலோ கிண்ண உதைப்பந்தாட்ட தொடர் 2015 கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மைலோ நிறுவனத்தின் அனுசரணையில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக இந்த ஆண்டும் யாழ்.மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் நடைபெற்ற இரண்டாவது சுற்று போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி வைளயாட்டுக் கழகம் எதிர் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (க)



# மைலோ கிண்ண உதைபந்து வல்வை வி.க.வெற்றி



மைலோ கிண்ண உதைபந்தாட்ட தொடர் 2015 கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

மைலோ நிறுவனத்தின் அனுசரணையில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக இந்த ஆண்டும் யாழ்மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற முதல் போட்டியில் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் 1:0 என்ற கோல்கணக்கில் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (க)

# இன்றைய போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வருகின்ற அணிக்கு 7 வீரர்கள் பங்கு மற்றும் உதைபந்தாட்ட தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் காலிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக்ம் மோதவுள்ளது.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணி அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். (க)

# ஞானமுருகன் வி.கழகம் அரையிறுதிக்கு தகுதி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியினை எதிாத்து மயிலாங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

போட்டியின் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது. இதன்மூலம் அரை இறுதிக்குள் நுழைந்தது ஞானமுருகன் அணி. (க)

# முரளி கிண்ண கிரிக்கெட்





2015 நடப்பு முரளி கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொழும்பு சர்வதேச பாடசாலைகளின் இணைந்த அணி, வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி ஆகிய அணிகள் வெற்றியீட்டியுள்ளன.

இதன் போது சர்வதேச பாடசாலைகளின் இணைந்த அணியுடனான போட்டியில் கிளிநொச்சி முல்லைத்தீவு இணைந்த அணியின் அ.அஞ்சயனும் புனித அந்தோனியார் கல்லூரி அணியுடனான போட்டியில் ர.ரஜீவனும் ஆட்ட நாயகர்களாக தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இப் போட்டிகளில் அஞ்சயன் மொத்தம் 8 இலக்குகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (க-302)



கொத்மலையில் நேற்று நடைபெற்ற தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார். நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு திரும்பும்போது கொத்மலை அணைக்கட்டையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

## நிபந்தனையின்றி...

தலைநகர் லீமாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் என பெரு நாட்டிலிருந்து நிதியமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் அரசியலில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றத்தின் மூலம் சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

கடன் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நாணயநிதியம் எவ்வித நிபந்தனைகளையும் முன்வைக்க வில்லையென நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான கடன்களை பெற்றுக் கொள்வதன் மூலம் மக்களின் வரிச்சுமை அதிகரிக்கப்படும் என சிலர் குற்றஞ்சுமத்துவது நியாயமற்றது எனவும், அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல், கல்வி மற்றும் சுகாதார துறைகளை மேம்படுத்தல் மற்றும் பெண்களின் வாழ்வினை மேம்படுத்தல் ஆகியவற்றை மையப்படுத்தி உதவிகள் வழங்கப்படுவதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பெரு நாட்டின் தலைநகரான லீமாவில் ஆரம்பமான உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டின் போது அதன் பிரதானிகளுடன் நிதியமைச்சர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார். (செ-12)

## அரசியலமைப்பு மாற்ற...

மாற்றம் செய்வதற்காக, அப்போதைய நாடாளுமன்றம் அரசியல் அமைப்புச் சபையாக மாற்றப்பட்டு றோயல் கல்லூரி புதிய மண்டபத்தில் முதல் கூட்டம் நடைபெற்றது.

அதுபோன்று, நாடாளுமன்றிற்கு வெளியே வேறு ஓர் இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி அரசியல் அமைப்பில் திருத்தங்களைச் செய்ய யோசனைகள் முன்வைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விரைவில் இது குறித்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. (செ-12)

## வனாந்தரங்களின்...

வடைந்துள்ளது.

போர் இடம்பெற்ற காரணத்தினால் ஏராளமானும் காடுகள் அழியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள் ளார்.

கொத்மலை நீர் தேக்கத்தையும் ஜனாதிபதி நேற்று பார்வையிட்டிருநதார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இரு அமைச்சர்கள்...

குறித்து இதன்போது பேசப்பட்டுள்ளன.

சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் மலிக் சமரவிக்கிரம மற்றும் தெற்கு அபிவிருத்தித்துறை அமைச்சர் சாகல ரட்நாயக்க ஆகியோர் அண்மையில் இடம்பெற்ற கொன்சவேட்டிவ் கட்சியின் மாநாட்டில் பங்கேற்றனர்.

இதன்போதே அவர்கள் பிரித்தானிய பிரதமரை சந்தித்துள்ளனர்.

இதன் பின்னர் இலங்கையின் அமைச்சர்கள், பிரித்தானிய வெளியுறவுத்துறை செயலர் பிலிப் ஹாமன்ட், உள்நாட்டு செயலாளர் தெரேசா மே உட்பட்டவர்களை சந்தித்தனர். (செ-12)

### சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது

# அவன் கிரேட் சம்பவம் குறித்து குற்றம் சுமத்துவதில் பயனில்லை

அவன் கிரோட் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபர் மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை என மேலதிக சொலிசிட்டர் சோபித ராஜகருண தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் யுவான்ஜித் விஜேதிலக்க சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் சிலரும் நேற்று கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன் போது, சட்டமா அதிபர் சார்பில் கருத்து வெளியிட்ட போது ராஜகருணா இதனைத் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஆயுத சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது.

நிறுவனத்திற்கு ஆயுதங்களை வைத்திருக்க அப்போதைய பாதுகாப்பு அமைச்ச ரின் அனுமதி வழங்கப்பட்டமை சரியா என்பது குறித்து வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.

இந்த சம்பவம் குறித்து சட்ட மா அதிபர் தனியான தீர்மானம் எதனையும் எடுக்க வில்லை.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

பல்வேறு துறைகளில் நிலவும் தாமதம் சட்ட மா அதிபர் திணைக்களம் மீது குற்றச்சாட்டுக்கள் எழக் காரணமாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# ஆண்டு தோறும் 1000 சிறுவர்கள் திடீர் விபத்துக்களால் மரணம்

(கொழும்பு)

ஆண்டு தோறும் ஆயிரம் சிறுவர் சிறுமியர் திடீர் விபத்துக்களினால் உயிரிழப்பதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 600 முதல் 1000 வரையிலான சிறுவர் சிறுமியர் திடீர் விபத்துக்களினால் உயிரிழக்கின்றனர்.

இவ்வாறான திடீர் விபத்து மரணங்களுக்கு பெற்றோரின் கவனயீனமே பிரதான காரணமாகும்.

சிறுவர் சிறுமியர் பற்றி அதிகள வில் தற்போது பேசப்படுவதால் சிறுவர் சிறு மியர் பற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்த இது சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

பெற்றோர்-பாதுகாவலர் பிள்ளைகள் மீது பாசம் காட்டுவது மட்டும் போதுமானதல்ல அவர்களின் பாதுகாப்பு குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கரந்தெனிய குருந்துகஹா அனுருத்தகம ஆரம்ப பாடசாலையில் கற்றல் உபகரணங்கள் மற்றும் பாதணிகள் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## வான் தாக்குதலில் 22 தீவிரவாதிகள் பலி

பாகிஸ்தானின் வடக்கு வஸ்ரிஸ்தான் பகுதியில் அந்நாட்டு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வான்வெளி தாக்குதலின் போது 22 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

அதிகளவிலான பழங்குடியின மக்கள் வசித்து வரும் வஸ்ரிஸ்தான் பகுதியில் பெருமள வான தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்த வான்வெளி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இறுவத்தினரால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே குறித்த வான்வெளி தாக்குதல் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் பாகிஸ்தானின் வடக்கு வஸ்ரிஸ்தான் பகுதியில் அதிகளவான தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக எமக்கு தகவல் கிடைத்து. இதனைத்தொடர்ந்து எமது வான்படை இரு வேறு வான்வெளி தாக்குதல்களினை முன்னெடுத்திருந்தது.

இதன்போதே 22 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இதனை எமது பாதுகாப்பு படையினர் உறுதிப்படுத்தியுள்ளனர். இது போன்ற தாக்குதல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-12)

# மஞ்சள் கோடு இடப்படவில்லை

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியின் அல்வாய் கிழக்கு மடத் தடியில் மஞ்சள்கோடு இன்மையால் பாதசாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வாகனப் போக்குவரத்து அதிகமாக காணப்படும் குறித்த வீதியில் மஞ்சள் கோடு இடப்படாமையால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் என பலரும் பலதரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சிலவேளைகளில் இவ்விடத்தில் எதிர்பாராத விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன. வாகனப் போக்குவரத்து நெரிசல் காரணமாக பாதசாரிகள் வீதியைக் கடக்க முடியாது வீதியின் மறுபக்கத்தில் மிக நீண்ட நேரமாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறான பிரச்சினை தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது. எனவே அல்வாய் கிழக்கு மடத்தடி வீதிக்கு மஞ்சள் கோடு ஒன்றை இட்டு வீதிப்போக்குவரத்தை சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்குமாறு பாதசாரிகள் கேட்டுள்ளனர். (இ-5-60)

## கசிப்பு விற்பனை குடும்பஸ்தர் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரினால் நேற்றுக்காலை 9 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

4 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப குடும்பஸ்தர் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரஸ்தாப குடும்பஸ்தருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. (செ-3,60)

# யாழ்-கொழும்பு புகையிரத சேவை; இன்றிலிருந்து புதிய நேர அட்டவணை

(கொழும்பு)

புகையிரத திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான புகையிரத் சேவைகளில் இன்றிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண புகையிரத நிலைய அதிபர் மா.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் இருந்து அதிகாலை 5.30 மணிக்கு புறப்படும் உத்தரதேவி புகையிரதம் யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6.10க்கு புறப்பட்டு பி.ப 1.05 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடையும்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் இருந்து அதிகாலை காலை 6.25 மணிக்கு புறப்படும் யாழ்தேவி புகையிரதம் யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 7.10க்கு புறப்பட்டு பி.ப 4 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடையும்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் இருந்து பி.ப 1.15 மணிக்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் 1.45க்கு புறப்பட்டு இரவு 8மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடையும்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து இரவு 7 மணிக்கு புறப்படும் தபால் புகையிரதம் மறுநாள் அதிகாலை 4 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து மு.ப 10 மணிக்கு புறப்படும் மாத்தறை புகையிரதம் இரவு 9.40 மணிக்கு மாத்தறை புகையிரத நிலையத்தை சென்றடையும்

மேலும் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் அதிகாலை 5.10 க்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் அதிகாலை 5.45மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்டு முற்பகல் 11.50க்கு யாழ்ப்பாண புகையிரத நிலையத்தை சென்றடைந்து பிற்பகல் 12.15க்கு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை சென்றடையும்

கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தில் இருந்து காலை 6.25க்கு புறப்படும் யாழ்தேவி புகையிரதம் மு.ப 11.45 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்டு பிற்பகல் 1.10க்கு யாழ்பாண புகையிரத நிலையத்தை சென்றடையும். அங்கிருந்து பி.ப 2.35க்கு புறப்பட்டு பி.ப 3.15க்கு காங்கேசன்துறையை சென்றடையும்

கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தில் இருந்து மு.ப 11.50 க்கு புறப்படும் உத்திரதேவி புகையிரதம் பி.ப 4.25 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண புகையிரத நிலையத்தை சென்றடையும். அங்கிருந்து மாலை 6.15க்கு புறப்பட்டு மாலை 6.45க்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தில் இருந்து இரவு 8.30க்கு புறப்படும் தபால் புகையிரதம் அதிகாலை 2.10 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்டு அதிகாலை 5 மணிக்கு யாழ்பாண புகையிரத நிலையத்தை சென்றடையும். அங்கிருந்து அதிகாலை 5.10க்கு புறப்பட்டு அதிகாலை 6.05 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-9)

## பிள்ளையான் நேற்று கைது...

யில் பிள்ளையான் ஆஜராகியிருந் ததாக தமிழ் மக்கள் விடுதலைப்புலி களின் பொதுச் செயலாளரான பி.பிரசாந்தன் கூறினார்.

ஜோசப் பரராஜசிங்கம் படு கொலை தொடர்பில் ஏற்கெனவே கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி யின் முன்னாள் உறுப்பினர்களான பிரதீப் மாஸ்டர் எனப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா மற்றும் கஜன் மாமா எனப்படும் ரெங்க சாமி கனகநாயகம் ஆகியோர் கை தாகி விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத் தார் பிறப்பு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது தேவாலயத் திற்குள்ளேயே வைத்து அடையா ளந் தெரியாத துப்பாக்கிதாரிகளி னால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கிழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பில் பிளவு ஏற்பட்டிருந்த கால கட்டத்தில் இந்த படுகொலை சம்பவம் நடந்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் செல்வாக்கு மிக்கவராக கருதப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாணசபைக்கான முத லாவது தேர்தலில் போட்டி யிட்டு 2008- இல் முதலமைச்சராக தெரிவாகி 2012 வரை அந்தப் பதவியில் இருந்தார்.

2012 கிழக்கு மாகாண சபை தேர்தலில் இவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாணசபைக்கு தெரி வாகியிருந்த போதிலும் மாகாண அமைச்சரவையில் இடம்பெற வில்லை.

இந்தப் பின்னணியில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர்களில் ஒருவராக நிய மனம் பெற்றிருந்தார்.

கிழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளி தரன் தலைமையிலான அணி யினரால் ஆரம்பிக்கப்பட்டது தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு.

பின்னர் அந்த அமைப்புக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத்தொடர்ந்து கருணா அம்மான் ஒரு சாராருடன் விலகி அப்போது மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந் திர கட்சியில் இணைந்தமை குறிப் பிடத்தக்கது. (செ-12)

## புலிகளின் முகாம் வரைபடங்...

துச் சென்றிருந்த அலிசாகிர் மௌ லானா, அதுபற்றிய தகவல்களை 11 ஆண்டுகளின் பின் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வெளியிட்டுள் ளார்.

கருணாவின் செயற்பாடுகளில் மாற்றத்தை அவதானித்த போது, அதுபற்றித் தாம் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறி னேன். அதற்கு அவர், அவருக்காக கதவுகள் திறக்கப்பட்டிருப்பதாக பதி லளித்தார்.

இந்த விவகாரம் குறித்து, அமைச்சர் கரு ஜெயசூரிய, திலக் மாரப்பன, பாதுகாப்பு செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோரி டம் கலந்துரையாடினேன்.

கவனமாக கையாளுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர். ஒஸ்லோவில் நடந்த பேச்சுக்களின் பின்னர் வன்னி திரும்பிய கருணா, அங்கிருந்து மட்டக்களப்புக்குத் திரும்ப உலங்குவானூர்தி ஒன்றை ஒழுங்கு செய்து தருமாறு பாதுகாப் புச் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ விடம் தகவல் பரிமாறுமாறு கேட் டுக் கொண்டார்.

மேலும் பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவர், மட்டக்களப்பு திரும் பியதும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு எதையும் வைத்துக் கொள்ள வில்லை.

பின்னர், வெருகலில் இருந்து வந்து கடற்புலிகள் தாக்குதல் தொடுத் துள்ளதாகவும், தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கருணா கூறினார்.

நான் அதைப் புரிந்து கொண் டேன். போர் நிறுத்தக் கண்காணிப் பாளர்களுக்கு அதுபற்றி அறிவித் தேன்.

கருணாவை கொழும்புக்கு அழைத்துச் செல்ல ஒழுங்கு செய் தேன். அது ஆபத்தானது.

அப்போது ஆட்சி மாற்றம் ஏற் பட்டிருந்தது. நாம் அதிகாரத்தில் இருக்கவில்லை. எனினும் நாட்டுக் காக நான் அந்த ஆபத்தான காரி யத்தை மேற்கொண்டேன்.

கருணாவையும் அவரது குழு வினரையும் எனது வாகனத்தில் ஏற்றினேன். எனது பாதுகாவலர் கள் அவரைச் சோதனையிட்டனர். அவர் ஆயுதம் தரித்திருக்கவில்லை.

ஒரு பயணப் பெட்டியை மட்டும் வைத்திருந்தார். அதை திறந்து காட்டினார்.

அதில் முழுவதும், விடுதலைப் புலிகளின் முகாம்கள் பற்றிய வரை படங்கள் தான் இருந்தன.

கருணாவுடன்ஐந்து பேர்வந்தனர். தம்புள்ளவில் நாங்கள், இராப் போச னம் அருந்தினோம். நான் அவரை பாதுகாப்பாக ஜெய்க் ஹில்டன வரை அழைத்துச் சென்று விட்டேன் என அலிசாகிர் தெரிவித்தார். (செ-12)

## ஐ.நா பிரே...

என பிரேரணை ஒன்று முன்வைக கப்பட்டிருந்தது.

இதற்கு சில முக்கிய சர்வதேச நாடுகளும் ஆதரவு வழங்கியுள் ளன. இவ்வாறானதொரு சூழ்நிலை யில் உள்ளக விசாரணைகள் நீதி யானதும் சுயாதீனமானதுமான முறையில் முன்னெடுக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்தி ருந்தது.

இந்தநிலையிலேயே குறித்த பிரேரணை தொடர்பில் சட்டத்த ரணிகள் மத்தியில் கருத்துக்கணிப் பொன்றை நடத்துவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித் துள்ளது. (செ-12)

## பாதுகாப்பு...

2015ஆம் ஆண்டில், 47.6 பில்லியன் ரூபாய் கல்வி அமைச் சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், 2016இல், 185.9 பில்லி யன் ரூபாய் ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (செ-12)

## வனாந்தர...

மொத்த காடுகளின் செறிவினை நூற்றுக்கு முப்பத்து இரண்டு வீத மாக உயர்த்த நடவடிக்கை எடுக் கப்படும்.

காடுகளின் செறிவினை உயர்த்து வதற்கு அரசியல்வாதிகள் உள் ளிட்ட அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

தற்போது நாட்டின் மொத்த காடு களின் செறிவு 29 வீதமாக காணப் படுகின்றது. எனினும், அண் மைய ஆண்டுகளாக நாட்டின் காடுகளின் எண்ணிக்கை பாரியள வில் குறை 23ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய வீட்டுத்திட்ட பயனாளி...

எழுந்துள்ளன.

இது தொடர்பாக கிளிநொச்சியில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் பெண் ஒருவர் எழுத்து மூலம் முறையிட்டுள்ளதாக கூறப் படுகிறது. எனினும், இத்தகைய 30 முறைப்பாடுகள் கிடைத்துள்ள தாக அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

இந்த முறைப்பாடுகளை அடுத்து, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் துடன் இணைந்து இந்தியத் தூதரகம் விசாரணைகளை மேற்கொண் டுள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பங்காளிகளின் இத் தகைய செயற்பாடுகள் எதையும் இந்தியா பொறுத்துக் கொள்ளாது என்றும் இந்தியத் தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த விசாரணை யில் தமது அதிகாரிகள் தவறு செய் திருப்பது கண்டறியப்பட்டால், மேல திக சட்ட நடவடிக்கைக்காக பொலி சாரிடம் கையளிக்கப்படுவார்கள் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொடர்பாடல் மற்றும் மனிதாபிமான இராஜதந்திர மூத்த முகாமையாளர் மகேஸ் ஜோன்னி தெரிவித்துள்ளார்.

முழங்காவில் பகுதியில் இந்திய வீடமைப்புத்திட்ட உதவிக்கான அங்கீகாரத் தைப் பெறுவதற்கு இலங் கை செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் பாலியல் இலஞ் சம் கேட்டதாக, கணவனை இழந்த பெண் ஒருவர் செய்த முறைப் பாட்டை அடுத்தே இந்த விசாரணை கள் தொடங்கப்பட்டுள் ளன.

முழங்காவில் பகுதியில், 1800 வீடுகள் கட்டப்பட்டு வருவதுடன், இவற்றுக்குப் பொறுப்பாக, 16 திட்ட அதிகாரிகள் செஞ்சிலுவைச் சங் கத்தினால் பணிக்கு அமர்த்தப்பட் டுள்ளனர்.

இதற்கிடையே இந்திய வீட மைப்புத் திட்டத்துக்கு செஞ்சிலு வைச் சங்க அதிகாரிகள் பாலியல் இலஞ்சம் கேட்பதாக தமக்கு வாய் மொழியாகவும், எழுத்து மூலமாக வும். 30 க்கும் அதிகமான முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இவற்றில், 15 முறைப்பாடுகளை தாம் கொழும்பிலுள்ள தலைமை யகத்துக்கு அனுப்பியுள்ளதாகவும், கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க கிளைச் செயலர் தம்பு சேதுபதி தெரி வித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகள் கடந்த இரண்டு மாதங்களாக கிடைத்து வருவதாகவும், குறிப்பாக பெண் களிடம் இருந்தே கிடைத்து வரு வதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (செ-12)

## ஜெனிவா தீர்மானத்...

களை ஊக்குவித்தல் என்ற தலைப்பில், அமெரிக்கா உள்ளிட்ட நான்கு நாடுகளால், ஐ.நா மனித உரிமை கள் பேரவையில் கடந்த மாதம் தீர்மானம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

இந்த தீர்மானத்துக்கு இலங்கை உள்ளிட்ட 12 நாடு கள் இணை ஆதரவு வழங்கியிருந்தன.

இந்த நிலையில், இந்த தீர்மானம் வாக் கெடுப்புக்கு விடப்படா மல் கடந்த 1ஆம் திகதி ஒரு மனதாக நிறை வேற்றப்பட்டது. இதை யடுத்து இம்மாதம் 16 ஆம் திகதி வரை, இந்த தீர்மானத்துக்கு இணை ஆதரவு வழங்கமுடியும் என்று ஐ.நா மனித உரிமை கள் பேரவைச்செயல கம் அறிவித்திருந் தது.

இந்த நிலையில், மேலும் 26 நாடு கள், இணை அனு சரணை வழங்கு வதாக ஏற்கெனவே அறி வித்திருந்த நிலையில், இணை அனுசரணை நாடு களின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்தது.

இதனிடையே, நியூசிலாந்தும், இந்த இணை ஆதரவு நாடு களுடன் புதிதாக இணைந்துள்ளதை யடுத்து, தீர்மானத் துக்கு இணை ஆத ரவு வழங்கும் நாடு களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள் ளது. (செ-12)

**வாடகைக்குண்டு**

நாள், மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.

(Nishan Sunny, AXIO) (C-2441)

தொடர்புகளுக்கு 0774696695

**விற்பனைக்கு**

149, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள கடைக் கட்டிடத்துடன் காணி விற்பனைக்குண்டு. (2030)

தொடர்புகளுக்கு :- 0776165347

**காணி தேவை**

யாழ் மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்பு வெற்றுக்காணி நீண்டகால குத்தகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு 0776623824 (C-2437)

**அமெரிக்க லொத்தர் விசா**

55000 பேருக்கான வாய்ப்பு

கிளிநொச்சி 0768226241

யாழ்ப்பாணம் 0768226240

நெல்லியடி 0776699893

வல்வெட்டித்துறை 07766979..

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

(C-2439) அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள் V2 TRAVELS

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

வழங்கும்

**After AL What Next ?**

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற

பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?

உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

**Spoken English with Grammar** 1 ½ Months

100% பயிற்சி

சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க

100% வெற்றி

**Diploma In English** 2 ½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- ★ Excellent Teachers' Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
- ★ ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்

Spoken English with Grammar: ~~Rs.10'000~~ Rs.7'500

Diploma in English: ~~Rs.14'000~~ Rs.9'500

Batches Start On

13.10.2015 @ 9.00 am
14.10.2015 @ 9.00 am
15.10.2015 @ 2.00 pm
16.10.2015 @ 9.00 am
17.10.2015 @ 9.00 am

(C-2438) BCHS

No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)

Tel : 021-2224550, 0777222422,0776555677

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.